Registered as a News Paper
பக்கம் - 24
www.eezhanatham.com

# ஈழநாதம்

விலை: 16.00
வெள்ளிநாதம் Weekly
நாதம் - 16 | வெள்ளி - 50 | 03 - 09 பெப்ரவரி - 2006




## மகிந்தவின் கட்டுக்குள் அடங்காத இராணுவ + ஒட்டுக்குழுக்கள்

## வன்னியின் விரிந்த நிலப்பரப்பு

இளையோரை உருவாக்குவது பற்றிய ஆன்மீகம், இறையியல், அறிவியல், உளவியல், கருத்துக்கள் வெவ்வேறாக இருப்பினும் அனுபவத்தில் இளையோரை உருவாக்குவது உருக்கொடுப்பது நல்ல நண்பர்களே!

நிறையப்பேரை நண்பர்களாகப் பெற்று வாழ வேண்டும். நிறையப்பேருக்கு நண்பர்களாக இருக்க வேண்டும் என்ற ஏக்கம் இருப்பது இளையோரிடம் இயல்பாகக் காணப்படும் குணமாகும்.

சில இளையோர் தங்களுக்குப் புகழ்பெற்ற நண்பர்கள் இல்லையே என ஏங்குவதுண்டு. நண்பர்களிடம் அதிகம் எதிர்பார்ப்பவர்கள் உண்டு. நண்பர்களைக் குறைவாக எடைபோடுபவர்களும் உண்டு. நண்பர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் முனைப்பாக இருப்பதால் தங்கள் வசதியை மறந்துவிடுபவர்களும் உண்டு. ஆகவே அவர்களின் பாதுகாப்பற்ற நிலை நம்பிக்கையை ஏற்படுத்துகிறது. அவர்களின் தனிமை உண்மையான நட்பிற்கு வழி வகுக்கிறது.

நல்ல நண்பனின் முதல் அடையாளம் அன்பின் வழி பேசுவதும் பேசுவதை நிபந்தனையின்றி கேட்பதுவும் ஆகும்.

நண்பன் வேண்டுமென்று காயப்படுத்துகின்றாரா என்றும் பார்க்கவேண்டும்.

2. உண்மையான நண்பன் நான் கேட்பவை அனைத்தையும் செய்வான் என நினைப்பது தவறாகும். ஒரு உண்மையான நண்பன், நண்பன் கேட்பவை சரியானவையாக, நீதியானவையாக இருந்தால் மட்டுமே செய்வான். உதாரணமாக நண்பனுடைய குடிப்பழக்கத்தை மறைத்து அவன் புதுவாழ்வு பெறத் தடையாகப் பொய் சொல்லமாட்டான், நண்பன் என்பதற்காகத் தன் சொந்த விருப்பங்களைக் கூட தள்ளிப்போடத் தயங்கமாட்டான்.

3. உண்மையான நண்பன் எப்போதும் அருகில் இருப்பான் என்று நாம் நினைத்துக்கொள்ளக் கூடாது. ஒவ்வொரு நண்பனுக்கும் தேவைகள் அதிகம். தேவைப்படும் போது நண்பர்கள் அருகில் இருக்க முயல்வார்கள்.

4. உண்மையான நண்பன் எப்போதும் சரியானதை சொல்லிக்கொடுப்பான் என்பது தவறு ஆகும்.

நாம் மற்றவரை எப்படிக் கவனிக்க வேண்டும். நட்புக்காட்ட வேண்டும் எனக் கற்றுக் கொண்டிருக்கிறோம். சிறந்த நண்பர்கள் நிறைய (அதிக) நேரங்களில் எவற்றைப் பெறுகின்றார்கள்? நம்மை உட்சாகப்படுத்துகிற உறுதிப்படுத்துகிற நண்பர்கள் நம் அருகில் நெருக்கமாக இருக்க விரும்புகின்றோம்.



5. உண்மையான நண்பர்கள் தங்களால் முடிந்த அளவு ஒருவர் ஒருவருக்கு உதவி செய்வார்கள் என்பதுவே சரியானதாகும்.

உட்சாகப்படுத்துதல், ஏற்றுக் கொள்ளுதல் மனிதரில் (நண்பரில்) உள்ள சிறப்பானவற்றை வெளிக்கொணரும் உண்மையான நேர்மறையான தோழமை அழுத்தத்தை தருவார்கள் (Peer Preasure).

6. உண்மையான நண்பர்கள் ஏற்றுக்கொண்டு அறிந்துகொள்ள முயற்சி செய்வார்கள் என்பது சரியானது.

இயல்பான தவறுகளை

# சமுதாயத்தின்_சிற்பிகள்..!

எனவே அன்பைப்பற்றியும் நட்பைப்பற்றியும் ஒப்பிட்டுப்பார்ப்போம்.

01. அன்பு பொறுமையுள்ளது. நட்பு நண்பனை உருவாக்கிக்கொள்ள நேரம் தரும்.

02.அன்பு தற்புகழ்ச்சி கொள்ளாது. நட்பு மற்றவர்களின் நன்மதிப்பைப்பெற நண்பர்களை ஒன்று சேர்க்காமல் ஒவ்வொரு நண்பனையும் தனித் தன்மையோடு மதிக்கும்.

03.அன்பு இறுமாப்பு அடையாது. நட்பு புகழோடு இருப்பவர்களோடு மட்டுமன்றி அனைவரோடும் பழகி அதிக நண்பர்களை உருவாக்கும்.

04.அன்பு தன்னலத்தை நாடாது. நட்போ தன்னைப் பொருட்படுத்தாத நண்பனையும் காத்திருந்து ஏற்றுக்கொள்ளும்.

05.அன்பு அனைத்தையும் பொறுத்துக்கொள்ளும். நட்போ நண்பர்கள் தவறு செய்தால் மன்னித்து நண்பனாய் ஏற்றுக்கொள்ளும்.

நண்பர்களை தேர்ந்தெடுக்கும்போது பயத்தோடும் சந்தேகத்துடனும் செயற்பட ஆரம்பிக்கின்றோம். மற்றவர்கள் நம்மை விரும்பமாட்டார்கள் என்ற பயம் இளையோரிடம் அதிகம் உண்டு. நாம் நண்பர்கள் மேல் முகமலர்ச்சியுடன் அன்பை வைப்பதன் மூலம் அவர்களின் கவனம் அன்பு வைப்பவர்கள் மேல் மையப்படுகிறது. பாதுகாப்பற்ற தன்னம்பிக்கையை மறக்கச் செய்கிறது. நண்பர்கள் மற்றவர்களை மகிழ்ச்சிப்படுத்தித் தாங்களும் மகிழ்ச்சியாக இருக்க வழிகாட்டுகிறது.

**நட்பைப்பற்றிய மூட நம்பிக்கைகள்; முரண்பாடுகள்:-**

1. உண்மையான நண்பன் மனதைப் புண்படுத்த மாட்டான் என்று நினைத்தால் அது தவறு. எல்லா நண்பர்களும் மனிதர்களும் தவறக்கூடியவர்கள். ஆனால் நண்பர்கள் விடும் தவறை மன்னிப்பதும் பிரச்சினைகளைக் கலத்தாலோசிப்பதும் நட்பிற்கு அவசியமானதாகும்.

பெரிதுபடுத்தாது உரிய இடங்களில் சுட்டிக்காட்டி அன்பு செய்து நமது எண்ணங்களை, உணர்வுகளை, சிந்தனைகளை, கனவுகளை அறிந்துகொள்ள இயலும். நண்பர் களைப் புரிந்துகொள்வதற்காக ஏற்றுக்கொள்வார் கள். கூர்ந்து கேட்பார்கள்.

**ந.நிக்சன்**

7. நாம் நினைப்பதை எல்லாம் அறிவார்கள் என்று எண்ணக்கூடாது. ஒவ்வொருவரையும் நாம் அறிந்து வைத்திருக்கவேண்டும். இதில் எல்லா வகையான உறவுகளுமே பேசுவதன் வழியாகவும் கேட்பதன் வழியாகவும் நிலை பெறுகிறது. உண்மை நண்பர்கள் முகபாவனை, மொழி இவற்றின் வழி அறிந்து கொள்ள முயலுவார்கள்.

**நட்புக்குத் தடைகள்:-**

நட்பை உருவாக்குவது தொலைக்காட்சியில் சினிமாவில் பார்ப்பது போல் அவ்வளவு இலகுவானது அல்ல. சிலர் சமூகத்தில் கூச்சம் உள்ளவர்கள். உள்காயம் ஏற்பட்டுள்ளதால் எதிலும் ஈடுபாடு இல்லாத நிலை சந்தேக மனப்பான்மை உடையவர்கள். அதிகம் பேசுவார்கள். செய்தி இருக்காது. முன்பின் முரண்பாடான கருத்துக்களை கூறுபவர்கள். இந்தத் தடைகள் நட்பினை உருவாக்க இடையூறாக இருத்தலாகாது.

**நட்பைக் கட்டியெழுப்ப தக்க வைத்துக்கொள்ளவும்!**

அன்போடு கூடிய பார்வை முகமலர்ச்சியுடன் கூடிய புன்சிரிப்பு இவை ஆரம்ப நிலை. இந்த உறவு நிலையானதாக மாற அன்பான உரையாடல் அவசியமாகின்றது. உரையாடல் என்பது பொருள் நிறைந்த அர்த்தம் புரிவனவாக அமையவேண்டும். முற்கூட்டிய சிந்தனை வேண்டும். தொலை நோக்கிய பார்வை வேண்டும். ஏற்றுக்கொள்ளும் மனப் பக்குவம் வேண்டும். என்பவற்றுடன் நிலையான தொடர்பாடலைப் பேணி நிரந்தர நண்பர்களைப் பெற்று நிலையான வாழ்வு வாழ்வோம்.

## தீர்ப்புகள்

மக்களின் துக்கத்தில்
நம்பிக்கை வைத்துக்
கன்னமிட்டனர் கள்வர்.

விழித்திருந்த
காவல் நாய்கள்
கள்வரைக் கண்டதும்
துரத்திக் கடித்தன.

கடித்த நாய்கள்
சிறைச்சாலையில்
அடைக்கப்பட்டன.

சட்டம் சொன்னது;
'கடிப்பது பயங்கரவாதம்'.

ரகசியமாகக் கூடிப் பேசிய
சதிகாரர்களின் முகங்களை
வெளிச்சமிட்டுக்
காட்டின தீபங்கள்.
அம்பலப்படுத்திய தீபங்கள்
அணைக்கப்பட்டன.

சட்டம் சொன்னது;
'ரகசியங்களை அம்பலப்படுத்துவது
நாட்டின் பாதுகாப்புக்கு ஆபத்து'

புப்பூவாய் தேடிச்
சேகரித்த தேனை
எடுக்க வந்தனர்
குறவர்.

கூட்டைத் தொட்ட
குறவர்களைக்
கொட்டி விரட்டின தேனீக்கள்.

கொட்டிய தேனீக்கள்
கொல்லப்பட்டன.

சட்டம் சென்னது;
'கொட்டுவது வன்முறை'

— அப்துல் ரகுமான்

## அதுவரை

திருடப்பட்டவர்களே!
நாங்கள் இருக்கிறோம்
கவலைப்படாதீர்கள்
திருடர்களுக்கு
எந்த விலங்கு மாட்டுவதென்று
யோசித்துக் கொண்டிருக்கிறோம்
பொறுத்திருங்கள்.

சிறைப்பட்டவர்களே!
நாங்கள் இருக்கிறோம்
கவலைப்படாதீர்கள்
சுதந்திரத்திற்கு
சுப முகூர்த்த தினம்
பார்த்துக்கொண்டிருக்கிறோம்
பொறுத்திருங்கள்.

வீடுகள் பற்றி எரிய
வேதனைப்படுபவர்களே!
நாங்கள் இருக்கிறோம்
கவலைப்படாதீர்கள்
எந்த நீரால் அணைப்பதென்று
விவாதம் நடக்கிறது
பொறுத்திருங்கள்.

கண்ணீர் வடிப்பவர்களே!
நாங்கள் இருக்கிறோம்
கவலைப்படாதீர்கள்
எந்தக் கைக்குட்டையால் துடைப்பதென்று
சர்ச்சை நடந்து கொண்டிருக்கிறது
பொறுத்திருங்கள்.

அறுவை சிகிச்சைக்குச்
காத்திருப்பவர்களே!
நாங்கள் இருக்கிறோம்
கவலைப்படாதீர்கள்
எந்தக் கத்தியால் அறுப்பதென்று
தர்க்கம் நடந்து கொண்டிருக்கிறது
பொறுத்திருங்கள்.

# மகிந்தவின் கட்டுக்குள் அடங்காத இராணுவ + ஒட்டுக்குழுக்கள்

ஒருபுறம் சமாதான நகர்வுகளில் பெரும் ஆர்வத்துடன் இருப்பதாக பிரச்சாரப்படுத்திக்கொண்டு, ஜெனீவா பேச்சுவார்த்தைகளில் தீவிரம் காட்டுவதாகப் பாவனை செய்து வரும் இலங்கை அரசும், அதன் நிறைவேற்று அதிகார சனாதிபதியான மகிந்த ராஜபக்ஷவும் தமது உள் நோக்கங்களும், விடுதலைப்புலிகளை தமது அரசியல் சர்ப்பவியூகத்தினுள் சிக்க வைப்பதற்கான தந்திரோபாயங்களும், விடுதலைப்புலிகளின் துல்லியமானதும் தொலைநோக்குச் சிந்தனை கொண்டதுமான இராஜதந்திர மதிநுட்பத்துடன் கூடிய நகர்வுகளால் செயலற்றுப்போயுள்ள நிலையில் பெரும் குழப்பத்தினுள் இருப்பது வெளிப்படையான விடயமாகி விட்டது.

ஜெனீவாவில் பேச்சுக்களை முன்னெடுக்க மிக இயல்பாகச் சம்மதிக்கவும், எந்த விதமான இழுபறிநிலைக்கும் காலதாமதத்திற்கும் இடமளிக்காமல் உடனடியாகப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வதற்கான தமது குழுவினரின் பெயர்ப்பட்டியலை நோர்வே அனுசரணையாளர் மூலமாக தெரியப்படுத்தவும் விடுதலைப்புலிகள் தயாராக இருப்பார்கள் என அரசோ, சனாதிபதியோ ஒருபோதும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். இது புலிகள் மூலம் அவர்களுக்கு கிடைத்த முதலாவது அதிர்ச்சியாகும்.

பேச்சுக்களை மீள ஆரம்பிக்க நிபந்தனைகள் என எதனையும் விதிக்காமல் இயல்புநிலையினை ஏற்படுத்துதல் அவசியம் என்ற வேண்டுகோளை 'ஒரு அவசியம்' என்ற நியாயத்தொனியுடன் வலியுறுத்தியமையானது அரசால் முழுமையாகவோ, சனாதிபதியின் நிறைவேற்று அதிகார வலுவாலோ மிகச் சுலபமாக சாத்தியமாக்க முடியாத நிலையை உருவாக்கியுள்ளமையானது இரண்டாவது அதிர்ச்சியாகும்.

ஜெனீவாவில் நடத்தப்படும் பேச்சுக்களில் தற்போது நடைமுறையில் இருக்கும் போர்நிறுத்த உடன்பாட்டை மீளாய்வு செய்தல், அல்லது அதில் மாற்றங்களைச் செய்தல் என்ற ராஜபக்ஷவின் நிலைப்பாட்டை புறந்தள்ளிவிட்டு, அதனை முழுமையாக, நேர்மையாக நடைமுறைப்படுத்தி வலுப்படுத்துவது குறித்தே பேசப்படும் என்ற புலிகளின் முடிவை ஏற்கவேண்டிய நிலை ஏற்பட்டமை மூன்றாவது அதிர்ச்சியாகும்.

இலங்கையில், அல்லது ஆசிய நாடுகளில் ஒன்றில்தான் பேச்சுக்களை நடத்த வேண்டும் என்ற ஜே.வி.பியினர் ஒஸ்லோவையோ, அல்லது ஐரோப்பிய அல்லது மேற்குலக நாடுகளையோ, பேச்சுவார்த்தைகளை முதலில் நடத்துவதற்கான தேர்வாக முற்றாக நிராகரித்திருந்த நிலையில், ஜெனீவாவில் பேச்சுக்களை ஆரம்பிக்க விடுதலைப்புலிகள் சம்மதித்ததை அடுத்து மகிந்த ராஜபக்ஷவும் சம்மதிக்கவேண்டிய நிலை உருவானபோது 'நாங்கள் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில்தான் பேச்சை நடத்த விரும்பவில்லையேயொழிய ஜெனீவாவில் நடப்பதை ஏற்கிறோம்' எனச் சொல்லவேண்டிய சறுக்கல் நிலை ஏற்பட்டமையானது அரசுக்கு, குறிப்பாக ஜே.வி.பிக்கு கிடைத்த மற்றொரு அதிர்ச்சியாகும்.

சமாதானப்பேச்சுக்கள் நோர்வேயின் அனுசரணை, போர்நிறுத்த உடன்பாடுபோன்ற அனைத்தையும் பேரினவாத - பௌத்த மதவாத வெறியுடன் மூர்க்கத்தனமாக எதிர்த்து வரும் அரச ஆதரவுச் சக்தியான ஜாதிக ஹெலஉறுமயவிற்கு அரசின் இந்தநிலை மாற்றம் மிக அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது என்பதை அத்துரலிய ரத்னதேரரின் ஜெனீவாப் பேச்சுத் தொடர்பான கண்டன அறிக்கையே சான்றாகும்.

ஹெல உறுமயவின் கண்டன அறிக்கையும், 'தூதரகங்களின் நிகழ்ச்சி நிரலுக்கேற்ப செயற்படும் தலைவர் எனவும், அத்தகைய தலைவருக்கு தாம் முட்டுக்கொடுக்க தயாரில்லை'யெனவும் மகிந்தர் குறித்து அத்துரலிய ரத்னதேரரின் விமர்சனமும் சிங்கள ஆட்சித் தலைவருக்கு பெரும் அதிர்ச்சியையும் கவலையையும் கூடக் கொடுத்திருக்கும்.



ஜெனீவாவில் பேச்சுக்களை புலிகளுடன் நடத்த சம்மதித்த மகிந்தர், பேச்சுக்கள் முதலில் போர்நிறுத்த உடன்பாட்டை அமுல் செய்வதுகுறித்ததாகவே இருக்க வேண்டுமென்ற அவர்களின் கோரிக்கையை நிராகரிக்காது விட்டமையால் அதனால் பாதிப்புக்குள்ளாகக் கூடிய படைத்தரப்பினரதும், ஒட்டுப்படைக் கும்பல்களினதும் அதிருப்திக்கும், எரிச்சலுக்கும் உள்ளாக நேர்ந்துள்ளதுடன் அவரது கட்டளைகளுக்கு கீழ்ப்படியாத, கட்டுப்பாடற்ற தன்மையுடன் அவருக்கும் அவரது ஆட்சிக்கும் நெருக்கடிகளை ஏற்படுத்தும் வகையில் தொடர்ந்தும் 'வடக்கு-கிழக்குப் பகுதிகளில் தமிழ் மக்கள் மீதான வன்முறையை தீவிரமாக்கி வருவதுடன், நிழல் யுத்தத்தை கடுமையாக்க முயன்று வருவதானதும் சனாதிபதிக்கு மௌன அதிர்ச்சியை உண்டு பண்ணியுள்ளது.

சாத்தான்களின் அபிலாஷைகளுக்கு கட்டுப்பட்டு பேயாட்சியொன்றை நடத்தவேண்டிய அவசிய நிர்ப்பந்தம் ஒருபுறமும் சர்வதேச அழுத்தங்களுக்கு ஆட்பட்டு, புலிகளுடன் பேசவேண்டிய நிர்ப்பந்தம் ஒருபுறமென தள்ளாடும் மகிந்த இராஜபக்ஷ, விடுதலைப் புலிகளின் மதிநுட்பம் வாய்ந்த இராஜதந்திர வியூகங்களில் இருந்து விலகவோ, தப்பவோ முடியாத நிலையில் தனது ஆட்சியின் ஆரம்பத்திலேயே ஏற்படும் என்பதை கனவில்கூட கண்டிருக்கமாட்டார். இதுவே அவரை அதிர்ச்சியின் உச்சத்தில் கொண்டுபோய்த் தள்ளியுள்ள விடயமுமாகும்.

இதேவேளை, ஐ.தே.கட்சியில் பிளவுகளை ஏற்படுத்தி அக்கட்சியை உடைத்து அதன் உறுப்பினர்கள் சிலரை தம்பக்கம் இழுக்க அரசுதரப்பு முயற்சி செய்வதால், அதிருப்தி கொண்டுள்ள ஐக்கியதேசியக்கட்சி, அரசின் இம்மாதிரியிலான நடவடிக்கைகள் காரணமாக சமாதான முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கப்போவதில்லையென எச்சரித்துள்ளமையானது மகிந்தருக்கு எதிர்க்கட்சியிடமிருந்து கிடைத்துள்ள செய்தியாகும்.

இவ்வாறான தொடர் அதிர்ச்சி சூழ்நிலையானது மகிந்தரை மிகவும் பலவீனமாக்கியுள்ளதுடன் எந்த விதத்திலும் தீர்க்கமான, தெளிவான, நியாயமான முடிவு எடுக்கும் தகைமைகள் ஏதுமற்ற வெறும் நிறைவேற்று அதிகாரப் பெயர் கொண்ட சனாதிபதியாக மட்டுமே அடையாளப்படுத்தத் தொடங்கியுள்ளது.

இதுவும் மகிந்தர் முற்றிலும் எதிர்பாராத ஒரு நெருக்கடி நிலையே!

தான் பதவியேற்று அதில் தன்னை நிலைப்படுத்திக் கொள்வதற்குக்கூட அவகாசமின்றி நிலைமைகள் மோசமாகிவிட்டதெனப் புலம்பும் அவர் அதற்கான சூழலை அவரது தேர்தல் கால கூட்டமைப்புத் தோழர்களும், பிரச்சாரங்களும், இனவாத நோக்கிலான அவரது ஆரம்ப அதிகாரத் தொனியுடன் கூடிய பிரகடனங்களும், நகர்வு முயற்சிகளும்தான் என்பதைப் புரிந்துகொள்ள மறுப்பதுதான் வேடிக்கையான விடயமாகும்.

இது ஒரு புறமிருக்க விரும்பியோ விரும்பாமலோ ஜெனீவாவில் புலிகளுடன் போர்நிறுத்த உடன்பாட்டின் முழுமையான அமுலாக்கம் குறித்துப் பேச அரசு சம்மதித்ததையடுத்து அதற்கான புறச்சூழலை அதாவது வடக்கு கிழக்கில் மட்டுமல்ல நாட்டின் ஏனைய பகுதிகளிலும் கூட தமிழ் பேசும் மக்களுக்கான வாழ்வியல் குறித்த விடயங்களில் இயல்பு நிலையை ஏற்படுத்தும் அவசியத்தை சாத்தியமற்றதாக்கும் முயற்சிகளில் படைத்தரப்பினரும் அவர்களுடன் ஒட்டுண்ணிகளாகச் செயற்படும் ஒட்டுப்படைக் குழுக்களும் உயர் மட்ட அதிகாரிகளின் சில கட்டளைகளையும் புறந்தள்ளிவிட்டு தீவிரமாக ஈடுபடுவதுதான் ஒரு இறுக்கமான ஆட்சி, ஒரு கம்பீரமான ஆட்சித்தலைமை இலங்கையில் இல்லையென்ற செய்தியை உலகுக்கு உணர்த்துவதாகவும் உள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் பணியாளர்கள் கடத்தப்பட்டமையானது ஆட்சித் தலைமையின் கட்டுக்குள் அடங்காத ஒட்டுப்படைகளின் மேலாதிக்கப் போக்கை உறுதிசெய்வதாக இருக்கிறது.

இவ்விடயத்தில் சர்வதேச சமூகத்தின்- குறிப்பாக அமெரிக்காவின் கண்டனம் இலங்கை அரசுக்கு அதிர்ச்சியூட்டியுள்ள அடுத்த அதிர்ச்சியாகும். இச்சம்பவம் தொடர்பாக இலங்கை அரசு விரைவில் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டுமென்ற அமெரிக்க வேண்டுகோளினூடாக தொனிக்கும் வலியுறுத்தல் கவனத்தில் கொள்ள வேண்டிய ஒன்றாகும். நிலைமை இவ்வாறிருக்க சர்வதேச நிதி நிறுவனங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் குழுவொன்று இன்று வன்னிக்கு விஜயம் செய்து விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்தவுள்ளதாகத் தெரிகிறது. உலக வங்கியின் வதிவிடப்பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட், ஆசிய அபிவிருத்தி வங்கியைச்சேர்ந்த அலசான் றோபியோ, ஐ.நா பதில் இணைப்பாளர் ஜெப்ரட்டிக், சர்வதேச நாணய நிதியப்பிரதிநிதி லூயிஸ் வல்டிவெகோ ஆகியோரை உள்ளடக்கிய இக்குழுவின் வன்னிக்கான விஜயமும் ஜே.வி.பி மற்றும் ஹெல உறுமயவினரிடையே மிகுந்த சினத்தையும் அதிருப்தியையும் மட்டுமல்ல அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிகிறது.

**வியூகன்**

சில வாரங்களின் முன்னர்தான் ஜப்பானிய விசேட தூதர் யசூசி அகாசியின் வன்னி விஜயத்தைத் தடுத்து அதன் மூலம் பெரிதாக எதனையோ சாதித்தது போன்று பீற்றிக்கொண்டவர்கள் இவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஏற்கெனவே ஜெனீவா பேச்சுவார்த்தைகளின்போது விடுதலைப்புலிகள் சர்வதேச மட்டத்தில் மீண்டும் தங்கள் செல்வாக்கினை வளர்க்கும் வகையில் நகர்வுகளை மேற்கொள்ளக்கூடும் என்பதால் அரசு அதில் அவதானமாக இருக்கவேண்டுமெனப் புலம்பிவரும் ஜே.வி.பியினருக்கும், ஹெல உறுமயவினருக்கும் அவர்களின் தமிழின விரோதச் செயற்பாடுகள் யாவும் 'சாண் ஏற முழம் சறுக்கும்' கதையாகத் தொடர்வதை சகிக்க முடியாதென்பதும் உண்மையே. இதன் தாக்கத்தின் எதிரொலியாக உள்நாட்டில் - அதுவும் குறிப்பாக வடக்குக் கிழக்கு தமிழர் தாயகப்பகுதிகளில் குழப்ப நிலையை ஏற்படுத்துவதன் மூலம் அப்பகுதிகளில் மக்களின் இயல்பு வாழ்வை சிதைத்து, பேச்சுக்களுககான புறச்சூழலை இல்லாமல் செய்யும் நகர்வுகளில் பேரினவாத சக்திகள் படைத்தரப்பினதும், ஒட்டுப்படைக் கும்பல்களினதும் உதவியுடன் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றன என்பதே இன்றைய யதார்த்தமாகும்.

இதனை மகிந்தராலும் அவரது நிறைவேற்று அதிகார வல்லமையாலும் கூட தவிர்க்கவோ தடுக்கவோ முடியாத நிலையே இன்றுள்ளது.

பேரினவாதப் பேய்களுக்கு உருவேற்றி விட்டவரே அவர்தான் என்பதால் அவர் ஏற்றிய 'உரு' இன்று 'கனல்' கொண்டாடுவதை அவரால் தடுக்கமுடியாதுள்ளது.

ஒட்டுப்படைகளின் அனுசரணையுடன் ஆயுதப்படையினரும், இராணுவப் புலனாய்வுப்பிரிவினரும் மேற்கொண்டுவரும் தமிழுணர்வாளர்கள், மற்றும் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களுக்கு எதிரான கண்மூடித்தனமான தாக்குதல்கள் யாவும் சமாதான முயற்சிகளை முற்றாகப் பாதிக்கும் எனத் தெரிந்தும் சனாதிபதியால் அதனைக் கட்டுப்படுத்த முடியாமல் இருப்பது பல்வேறு சந்தேகங்களை எழுப்பவே செய்கிறது.

அவர் உண்மையில் தனது தேசத்தையும், மக்களையும் பாதுகாக்க சமாதானத்தை பற்றுறுதியுடன் முன்னெடுக்க விரும்புவாரேயானால் அவர் பேரினவாத சக்திகளுடனான தனது பற்றுறுதியை தியாகம் செய்ய முன்வரவேண்டும்.

தனது முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் படைத் தரப்பினரை கொண்டுவந்து இராணுவப் புலனாய்வுப்பிரிவினரதும் ஒட்டுப் படைகளினதும் செயற்பாடுகளை நிறுத்தி தமிழர் தாயகப்பகுதிகளில் இயல்பு வாழ்வை தமிழ் மக்களுக்கு உத்தரவாதப்படுத்த வேண்டும். போர்நிறுத்த உடன்பாட்டின் அம்சங்களை முழுமையாக அமுல் செய்யும் மனோவலிமை கொண்டவராக மாற வேண்டும்.

ஆனால் இவையெல்லாவற்றையும் சாத்தியமாக்கும் ஆளுமையும் இதய சுத்தியும் மகிந்தருக்கு இருக்கிறதா என்ற சந்தேகத்தையே அண்மைக்கால் அவரின் செயற்பாடுகள் உறுதி செய்துள்ள நிலையில்.....

ஜெனீவா நோக்கிய சமாதானப் பயணம் ஒரு நிர்ப்பந்த யாத்திரையாகவே அவரால் கருதப்படுகிறது என்ற கருத்துருவாக்கம் வலுப் பெறவே செய்கிறது.

# காலம் பிந்திய ஞானம்



போர்நிறுத்த உடன்படிக்கை தொடர்பான பேச்சுக்களை ஜெனீவாவில் நடத்த ஒப்புக்கொண்டதை விட நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் நடாத்தியிருக்கலாம் என சனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை ஜாதிக ஹெல உறுமய கட்சியின் சார்பில் அதன் பேச்சாளர் கமல் தேசப்பிரிய கண்டித்துள்ளார்.

ஐரோப்பிய நாடுகளில் பேச்சுக்கள் நடக்கக் கூடாது என ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமய போன்ற கட்சிகள் கடும் பிரயத்தனங்களுடன் பிரச்சாரங்களை மேற்கொண்டனர்.

பின்னர் புலிகள் இயக்கம் முதல் பேச்சு அனுசரணை நாடு என்ற வகையில் நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில்தான் முதல் நடைபெறவேண்டும் என வலியுறுத்தத் தொடங்கி இறுதியில் பேச்சுக்கான இடத்தை தெரிவு செய்வதே பெரும் பிரச்சினை என்றான நிலைமையில் நோர்வே சுவிற்சர்லாந்தின் ஜெனீவா நகரை பிரேரித்தனர்.

நோர்வேயில்தான் பேச்சுக்கள் நடைபெறவேண்டும் என்பதிலிருந்து சர்வதேச சமூகத்தின் விருப்பத்திற்கு மதிப்பளித்து ஜெனீவாவில் பேச்சுக்களை நடாத்த புலிகள் இயக்கம் இணங்கியதையடுத்து இப்போது ஹெல உறுமய மீண்டும் முருங்கை மரத்தில் ஏறத்தொடங்கிவிட்டது.

ஜெனீவாவில் பேசுவதற்கு இணங்கியதை விட ஒஸ்லோவில் பேசுவதற்கு இணங்கியிருக்கலாம் என்று.

ஹெல உறுமய ஜெனீவாவில் பேச்சு நடைபெறுவது தொடர்பாக அதிருப்தியை வெளியிட்டிருப்பதற்குக் காரணம் இல்லாமலில்லை.

ஏனெனில் ஜெனீவா நகரின் அரசியல் முக்கியத்துவத்தை இந்தப் பிக்குகளுக்கு பிந்தித்தான் விளங்கியிருக்கிறது போலும்.

ஜெனீவா நகரைப் பொறுத்தவரையில் ஐரோப்பாவையும், அமெரிக்காவையும் இணைக்கும் ஒரு சந்தியாகவே பார்க்கப்படுகிறது. இதனை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் சுட்டிக்காட்டியிருந்தார்.

ஆக, இப்பொழுது என்ன நடந்திருக்கிறது ஐரோப்பாவிற்கும் புலிகளைக் கொண்டு போகக் கூடாது, அமெரிக்காவுக்கும் கொண்டுபோகக் கூடாது என கூச்சலிட்டு இறுதியில் இரண்டு நாடுகளின் மையத்துக்கல்லவா கொண்டுவந்து விட்டார்கள்.

உண்மையில் இந்த இடத்தெரிவைப் பொறுத்தவரையில் புலிகள் இயக்கம் விட்டுக் கொடுப்புடன் நடந்துகொண்டதாக சர்வதேச நாடுகள் கூட மதிப்பளிக்கும் சூழலில் புலிகள் இயக்கமோ மௌனமாக சிங்கள தேசத்தின் மண்டையில் ஒன்றுமில்லா அரசியல் வாதிகளை இராஜதந்திரமாக தோற்கடித்துள்ளனர்.

இதை தமிழில் அழகாக விளக்கும் வகையில் ஒரு பழமொழியுண்டு. அதாவது உள்ளதையும் கெடுத்தானாம் கொள்ளிக் கண்ணன் எண்டு.

# சொல்லாமலே புரியும்



இலங்கை மக்கள் நிராகரித்த சமஷ்டி முறையை செயற்படுத்துவதற்கு எவருக்கும் அதிகாரம் இல்லை. சமஷ்டிக்கு மீண்டும் உயிர் ஊட்டப்பட்டால் அது அரசாங்கத்தின் எதிர்காலத்தை சர்ச்சைக்குரியதாக்கும் என ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினரும் அந்தக் கட்சியின் பிரச்சாரச் செயலாளருமான விமல்வீரவன்ச வீரவசனம் பேசியுள்ளார்.

ஜே.வி.பியின் பிரச்சார செயலாளர் விமல்வீரவன்சவின் பிரச்சார பாணியே வித்தியாசமானது. அதாவது பிரச்சாரம் என்பது அரசையும், எதிர்க்கட்சியையும் எச்சரிப்பதுதான் என்றவகையில் அளவுக்கணக்கின்றி எச்சரிக்கைகளை அள்ளி வீசுவதில் வல்லவர்.

இதில் வேடிக்கை என்னவென்றால். இவர்கள் அரசில் பங்குதாரர்களாக இருக்கின்ற போதும் சரி, அரசுக்கு வெளியே இருக்கின்றபோதும் சரி அரசை எச்சரிப்பார்கள்.

யாரை, யாருக்காக, ஏன் அரசை எச்சரிக்கிறார்கள் என்பதெல்லாம் எவருக்கும் புரியாது.

ஒரு போர்க்களத்தில் செய்யவேண்டியதை ஒரு பிரச்சார மேடையில் அல்லது நாடாளுமன்றத்தில் செய்வார்கள். ஆனால் பிரச்சார மேடையில் செய்யவேண்டியதை செய்யவே மாட்டார்கள்.

இந்தச் கேவலத்தில் அரசாங்கத்தின் எதிர்காலம் சர்ச்சைக்குரியதாக மாறும் என ஆருடங்களை வெளியிடுகிறார்கள்.

உண்மையில் இந்தச் சிவப்புச்சட்டைகள் இலங்கையில் ஒரு சர்ச்சைக்குரிய தரப்பு என்பதில் எவருக்கும் சந்தேகமிருக்காது.

இந்த நிலையில் இவர்களின் தயவு தாட்சணியத்தோடு சனாதிபதியாகியிருக்கும் மகிந்தராஜபக்ஷவின் அரசாங்கத்தின் எதிர்காலம் சர்ச்சைக்குரியதாக இருக்கும் என்பதை இவர்கள் சொல்லாமலே தெரியும்.

ஒட்டவேண்டிய இடத்தில் வெட்டுவார்கள் வெட்டவேண்டிய இடத்தில் ஒட்டுவார்கள். இவர்களின் பிரதான நோக்கமே அரசையும் அரசியலையும் சர்ச்சைக்குரியதாக்கி அதில் உருவாகும் குழப்பத்தில் அரசியல் குளிர்காய்வதே.

எனவே விமல்வீரவன்சவின் பேச்சுக்கு பொருளில்லாமல் இல்லை. ஏனெனில் சமஷ்டியை தமிழ்மக்கள் கூட விரும்பவில்லை என்பதை இவர்கள் புரிந்துகொண்டால் இன்னும் நன்றாக இருக்கும். ஏனெனில் தமிழர்கள் விரும்புவது ஒரு தனியரசையே.

வேழினி

# நறுக்கென...

## பீரிஸிற்கு பணி காத்திருக்கிறது..!



ஐக்கியதேசியக்கட்சியிலிருந்து அதன் நாடாளுமன்ற உறுப்பினர் ஜீ.எல்.பீரிஸ் சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசின் பக்கம் பல்டி அடிக்கப்போவதாக தகவல்கள் வெளிவந்திருந்தன. ஆனால் இப்போது பல்டி அடிப்பதை பீரிஸ் கைவிட்டுள்ளதாக அறிவித்துள்ளார்.

பீரிஸ் ஏற்கெனவே சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து பல்டி அடித்துத்தான் ஐக்கிய தேசியக்கட்சிக்கு வந்திருந்தார்.

ஒரு காலத்தில் அம்மணியின் பொதியை சுமந்தவர் இந்த பீரிஸ்தான். பின்னர் ஐக்கியதேசியக்கட்சியின் அரசியல் திட்டத்தை சுமந்தவரும் இவர்தான். இப்போது அடிக்கும் பல்டியோடு மகிந்தவின் சமாதானக் குழுவுக்கு பீரிஸ் தலைமை தாங்கலாம் என தகவல்கள் வெளியாகியிருந்தன.

மகிந்த ராஜபக்ஷவும் பீரிஸை அழைத்து இது தொடர்பாக பேசியிருந்தார். ஆனால் பீரிஸிற்கு எதிராக ஜே.வி.பியினர் கடும் எதிர்ப்புக்களை காட்டிவருகின்றனர்.

இந்த நிலையில் ஜெனீவாப் பேச்சில் அரச தூதுக்குழுவுக்கு தலைமை தாங்கக் கூடியவர்கள் என்று அரசில் அமைச்சர்களாக பதவி வகிக்கும் பலருடைய பெயர்கள் அடிபடுகின்றன.

எனவே பீரிஸிற்கு பொதி சுமக்கும் பணி வழங்குவதில் நிச்சயத்தன்மை இல்லை. இந்த நிலையில் தான் பீரிஸ் கட்சிக்குள் முரண்பாடுகள் முதலில் காணப்பட்ட போதிலும் இப்போது அவை சுமுகமாக தீர்க்கப்பட்டிருப்பதால் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவத்தின் கீழ் முன்னரைவிட வேகமாக செயற்படத் தீர்மானித்திருப்பதாக தெரிவித்திருக்கிறார்.

எப்படியோ ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையின் கீழ் பீரிஸ் வேகமாக செயற்படப்போகிறார்.

சரி. இலங்கையில் எதிர்கட்சியின் பணி எது என்றால் ஆளும் கட்சியின் செயற்பாடுகளை விமர்சிப்பதும் எதிர்ப்பதும் தானே.

எனவே பேச்சுக்கு தலைமை தாங்கலாம் என எதிர்பார்க்கப்பட்ட பீரிஸ் இனி என்ன செய்யப்போகிறார். அரசின் பேச்சுவார்த்தையை விமர்சிக்கலாம் அதனை எதிர்க்கலாம் என்ன விந்தையான பணி ஆளும் கட்சியிலிருந்தால் ஆதரவு, எதிர்க் கட்சியிலிருந்தால் எதிர்ப்பு எவற்றிலெல்லாம் இப்படி நடந்து கொள்ள வேண்டும் என்ற வரையறைகளே இல்லையா?

எப்படியோ பீரிஸிற்கு பணி காத்திருக்கிறது.

## வழமையான பல்லவி..!



நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்படவேண்டுமானால் சகல அரசியல் கட்சிகளும் பொது அமைப்புக்களும் அரசாங்கத்துக்கு நிபந்தனையற்ற முறையில் ஆதரவு வழங்க வேண்டும் என சனாதிபதி மகிந்தராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

உண்மையில் நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்பட அனைத்து கட்சிகளினதும், அமைப்புக்களினதும் ஆதரவு என்பது முக்கியமானது.

ஆனால் இலங்கையில் நாட்டின் ஒருமைப்பாடு குறித்தும், இறையாண்மை குறித்தும் வாய் கிழிய கத்தும் கட்சிகள் சமாதானம் ஏற்படுவதற்காக ஒருமித்துச் செயற்படுவதில்லை.

இந்த அழைப்பை விடுக்கும் மகிந்த ராஜபக்ஷகூட எதிர்க்கட்சியிலிருக்கும் போது நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்படுவதற்கு எதிராகச் செயற்பட்ட ஒருவரே.

ஏன் சமாதான முயற்சியில் அனுசரணையாளராகவிருக்கும் நோர்வே அரசு தொடர்பாகவும் அதன் சிறப்புத்தூதுவராக செயற்படும் எரிக்சூல்ஹெய்ம் குறித்தும் கடுமையான எதிர்ப்பையும் கண்டனங்களையும் வெளியிட்டு வந்தவரே.

தேர்தல் வெற்றியில் தனது ஆதரவுக்காக கூட்டுச் சேர்த்த ஏனைய கட்சிகளைக் கூட சமாதானத்துக்கு விரோதமாக யார் செயற்படுகிறார்களோ அவர்களை இனங்கண்டு சமாதானத்துக்கு எதிரானவர்களின் அணியென்பதன் அடிப்படையிலேயே கூட்டுச் சேர்த்தார்.

இவ்வாறு இருக்கையில், சனாதிபதி மகிந்தராஜபக்ஷ நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்பட கட்சிகள் அனைத்தும் நிபந்தனையற்ற வகையில் ஆதரவு வழங்க வேண்டும் என கோருவது நாட்டையும் உலகத்தையும் ஏமாற்ற முனையும் ஒரு முனைப்பாகவே பார்க்கவேண்டும்.

ஏனெனில் நிரந்தர சமாதானம் ஏற்படுவதற்கு கட்சிகளின் ஒத்துழைப்புக்கு அப்பால் நேர்மையான அணுகுமுறையும், அதற்கான உழைப்பும் அவசியம். ஆனால் இவை எவையும் இந்த அரசிடம் இருப்பதாக யாரும் கூறமுடியாது.




# சமாதானத்துக்கு சமாதி கட்டும் அரசு

**ஆட்டைக்கடித்து, மாட்டைக்கடித்து, மனிதனைக் கடித்த கதையாக, சர்வதேச ரீதியாகச் செயற்படும் ஒரு மனிதாபிமானத் தொண்டு நிறுவனத்தின் பணியாட்களைக் கடத்தியதென்பது எந்தளவு பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தவல்லதென சிறிலங்கா அரசும், அதன் படைகளும் முன்னுணர்ந்திருக்கவில்லைப்போலப்படுகிறது. தொடர்பாடல் வசதிகளும், தொடர்புகளும், தமது செயற்பாடுகள் ஊடான அறிதலுக்குமுரிய ஒரு அமைப்பின் மீதான இந்த நடவடிக்கை அரசாங்கத்தை வில்லங்கத்துக்குள் மாட்டிவிட்டுள்ளது.**

"பாதிக்கப்பட்டவர்கள் அமைதி பேணி பேச்சுவார்த்தைகள் நடைபெற உதவவேண்டும்"- இது கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் சனவரி 31 ஆம் திகதி விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள செய்தி.

கடந்த 30 ஆம் திகதி மட்டக்களப்பிலிருந்தும், வாழைச்சேனையிலிருந்தும் வன்னி நோக்கிப் புறப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் பணியாளர்களைக் கொண்ட இரண்டு வாகனங்கள் அவை சென்று சேரவேண்டிய இடத்தை அடையவில்லை. மாறாக 15 பேருடன் சென்ற வாகனம் வழிமறிக்கப்பட்டு அதிலிருந்த ஐந்துபேர் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர். ஐந்து பேருடன் வாழைச்சேனையிலிருந்து புறப்பட்ட வாகனம் பற்றிய தகவலேதும் இதுவரை (01 ஆம் திகதி இப்பத்தி எழுதப்படும் வரை) கிடைக்கவில்லை. மொத்தமாகப் 10 பேர் கடத்தப்பட்டும் காணாமற்போயுள்ளனர்.

இயல்புநிலையை மீட்டெடுப்பது பற்றியும், வன்முறைகளையும், கொலைகளையும் நிறுத்துவது பற்றியும் பேசப்படுகின்ற நிலையில்; இந்த இலக்குகளை அடைவதற்காக போர்நிறுத்த ஒப்பந்தத்தை (புரிந்துணர்வு உடன்படிக்கையினை) செம்மையாக அமுல் நடாத்துவது குறித்த பேச்சுக்களை நடாத்த ஜெனீவாவில் பேச்சு நடாத்துவதற்கு இருதரப்பும் சம்மதித்துள்ள நிலையில் இந்தச் சம்பவம் நிகழ்ந்தேறியுள்ளது.

மனிதாபிமானப் பணிபுரியும் நிறுவனமொன்றின் பணியாட்களின் பாதுகாப்புக்கு ஊறுவிளைவிக்கக் கூடிய வகையில் நிகழ்ந்துள்ள இந்தச் சம்பவம் பல்வேறு தளங்களிலும், மட்டங்களிலும் பலத்த அதிர்வுகளை ஏற்படுத்தியுள்ளது. சிறிலங்கா அரசுக்குப் பலத்த சங்கடத்தையும் இது ஏற்படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது. மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல், மூஞ்சூறு விழுங்கிய பாம்பாக அரசு விழிக்கிறது.

இந்தச் சம்பவம் இராஜதந்திர வட்டாரங்களிலே ஏற்படுத்திவிட்டுள்ள அருவருப்புணர்வையே, அமெரிக்கத் தூதரகத்தின் 'ராஜீய மொழியிலான' அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் பி.பி.சி தமிழோசைக்கு தெரிவிக்கையில் இப்படியான நடவடிக்கைகள் ஜெனீவாப் பேச்சுக்களைப்

**பு.சத்தியமூர்த்தி**

பாதிக்கக்கூடும் என்று தெரிவித்த பின்னர் அமெரிக்காவின் இந்த அறிக்கை வெளிவந்திருப்பதும் பாதிக்கப்பட்ட தரப்பு அமைதிபேணி பேச்சுவார்த்தை நடைபெற உதவவேண்டுமெனக் கேட்டுக்கொண்டிருப்பதும் கவனிக்கத்தக்கது.

இப்போதுதான் சிறிலங்கா அரசாங்கத்துக்கு நிலைமை உறைத்திருக்கிறது. ஆட்டைக்கடித்து, மாட்டைக்கடித்து, மனிதனைக் கடித்த கதையாக, சர்வதேச ரீதியாகச் செயற்படும் ஒரு மனிதாபிமானத் தொண்டு நிறுவனத்தின் பணியாட்களைக் கடத்தியதென்பது எந்தளவு பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தவல்லதென சிறிலங்கா அரசும், அதன் படைகளும் முன்னுணர்ந்திருக்கவில்லைப் போலப்படுகிறது. தொடர்பாடல் வசதிகளும், தொடர்புகளும், தமது செயற்பாடுகள் ஊடான அறிதலுக்குமுரிய ஒரு அமைப்பின் மீதான இந்த நடவடிக்கை அரசாங்கத்தை வில்லங்கத்துக்குள் மாட்டிவிட்டுள்ளது.

இப்போது சிறிலங்கா அரசாங்கம் எந்தவிதமான சாக்குப் போக்குகளும் சொல்லமுடியாதவாறு துணை இராணுவக்குழுக்கள் விவகாரத்தில் மாட்டிக்கொண்டுவிட்டன. அரசின் பூரண கட்டுப்பாட்டுப் பகுதியில் வைத்து, இராணுவ சோதனைச் சாவடிக்கு 100 மீற்றர் தூரத்திற்குள் வாகனமொன்று கடத்தப்பட்டு அதிலிருந்த ஐந்து பேர் கண்கள் கட்டப்பட்டு இழுத்துச் செல்லப்பட்டுள்ளனர். இழுத்துச் சென்றவர்கள் தம்மை இன்னாரெனத் தெளிவாக அடையாளப்படுத்தியதோடு; கடத்தப்பட்டவர்களிற்கு இறுதிக் கிரியைகளுக்கும் (எட்டு, முப்பத்தொன்று) ஆயத்தப்படுத்தும்படியும் சொல்லியிருக்கிறார்கள்.

இவை அனைத்தும் நடைபெற்றது வெலிக்கந்தையிலுள்ள 231 ஆவது பிரிகேட் தளப்பகுதியிலேயே. இந்த வெலிக்கந்தைப் பகுதியே சிறிலங்காவின் ஆகப் பிந்திய துணை இராணுவக் குழுவின் அதிமுக்கிய நடவடிக்கைப் பிரதேசமாக இருந்துவருகிறது. இங்குள்ள தீவுச்சேனை, மற்றும் அதன் அயற்பகுதிகளில் இந்தக்குழுவின் நடமாட்டமும் செயற்பாடுகளும் மிக அதிகளவிலும் தொடர்ச்சியாகவும் இருக்கின்றன.

இது கண்காணிப்புக்குழுவின் நடவடிக்கைகள், அவதானிப்புக்கள் மூலம் தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆனால் சிறிலங்கா அரசு 'எங்கப்பன் குதிருக்குள் இல்லை' என்பதாக அடம் பிடித்துக்கொண்டிருந்தாலும், சர்வதேச சமூகம் துணைப்படைகள் இயங்குவதைத் தெளிவாகவே அறிந்துவைத்துள்ளது. மட்டுமன்றி அதனை சிறிலங்கா அரசுக்கும் அழுத்தமாகக் கூறியுமுள்ளது. அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், நோர்வே என்பன வெளிவெளியாகவே இதனை கூறிவிட்டன.

தற்போது இருதரப்புக்குமிடையேயான முக்கிய விவகாரமாக உள்ளதும் துணைப்படைகளின் விடயமே. ஜெனீவாவில் பேச்சுக்களை நடாத்துவதற்கு முன்பாகவே அரசாங்கம் இந்தத் துணைப்படைகளைக் கலைத்து அவற்றின் ஆயுதங்களைக் களையவேண்டுமென்ற அழுத்தம் பல மட்டங்களிலும் கொடுக்கப்பட்டு வருகிறது. ஏனெனில் நிலைமையைச் சீரழிப்பதில் முக்கிய காரணி துணைப்படையே என்பதான ஒரு பார்வை இராஜதந்திர வட்டாரங்களில் உண்டு.

புலிகள் திரும்பத்திரும்ப துணை இராணுவக்குழுக்களைக் கலைப்பது பற்றி வலியுறுத்தி வந்திருக்கிறார்கள் என்பதோடு ஜெனீவாப் பேச்சுக்களுக்கு முன்பாக இயல்புநிலை மீளக்கொண்டுவரப்படுதல் வேண்டுமென்றும் வலியுறுத்தியிருக்கிறார்கள்.

இந்த எல்லாவற்றையும் போட்டுடைப்பதாக வெலிக்கந்தைப் பிரதேசத்தின் செயற்பாடுகள் அமைந்துவிட்டன. பிரிகேடியர் தயாரட்ணாயக்காவின் ஆளுகையில் 231 ஆம் பிரிகேட்டின் கட்டுப்பாட்டிலுள்ள இந்தப் பகுதியில் நடைபெறும் விடயங்கள்; விமர்சகர் ஒருவர் கூறுவதைப் போன்று 'தெற்கு எரிவதற்கு' கால்கோளாக அமைந்துவிடக்கூடாது. ஏனென்றால் அவர் சொல்கிறார்; இனி யுத்தம் நடந்தால் தெற்கு எரியும் என்று.

ஜெனீவாப் பேச்சுக்கள் சனவரி 30 ஆம் திகதிய நிகழ்வு களால் தடைப்பட்டுப் போக நேர்ந்தால், அந்த விமர்சகர் எதிர்வு கூறியது நடைபெறவும் கூடும். ●

## கண்டனங்கள்

### அமெரிக்கா கண்டனம்

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் 5 பணியாளர்கள் பொலனறுவ மாவட்டத்தின் வெலிக்கந்தைப் பகுதியில் சனவரி 30 ஆம் நாளன்று கடத்தப்பட்டுள்ளதாக வெளியான செய்திகள் தொடர்பில் அமெரிக்கத் தூதரகம் வருத்தம் கொள்கிறது.

இச்சம்பவம் குறித்து தொடர்புடைய அதிகாரிகள் விரைவான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அமெரிக்கத் தூதரகம் வேண்டுகோள் விடுக்கிறது.

ஜெனீவாவில் யுத்த நிறுத்தப் பேச்சுகள் நடைபெறும் சூழ்நிலையில் அனைத்துத் தரப்பினரும் பொறுமையும் அமைதி காக்க வேண்டும் என்றும் அமெரிக்கத் தூதரகம் மீண்டும் கேட்டுக் கொள்கிறது' என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஐ.நா.சபை கண்டனம்

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரை விடுதலை செய்ய வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான உதவிகளுக்கான ஒருங்கிணைப்பாளர் வலியுறுத்தியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை

சிறிலங்கா அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்டு செயற்பட்டு வரும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் 10 பேர் கடத்தப்பட்டுள்ளதாக இலங்கையின் ஐ.நா அமைப்புகள் தெரிவித்துள்ளன.

கடத்தப்பட்ட அனைவரையும் உடனே விடுதலை செய்ய வேண்டுகோள் விடுக்கிறோம்.

கடத்தப்பட்டவர்கள் மனிதாபிமான பணிகளை மேற்கொண்டவர்கள். மனிதாபிமான பணிக்காக தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்கள். அவர்களுக்கு மதிப்பளித்து அவர்கள் விடுவிக்கப்பட வேண்டும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி. 03. 02. 2006
மின் அஞ்சல :—weekly @ eezhanatham.com

# அரசின் விபரீத விளையாட்டு..!

புரிந்துணர்வு உடன்படிக்கையின் அமுலாக்கம் குறித்து ஜெனீவாவில் பேச்சுக்கள் நடைபெற இருக்கும் சூழலில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் பத்து ஊழியர்கள் சிறிலங்கா இராணுவ ஒட்டுக்குழுக்களால் கடத்தப்பட்டுள்ளனர். பின்னர் இரண்டுபேர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

தமிழர் தாயகத்தில் பெரும் மனிதாபிமான பணிகளில் ஈடுபட்டுவரும் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் செயற்பாடுகளை முடக்குவதற்காக சர்வதேச ரீதியாகவும், இலங்கைக்குள்ளும் பெரும் நடவடிக்கைகளை சிறிலங்கா அரசும், இராணுவமும், அரச ஒட்டுப்படைகளும் கடும் பிரயத்தனத்துடன் கூடிய முயற்சிகளை மேற்கொண்டே வருகின்றன.

ஆயினும் போராலும், இயற்கை அழிவுகளாலும் இன்னலுற்ற தமிழ் மக்களுக்குமன்றி சர்வதேச ரீதியாக உதவிகள் தேவைப்படும் மக்களுக்கு தனது மனிதாபிமான பணிகளை ஆற்றிவரும் ஒரு சர்வதேச மனிதாபிமான அமைப்பின் பணிகளைமுடக்குவதற் காக அந்த அமைப்பின் தொண்டர்கள் மீது ஆயுத முனையில் அரச வன்முறைகள் ஏவிவிடப்பட்டுள்ளது.

உண்மையில் 2002இல் சிறிலங்கா அரசுடன் செய்துகொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையில் தமிழர் தாயகத்தில் இயங்கும் ஒட்டுக்குழுக்களின் ஆயுதங்கள் களையப்படுவதிலிருந்து அவற்றை தமிழர் தாயகத்திலிருந்து அப்புறப்படுத்தப்படவேண்டும் என்பதை புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி அரசு ஏற்றுக்கொண்டுள்ளது.

ஆனால், அரசு புரிந்துணர்வு உடன்படிக்கையின் அமுலாக்கத்திற்காக பாடுபடாததுடன் அந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையை ஆபத்திற்குள்ளாக்கக்கூடிய துணைக்குழுக்களுக்கு சக்தியளித்து அவற்றை வளர்த்து வருவதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்து வருகிறது. இதன் விளைவு கடந்த ஆண்டு டிசெம்பர் மாதத்தில் மிக உச்ச ஆபத்தை நோக்கி நாடு சென்றதையோ அதனால் ஏற்படக்கூடிய விளைவுகள் குறித்தோ அரசும், அரசபடைகளின் ஒட்டுக்குழுக்களும் அவ்வளவு இலகுவாக மறந்திருக்க முடியாது.

ஆனால் இப்பொழுது தமிழர்புனர்வாழ்வுக்கழகத்தின் தொண்டர்கள் கடத்தப்பட்டிருக்கும் விவகாரத்தைப் பார்க்கும்போது இவற்றின் தாற்பரியங்களை உணர்ந்துகொள்ள அரசு தயாராக இல்லைப்போன்றே தோன்றுகிறது.

அரசு அமைதியையும் ஆபத்தையும் மோதவிட்டு வேடிக்கை பார்க்கவேண்டும் என்பதில் பிடிவாதமாகவே இருக்கிறது.

இந்த நிலையில்தான் புரிந்துணர்வு உடன்படிக்கையின் அமுலாக்கம் குறித்து ஜெனீவாவில் பேச்சுக்களை நடாத்த தமிழர் தலைமை இணங்கியிருக்கும் நிலையில் தமிழர் புனர்வாழ்வுக்கழக ஊழியர்களைக் கடத்தி பேச்சுக்கே சவால் விடுத்திருக்கிறது அரசு.

உண்மையில் இந்த மனிதாபிமான செயற்பாடுகளில் ஈடுபடும் தமிழர் புனர்வாழ்வுக்கழகத் தொண்டர்களைக் கடத்தியதன் மூலம் சமாதான முயற்சிகளுக்கு சாவுமணியடிப்பதில் அரசு உறுதியாக இருக்கிறது என்பது அம்பலப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த விவகாரத்தின் விளைவு குறித்து அரசு உணர்ந்து கொண்டதாகத் தெரியவில்லை. இதனால்தான் இந்த விவகாரம் குறித்து கருத்துத்தெரிவித்த சிறிலங்காவின் பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ... வெலிக்கந்த கடத்தல் சம்பவம் முற்றிலும் திரிவுபடுத்தப்பட்ட ஒரு விடயம் எனத்தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ இதன் மூலம் ஒரு பாரதூரமான சம்பவத்தை மிக இலகுவாகத் தூக்கி எறிந்திருப்பதுடன் கடத்தப்பட்டவர்களின் பாதுகாப்புக் குறித்து அரசிடமிருந்து எதனையும் எதிர்பார்க்கத்தேவையில்லை என்பதையும் சொல்லாமற் சொல்லியுள்ளார்.

இந்த நிலையில் இந்த சம்பவத்தின் ஆபத்தையுணர்ந்துள்ள சர்வதேச சமூகம் தொடர்ச்சியாக தமது கரிசனைகளை வெளியிட்டு வருவது கவனிக்கத்தக்கது.

எதுவாயினும் தமிழர் புனர்வாழ்வுக்கழக தொண்டர்கள் கடத்தப்பட்ட சம்பவமானது ஜெனீவா பேச்சுக்கு அச்சுறுத்தலாக அமையும் என இலங்கை போர்நிறுத்த கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஹக்ரொப் ஹொக்லண்ட் சுட்டிக்காட்டியிருப்பது போன்று இதுவொரு ஆபத்தான சம்பவமாகவே உள்ளது. ஏனெனில் ஜெனீவாவில் பேச்சுக்கள் நடத்துவதற்கு தமிழர் தலைமை இணங்கியபோது பேச்சுக்களுக்கு முன்னர் தமிழர் தாயகப்பிரதேசத்தில் அரச இராணுவ வன்முறைகள் உடன் நிறுத்தப்படவேண்டுமென்பதை வலியுறுத்தியிருந்தனர்.

ஆனால் ஜெனீவா பேச்சுக்கான நாட்கள் அண்மித்திருக்கும் நாட்களில் புனர்வாழ்வுக்கழகப் பணியாளர்களை கடத்தியதன் மூலம் தமிழர் தாயகத்தில் அரச இராணுவ வன்முறைகள் நிறுத்தப்படமாட்டாது என்கிற செய்தியை அரசு வெளிப்படுத்தியுள்ளது.

உண்மையில் ஜெனீவாவில் பேச்சுக்கள் நடைபெறுவதை அரசு விரும்பவில்லை என்பதுடன் அவ்வாறு நடந்தால்கூட அங்கு எட்டப்படும் இணக்கப்பாடுகளை அரசு அமுல்படுத்தப் போவதில்லை என்பதையே இச்செயல் சுட்டிநிற்கின்றது.

இந்த நிலையில் அமைதிப் பேச்சுக்களை குழப்பியடிக்க அரசு தீவிரமாகச் செயற்படத்தொடங்கிவிட்டது.

# தணியாத அரச வன்முறை

சமாதானப் பேச்சுக்களுக்காக ஜெனீவாவுக்கு செல்வதை குழப்ப முயல்வதாக எண்ணத் தோன்றுகின்றது. காரணம் ஜெனீவா செல்வதற்கு விடுதலைப்புலிகள் இணங்கிய பின் வடக்கு கிழக்கில் இடம்பெற்ற வன்முறைகளே இவ்வாறு எண்ணத்தோற்றுவித்தது.

பேச்சுவார்த்தைக்காக ஜெனீவாவுக்குச் செல்லவேண்டுமானால் வடக்கு கிழக்கில் இடம்பெற்றுவரும் வன்முறைகள் நிறுத்தப்பட்டு மக்களின் இயல்பு வாழ்க்கை தோற்றுவிக்கப்பட வேண்டும் என்பது விடுதலைப் புலிகளின் பிரதான கோரிக்கையாக இருக்கின்றது. ஆனால் விடுதலைப் புலிகள் மேற்படி கோரிக்கைகளை முன்வைத்த பின் இடம்பெற்ற சம்பவங்கள் தலைகீழாகவே இருக்கின்றன.

**மகிந்த ராஜபக்ஷ வாயளவில் வன்முறைகள் நிறுத்துவது தொடர்பிலும் சமாதானம் தொடர்பிலும் பேசி வருகிறாரே தவிர சமாதானம் தொடர்பில் தனது நடவடிக்கைகளை பற்றுறுதியோடு மேற்கொள்வதாக தெரியவில்லை.**

அதாவது மேற்படி கோரிக்கை முன்வைக்கப்பட்டு இருபத்தி நான்கு மணிநேரம் முடிவடைவதற்குள் மட்டக்களப்பு வடமுனையில் விடுதலைப் புலிகளின் போராளி ஒருவர் இராணுவத்தோடு சேர்ந்தியங்கும் ஒட்டுப்படைகளால் சுட்டுக் கொலை செய்யப்பட்டமை.அத்தோடு கடந்த வாரம் தமிழர் புனர்வாழ்வுக்கழக பணியாளர்கள் மட்டக்களப்பு வெலிக்கந்தை இராணுவ முகாமிற்கு அருகில் வைத்து ஆயுத முனையில் கடத்திச்செல்லப்பட்டமை என்பன ஜெனீவாவில் நடக்கவிருக்கும் பேச்சுவார்த்தை தொடர்பான சந்தேகத்தை எழுப்பியுள்ளது.

இந்தக் கைது தொடர்பில் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் கருத்துக் கூறுகையில், அதாவது இந்தக் கைதுச் சம்பவம் ஜெனீவாவின் சமாதானப் பேச்சுவார்த்தையைப் பாதிக்கலாம் என எச்சரிந்திருந்தார்.

அத்தோடு வடக்கு கிழக்கில் இயல்புவாழ்க்கை தோற்றுவிக்கப்படாது விடின் ஜெனீவாவில் பேச்சுவார்த்தை இல்லை என்பதுதான் தமிழர் தலைமையின் நிலைப்பாடாக இருக்கிறது. ஆனால் சிறிலங்கா அரசோ இதற்கு எதிர்மறையாகச் செயற்பட்டு வருகிறது.

மகிந்த ராஜபக்ஷ வாயளவில் வன்முறைகள் நிறுத்துவது தொடர்பிலும் சமாதானம் தொடர்பிலும் பேசி வருகிறாரே தவிர சமாதானம் தொடர்பில் தனது நடவடிக்கைகளை பற்றுறுதியோடு மேற்கொள்வதாக தெரியவில்லை. ஏனெனில் தனது நாட்டுப்படைகளை தனது கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ளாத அரச தலைவராகக் காணப்படுகிறாரா? அல்லது தனது படைகளைக்கட்டுப்படுத்த விரும்பவில்லையா? என்றுதான் தெரியவில்லை. சமாதானப் பேச்சுவார்த்தைக்கு விரும்பியோ விரும்பாமலோ போகவேண்டும் என்கிற நிர்ப்பந்தத்தின் பேரில் செயற்படுவதாகவே தனது செயற்பாட்டினை மகிந்த வெளிப்படுத்தி வருகின்றார்.


தனது நாட்டுப்படைகளை தனது கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள முடியாத அரசதலைவராக இருக்கமுடியாது. அதிலும் பாதுகாப்பு அமைச்சுப்பொறுப்பையும் தன்னகத்தே கொண்டுள்ள மகிந்தவால் அது இயலாத காரியமென்று. எனவே மகிந்த உண்மையில் சமாதானத்தை விரும்புவாராயின் தனது படைகளையும் அந்தப் படைகளோடு இயங்குகின்ற ஆயுதக்குழுக்களையும் கட்டுப்படுத்தி ஓர் இயல்புவாழ்க்கைக்கு வழிசமைக்க வேண்டும்.

அதைவிடுத்து மகிந்த மீனுக்கு வாலையும் பாம்புக்கு தலையையும் காட்டுவது போன்று சர்வதேச சமூகத்திற்கு முன்னால் சமாதானத்தில் விருப்புக்கொண்டவர் போல் திருவாய் மலர்வதும் மறுபுறம் தனது செயற்பாட்டினை வழமைபோல் சிங்களத்தலைவர்கள் மேற்கொண்டது போன்று நடந்துகொள்வதும் விரும்பத்தக்கதல்ல.

இத்தீவில் மீண்டுமொரு யுத்தஅழிவு ஏற்படுவதனை தவிர்த்து சமாதான வழியில் இனப்பிரச்சினைக்கு நியாயமான முறையில் தீர்வுகாண மகிந்த முன்வரவேண்டும். விடுதலைப் புலிகளும் சமாதானத்துக்காக இறுதிச் சந்தர்ப்பமாக இதனை வழங்கியுள்ளனர். எனவே மகிந்தவும் இந்தச் சந்தர்ப்பத்தை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

மாறாக ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் போன்று கடந்த கால சிறிலங்காவின் சிங்களத்தலைவர்கள் வழியில் கபட நோக்குடன் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த விரும்புவாராயின் ஜெனீவா பேச்சுவார்த்தை என்பது வெறும் கனவாக மட்டுமே இருக்கும்.

மு.தமிழ்ச் செல்வன்



# யுத்தப்பிரியர்கள்

**சிறிலங்காவில் ஆட்சிபீடமேறிய அரசாங்கங்களும் சரி கடந்த 25 வருடங்களுக்கு மேலாக நிறைவேற்று அதிகாரத்துடன் ஆட்சி புரிந்த சனாதிபதிகளாயினும்சரி வெளிக்கு என்ன தான் தேனொழுக சமத்துவம், சமாதானம், ஒரே நாடு என்ற வார்த்தைகளை உதிர்த்தாலும் அவர்களின் மனதில் தமிழ்மக்களை ஏமாற்றும் நயவஞ்சக எண்ணமே உள்ளது.**

சிங்கள இனவாதிகள், இனவாதக்கட்சிகள், படையினர் தென்னிலங்கையிலிருந்து வெளிவரும் ஊடகங்கள் என்பன கூட்டுச்சேர்ந்து இலங்கையை எப்படியாவது ஒரு யுத்தத்திற்குள் தள்ளிவிடுவது என்று கங்கணங்கட்டிக்கொண்டு செயற்படுவது எப்பொழுதோ தமிழ்மக்களால் புரிந்துகொள்ளப்பட்ட ஒன்று.

இதில் ஆட்சியாளர்கள் விதிவிலக்கானவர்கள் அல்ல எனினும், அவர்கள் சில வேளைகளில் அதனை நேரடியாகச் செயற்படுத்த முடியாதவர்களாக உள்ளனர். அதற்கு அவர்கள் யுத்தத்தினால் ஏற்படும் பாரிய பின்விளைவுகளுக்கு பதில் சொல்லவேண்டியவர்களாக இருப்பதே காரணமாகும். அதாவது அவர்கள் யுத்தத்தில் வெறுப்புக்கொண்டவர்களல்ல; தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை அழித்து ஒழித்து விடவேண்டும் என்ற விருப்பம் அற்றவர்கள் அல்ல. ஆனால் அவ்வாறான செயலில் இறங்குகையில் ஏற்படக்கூடிய விளைவுகளை எண்ணியே அவர்கள் போரை விரும்பாதவர்கள் போல் காட்டிக்கொள்ள முயலுகின்றனர்.

எவ்வாறாயினும் இவர்களும் கூட யுத்தம் நோக்கிய திசையிலேயே தமது செயற்பாடுகளை மறைமுகமாக நகர்த்திச் செல்பவர்களாக இருக்கின்றனர்.

இந்நிலையில் யுத்தத்தை ஒரே தீர்வாக முன்வைக்கும் இனவாதிகள், இனவாதக் கட்சிகள், ஊடகங்கள் என்பவற்றின் செயற்பாடுகள் கருத்துக்கள் என்பன பெரும் விசனத்திற்கு உரியவையாகவும் சிறிதும் முன் யோசனையற்ற நடைமுறைச்சாத்திய மற்றவையாகவும் உள்ளன.

தென்னிலங்கை இனவாதக்கட்சிகள் தமது பதவிமோகம் காரணமாக எத்தனையோ விதண்டாவாதக் கருத்துக்களை முன்வைப்பது வெளிப்படையானதே.

ஆனால் அடிப்படையில் அவை சிலவற்றை ஏற்றுக்கொள்ளாதவரை யுத்தம் ஒன்றே தீர்வு என்ற அவற்றின் கொள்கையை தமிழ் மக்களும் ஏற்றுக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

அதாவது முதலாவதாக தமிழ் மக்களின் போராட்டத்தை பயங்கரவாதமென அவை தொடர்ந்தும் மனப்பூர்வமாகவே நினைத்தால், யுத்தத்தின் மூலம் மட்டுமே தமது உரிமையை வென்றெடுக்க முடியும் என தமிழ் மக்கள் முடிவுக்கு வருவதைத்தவிர அவர்களுக்கு வேறுவழியில்லை. ஆனால் இன்னமும் கூட சிங்களப் பேரினவாதிகள் தமிழ் மக்களின் போராட்டத்தை "சர்வதேச பயங்கர வாதம்" என்ற வட்டத்துக்குள் கொண்டு வந்துவிட எடுக்கும் முயற்சியைப் பார்க்கும் போது அவர்கள் எங்கு நோக்கி நகருகின்றனர் என்பதைப் புரிந்துகொள்ளமுடியும்.

அதேவேளை ஆட்சியாளர்களுக்கும் இவ்விடயம் பொருந்தும். சிறிலங்காவில் ஆட்சிபீடமேறிய அரசாங்கங்களும் சரி கடந்த 25 வருடங்களுக்கு மேலாக நிறைவேற்று அதிகாரத்துடன் ஆட்சி புரிந்த சனாதிபதி களாயினும்சரி வெளிக்கு என்னதான் தேனொழுக சமத்துவம், சமாதானம், ஒரே நாடு என்ற வார்த்தைகளை உதிர்த்தாலும் அவர் களின் மனதில் தமிழ் மக்களை ஏமாற்றும் நயவஞ்சக எண்ணமே உள்ளது.

அத்துடன் அவர்களும் கடந்த 50 வருடங்களுக்கு மேலாகதமிழ் மக்களின் போராட்டத்தை அரச பயங்கரவாதம் மூலம் அடக்கி விடுவதற்காக முழு மூச்சாக செயற் பட்டதுடன் மறுபுறத்தில் விடுதலைப்போராட் டத்தை பயங்கரவாதமாக்க காட்டும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டனர்.

இப்பொழுது இப்பிரச்சினைக்குத் தீர்வுகாணத் தனக்கு ஒரு சந்தர்ப்பம் தருமாறு கோரும் மகிந்தராஜபக்ஷகூட ஒருபுறம் சமாதான முயற்சி எனக் கூறிக்கொண்டு சர்வதேச ரீதியாக தமிழ்மக்களின் விடுதலை இயக்கமான விடுதலைப்புலிகளை ஓரம் கட்டுவதற்கான செயற்பாடுகளில் ஈடுபட்டே வருகிறார்.

**வேலவன்**

அதேவேளை அவரின் கூட்டாளிகள், வெளிப்படையாகவே தமிழ் மக்களின் போராட்டத்தைப் பயங்கரவாதமாகச் சித்தரித்து அதைச் செய்யக்கூடாது; இதைச்செய்யக் கூடாது என்றுமட்டுமல்ல கண்துடைப்புக்காக மகிந்த எடுக்கும் சில நடவடிக்கைகளை கோபாவேசத்துடன் எதிர்ப் பவர்களாக உள்ளனர்.

இரண்டாவதாக இவர்கள் எல்லோருமாகச் சேர்ந்து சமாதானப் பேச்சுக்கள் அல்லது இணக்கப்பாடுகள் ஏற்படுத்துவதற்கான சூழல் சிறிது கூட உருவாகிவிடக்கூடாது என்பதில் குறியாகவுள்ளனர். இதற்கு கற்பனையான குற்றச்சாட்டுக்கள், அவதூறுப் பிரச்சாரங்கள், புனைகதைகள் என்பவற்றை மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் மூலம் இவர்கள் செய்வது என்னவென்றால் இன்று மட்டுமல்ல என்றுமே ஓர் இணக்கப்பாடு ஏற்படாதநிலை யையே ஏற்படுத்துகின்றனர். ஆனால் இது தம்மைத் தாமே சுருக்கிவிடுவது போன்ற தேயாகும்.

இதற்கு இப்பொழுதே நிறைய உதாரணங்கள் ஏற்பட்டுவருகின்றன. அதாவது கடந்த காலத்தில் சமாதான முயற்சிகளை எதிர்க்க வேண்டுமென்பதற்காக தமிழ் மக்களுக்கு எதிராகவும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராகவும் மட்டுமல்ல, ஏற்பாட்டாளராகச் செயற்பட்டு வந்த நோர்வேயையும் எதிர்த்த இவர்கள் இன்று கசப்புமருந்தை விழுங்குவதுபோன்று யதார்த்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டியவர்களாயினர்.

இதற்கு முன்னரும் 1980களின் இறுதியில் இந்தியாவை மூர்க்கத்தனமாக எதிர்த்த இவர்கள் இப்பொழுது அதனைத் துணைக்கு அழைக்கும் சூழலுக்கு உள்ளாகியுள்ளனர். ஆனால் இவ்வாறான அனுபவங்களிலிருந்தும் உண்மையான நிலையைப் புரிந்துகொள்ளாத அல்லது ஏற்றுக்கொள்ளாத வரையில் அவர்கள் எவ்வித பயனையும் ஈட்டப் போவதில்லை. அதுமட்டுமல்ல இவர்கள் எது நடக்கக்கூடாது என்று கூக்குரலிட்டுகொண்டு செயற்படுகிறார்களோ அதை நோக்கியே உந்தித் தள்ளுகிறார்கள். அதனை அவர்கள் புரிந்துகொள்ளும்போது அவர்களால் செய்யக்கூடியது எதுவும் இராது.

# 'இரும்படிக்கும் இடத்தில் ஈக்கு என்ன வேலை..?'



வெண்ணெய் திரண்டு வரும் நிலையில் பானையை உடைத்த கதையாய் இப்போது இனவாதக் கட்சியினரான ஜே.வி.பியினரும், ஜாதிகஹெல உறுமயவினரும் கோசமிடத் துவங்கியுள்ளனர். இவர்களிடம் எப்பொழுதுமே இனவாதத்தினை தவிரவேறெந்த நிரந்தர கொள்கைகளோ, திட்டங்களோ அற்றவர்கள் வாய் திறந்தாலே இனவாதத்தை தவிர வேறு எதனையும் எதிர்பார்க்க முடியாது. இது தமிழர்களுக்கு புதிதான விடயமல்ல. இருப்பினும் இவர்கள் இன்றைய மகிந்த அரசில் அங்கம் வகித்துக்கொண்டு நாடாளுமன்றத்திற்குள்ளும், வெளியிலும் நடத்தும் அரசியல் என்பது இந்த நாட்டிற்கு பெரும் சாபக்கேடாகவே உள்ளது.

பெரும்பான்மை மக்களின் ஆதரவை எவ்வாறேனும் தம்பக்கம் திருப்பி அரசியலில் ஓர் உச்ச நிலையை அடைவதற்கு ஜே.வி.பி ஆடும் அரசியல் ஆட்டம் என்பது ஏனையோர்களால் சகித்துக்கொள்ளத்தக்கதாக இல்லை. பச்சோந்திகள்போல் தங்களின் நலன்களுக்காக அடிக்கடி மாறிக்கொள்ளும் இவர்களின் ஒரேயொரு குறிக்கோள் இந் நாட்டின் ஆட்சியே.

இந்நிலையில்தான். மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறியது போன்று ஜே.வி.பியும், ஜாதிகஹெல உறுமயவும் சேர்ந்து புதிதாக அரசிடம் ஒரு கோரிக்கையை முன்வைத்துள்ளனர். அதாவது அரச பேச்சு வார்த்தைக்குழுவில் தாங்களும் இடம் பெறவேண்டும் என்பதுவே அந்தக்கோரிக்கை.

இது இவ்வாறிருக்க ஒஸ்லோவில் பேச்சு நடத்துவது பற்றி முன்னர் விவாதிக்கப்பட்டபோது அதற்கு கடும் எதிர்ப்புக்காட்டியது இவ்விரு கட்சிகளும். ஒஸ்லோவில் பேச்சுவார்த்தை நடத்த மகிந்த இணங்கினால் தாம் அரசிலிருந்து வெளியேறிவிடுவதாக ஜாதிக ஹெலஉறுமய எச்சரித்தும் இருந்தது. பின்னர் ஜெனீவாவில் பேச்சுநடத்த உடன்பட்ட போது தலைகீழாக மாறிய ஜாதிக ஹெல உறுமய பேச்சுவார்த்தையை ஒஸ்லோவிலேயே நடத்தியிருக்கலாம் என்றது.

இவ்வாறு நிமிடத்திற்கு நிமிடம் தங்களை மாற்றிக்கொள்ளும் இவர்கள் பேச்சு வார்த்தைக் குழுவில் இடம்பெற்றால் நிலைமை எப்படியிருக்கும்.....?

அத்தோடு அரச படைகளோடும் அதன் ஒட்டுப்படைகளுடனும் சேர்ந்தியங்கும் ஆயுதக்குழுக்களின் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்பட்டு தமிழ் மக்களின் இயல்பு வாழ்வு ஏற்படுத்தப்பட்டாலே ஜெனீவாவில் பேச்சு வார்த்தை என தமிழர் தரப்பால் வலியுறுத்தப் பட்டபோது விடுதலைப்புலிகள் தங்களது ஆயுதங்களை களைந்தாலே ஆயுதக்குழுக் களின் ஆயுதங்கள் களையப்பட வேண்டும் என அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் இவர்கள் பேச்சுவார்த்தைக் குழுவில் இடம்பெற்றால்.....?

மேலும் தமிழர்களால் ஏற்றுக் கொள்ளப்படாத தமிழர்களால் அன்று முதல் இன்றுவரை ஏற்றுக்கொள்ளமுடியாத தீர்வான ஐக்கிய இலங்கைக்குள் ஒற்றையாட்சிக்குள் தீர்வு என்பதனை விடாப்பிடியாக வலியுறுத்திவரும் இவர்கள் பேச்சுவார்த்தைக் குழுவில் இடம் பெற்றால்....?

அத்தோடு சமாதானம் பற்றி கடுகளவேனும் வாய்திறக்காத இவர்கள் மற்றும் புலிகளை யுத்தத்தின் மூலம் அழிக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்ற இவர்கள், என்றுமே நோர்வேயின் அனுசரணையையும், 2002ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையையும் ஏற்றுக்கொள்ளாத இவர்கள் பேச்சு வார்த்தைக் குழுவில் இடம் பெற்றால்.....? மேலும் எப்பொழுதுமே இத்தீவில் தமிழர்கள் சுய உரிமையோடு வாழ்வதை ஏற்றுக்கொள்ளாத இவர்களை பேச்சுவார்த்தைக் குழுவில் சேர்த்துக்கொண்டால் நிலைமை எப்படியிருக்கும்...........?

அதாவது இவர்களை அரச பேச்சு வார்த்தைக் குழுவில் சேர்த்துக்கொண்டால் எதைப் பேசுவது? எப்படிப் பேசுவது? நாட்டின் இனப்பிரச்சினையை சமாதான வழியில் எப்படித் தீர்ப்பது? என்பதனை விடுத்து.

எதைப் பேசி எப்படிக் குழப்புவது? மீண்டுமொரு யுத்தத்தை ஆரம்பித்து எப்படித் தாங்கள் இலாபமடைவது என்பதாகவே இவர்களின் செயற்பாடு காணப்படும் என்பதனை நாம் கூறித்தான் தெரிந்துகொள்ளவேண்டும் என்பதல்ல. ஏனெனில் இவர்களின் கடந்த கால வரலாறு தெளிவாகவே அதனைச் சுட்டி நிற்கிறது.

அத்தோடு மேற்படி கூறப்பட்ட விடயங்களில் உறுதியோடு காணப்படும் இவர்களை அதாவது போர்நிறுத்த உடன்படிக்கையையும், சமாதானத்தையும் ஏற்றுக்கொள்ளாத இவர்களை குறிப்பாக யுத்தத்தை விரும்புகின்ற இவர்களை போர்நிறுத்த அமுலாக்கம் தொடர்பில் பேசுவதற்காக ஜெனீவா பேச்சுவார்த்தைக்கு அழைத்துச் சென்றால் நிலைமை எப்படியமையும் என்பதனைச் சற்று சிந்தித்துப் பாருங்கள். அப்படியொரு துர்ப்பாக்கிய நிலை ஏற்படின் போர்நிறுத்த அமுலாக்கம் தொடர்பாகப் பேசும் ஜெனீவா பேச்சுவார்த்தை என்பது மீண்டுமொரு யுத்தத்திற்கான நாளைக் குறிப்பதற்கான பேச்சுவார்த்தையாகவே அமையும் என்பதில் சந்தேகம் ஏற்படமாட்டாது.

**மு.தமிழ்ச்செல்வன்**

பேச்சுவார்த்தைக்கான இறுதிச் சந்தர்ப்பமாக இதனை வழங்கியுள்ளனர் விடுதலைப்புலிகள். எனவே இதனை மகிந்த நல்ல முறையில் பயன்படுத்துவார் என நம்புகிறோம். மாறாக இவ்வாறான இனவாதக் கட்சிகளின் மகுடிக்கு சற்றேனும் மகிந்த அசைவாராயின் உடனடியாக மீண்டுமொரு யுத்தத்தை எவராலும் தடுக்க முடியாதாகி விடும். வெண்ணெய் திரண்டு வரும்போது பானையை உடைக்கும் இனவாதக் கட்சிகளின் வழமையான செயற்பாட்டிற்கு அரசு அனுமதியளிக்கக்கூடாது என்பது இந்நாட்டில் சமாதானத்தை விரும்பும் அனைவரினதும் விருப்பமாக இருக்கிறது.

**சர்வதேச நீதி, நியாயம், நியதி என்று எதுவுமே வழக்கில் இல்லை. ஒவ்வொரு நாடும் தனது தனிப்பட்ட நலன்களுக்காக எந்த மனித விழுமியங்களையும் எப்படியும் புரட்டிப்போடத் தயாராகவே செயற்பட்டு வருகின்றது. இத்தகைய உலகில் மற்றவர்களின் பரிதாபப்பார்வையினால் எதனையும் சலுகையாகப் பெற்றுவிடலாமென அங்கலாய்ப்பது வீணானது.**



# எமது பலத்தால் எழுவோம் நாங்கள்

**சு.ஞாலவன்**

'வரி, வட்டி, திறை ! ஏன் கேட்கிறாய் வட்டி ? எதற்காகத் தரவேண்டும் கிஸ்தி ? எங்கள் வயலில் வந்து நாற்று நட்டாயா ? களை பிடுங்கினாயா ? அல்லது அங்கே கொஞ்சி மகிழும் எங்கள் குலப்பெண்டிர்க்கு மஞ்சள் அரைத்துக் கொடுத்தாயா ? மானங் கெட்டவனே ! . . .' அச்சொட்டாக இப்படியே அல்லாதுவிடினும் கிட்டத்தட்ட இதே கருத்தை வலியுறுத்தி வீரபாண்டிய கட்டப்பொம்மன் பிரித்தானிய ஆட்சியாளர்களை நோக்கிக் கேட்ட கேள்விக்குப் பொருத்தமான பதிலை தனையும் ஆங்கிலேயர்கள் அளித்ததாகத் தெரியவில்லை.

மாறாக தங்களுடைய படைபலம் கொண்டு கேள்வி கேட்டவர்களை அடக்கி விடவே முனைந்தார்கள். இரந்து கேட்பது பிச்சை, அச்சுறுத்திப் பெறுவது திருட்டு ! இதில் இரண்டாவதைத் தமது வழமையாகக் கொண்ட காலனித்துவ ஆட்சியாளர்கள் தங்களது பிழைப்புகளை நியாயப்படுத்திக் கொள்வதற்காகவும் திருட்டிற்கு 'கௌரவமான தேட்டம்' என்ற வடிவத்தைக் கொடுப்பதற்காகவும் தங்களுக்குச் சாதகமாக சட்டங்கள் என்ற பெயரில் விதிகளை இயற்றிக் கொண்டார்கள்.

இன்னுமொரு நாட்டில் அடாவடித்தனமாகப் புகுந்து தமது நன்மை கருதி தாங்கள் இயற்றியதை அங்குள்ள சுதேசிய மக்கள் பின்பற்றுவதே 'ஒழுங்கு' என்று பிரித்தானியப் பேரரசு வாதிட்ட ஏககாலத்திலேதான் (யூலை 4, 1776) அமெரிக்கா தன்மீது பிரிட்டிஷ் சாம்ராச்சியம் செலுத்தி வந்த மேலாதிக்கத்திலிருந்து தன்னை விடுவித்துக்கொள்வதற்கான சுதந்திரப் பிரகடனம் 'ஐக்கிய அமெரிக்க மாநிலங்களில் வாழும் மக்களின் பிரதிநிதிகளாகிய நாங்கள் எங்கள் மக்களின் பெயரால், மக்களுக்கு இருக்கக்கூடிய அரசியல் பொறுப்பின் அடிப்படையில் சர்வதேச நியாயப்பாட்டை நோக்கி விண்ணப்பிப்பது என்னவென்றால், பிரித்தானியாவுடன் நாம் கொண்டிருந்த சகல கடப்பாடுகளிலிருந்தும் விடுபட்ட சுதந்திர புருசர்களாய் எங்களைப் பிரகடனப்படுத்திக் கொள்கிறோம் . . .' என்ற உள்ளடக்கத்துடன் வெளியிட்டது.

இதை ஏற்றுக்கொள்ள பிரித்தானியாவின் ஆதிக்கப்போக்கு மறுத்தது. இருந்தபோதிலும் எட்டு ஆண்டுப் போரின்பின் 1783 இலே படைபலம் கொண்டு 13 அமெரிக்க மாநிலங்களின் கூட்டு பிரித்தானியாவை வெற்றிகொண்ட பிற்பாடு அமெரிக்காகண்ட வளர்ச்சி காரணமாக பிரித்தானியா அதனை அனுசரித்துச் செல்ல முண்டியடிக்கும் ஒரு நாடாக மாறிவிட்ட நிலைமை இன்றுவரை தொடர்கிறது.

பிரித்தானியாவுக்கென சுயமாக ஒரு வெளிநாட்டுக்கொள்கை இருக்கின்றதாவென சந்தேகப்பட வைக்கும் அளவிற்கு அமெரிக்காவில் சேவல் கூவினால் லண்டன் ஆட்சிபீடம் தன் தூக்கம் கலைக்கும் போக்கு நிலவுகின்றது. இருந்தபோதிலும் பொதுமக்களின் இயல்பான பிறப்புரிமையாக இருக்கும் இறைமையை அடிப்படையாக வைத்து அமெரிக்காவிடம் மண் கவ்வவேண்டி நேர்ந்தபோதிலும், அப்படி ஒன்று இல்லாதவாறாகப் பாவனை செய்துகொண்டு தான் அடிமைகொண்ட ஆசிய, ஆபிரிக்க நாடுகளிடம் கனவான்-திருட்டைத் தொடர்ந்தும் அது மேற்கொண்டது.

ஆக அமெரிக்க மக்கள் படைபலத்தைக் கொண்டு தமது இறைமையை நிலைநாட்டிய போது ஏற்றுக்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்ட பிரித்தானியா அவ்வல்லமை இல்லாத மற்றைய நாடுகளை வழமைபோலவே வஞ்சித்துக் கொண்டது.

அதுசரி ! 1789 இல் நிகழ்த்தப்பெற்ற பிரெஞ்சுப் புரட்சிக்கு அடியெடுத்துக் கொடுத்ததாகவும், பொதுமக்களின் பேரால் விடுக்கப்பட்ட, நவீன உலகின் முதலாவது சுதந்திரப் பிரகடனத்தையும் அதையொட்டிய அரசியலமைப்பையும் கொண்ட அமெரிக்காவின் மக்களின் உரிமைகளை மதிக்கும்போக்கு இன்று எவ்வாறுள்ளது என்பதைக் குறிப்பாக மூன்றாமுலக நாடுகளில் ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாகும் மக்கள் ஒவ்வொருவரும் மிகத்தெளிவாகவே அறிவர்.

அதிலும் அண்மையிலே கொழும்பிலுள்ள அமெரிக்கத்தூதுவர் 'தமிழ் மக்களைத் தாங்கள் பிரதிநிதித்துவப்படுத்துவதாக புலிகள் எவ்வாறு கூறமுடியும் ?' எனத் தனது பரிதாபத்துக்குரிய சந்தேகத்தை வெளிப்படுத்தியதுடன், அரச பயங்கரவாதத்துக்குத் துணை போகக்கூடிய சில நிலைப்பாடுகளையும் முன்னிறுத்தியிருந்த பின்னணியில் வைத்து ஈழத் தமிழர்கள் அனைவருமே இவ்விடயத்தில் தெளிவாகவே உள்ளனர்.

அரசாங்கம் என்று சொல்லக்கூடிய ஒன்றை ஈராக்கில் நிறுவிக்கொள்வதற்கான தேர்தலில் காணப்பட்ட 55வீத வாக்காளர்ப் பங்களிப் பையே 'ஜனநாயகத்தின் வெற்றி' எனக் கொண்டாடிய திருவாளர் அமெரிக்கா ஒருமுறை வாக்களித்தும், மறுமுறை வாக்களிக்காமல் விட்டும் தமிழ் மக்கள் ஏகமனதாக விடுதலைப்புலிகளைத் தமது பிரதிநிதிகளாகச் சர்வதேசத் துக்குப் பறைசாற் றியதை அறியாரா ?

வட-கொரியா வைத்திருப்பதாகச் சொல்லும் அணுகுண்டை விட்டுவிட்டு 'ஈரானில் எதிர்காலத்தில் அணுகுண்டு இருக்கக் கூடிய வசதி, வாய்ப்புகள் உலக சமாதானத்துக்கானதொரு அச்சுறுத்தல்' என ஒரு குற்றச் சாட்டுடன் முழுஉலகமும் நேரம் மினைக்கெட்ட வண்ணமுள்ளது. இல்லாத ஒன்றை அல்லது ஒப்பீட்டளவில் முக்கியத்துவம் குறைந்த ஒன்றினை மிகைப்படுத்தி உலக அரங்கிலே தலைப்புச்செய்தியாக்கும் இப்போக்கிற்கு அந்தந்தத் தரப்புகளின் குறுகிய சுயலாபங்களே அடிப்படைக் காரணங்கள் ஆகவுள்ளன.

உலகில் தினந்தோறும் பெருந்தொகையிலான மக்களின் வாழ்வை அச்சுறுத்தி அழித்துவரும் எயிட்ஸ், செல்வந்த நாடுகளின் தொழிற்சாலைக்கழிவுகளினால் உண்டாகும் சூழல் மாசடைவால் அப்பாவி மக்கள் எதிர்கொள்ளும் சுகாதாரச்சீர்கேடுகள் எனப் பலதும் இருப்பது நாம் அறிந்ததே ! இதில் சர்வதேச அளவில் இயற்கை மாசடைவதை மட்டுப்படுத்தும் நோக்கில் யப்பானில் நிறைவேற்றப்பட்ட 'கியோற்றா தீர்மானம்' அமெரிக்காவினால் நிராகரிக்கப்பட்டது.

மேலும், வறிய நாடுகளில் எயிட்ஸ் நோயாளிகளுக்கான ஆகக்குறைந்த நிவாரணமாக வழங்கக்கூடிய அதிகவிலை-மருந்துகளை அந்தந்த நாடுகளிலேயே உற்பத்தி செய்து குறைந்த விலையில் சகலருக்கும் கிடைக்க வழி செய்யும் திட்டம் காரசாரமாகக் கண்டிக்கப்பட்டு மேலைத்தேயத்தினால் முடக்கப்பட்டது.

ஆனால், கடந்த 2 வருடங்களில் 90 இற்கும் குறைவான எண்ணிக்கையானவர்களைப் பலிகொண்டிருக்கும் பறவைக் காய்ச்சலை மட்டும் முழுஉலகமும் முண்டியடித்துக் கொண்டு உலக சுகாதார நிறுவனம், உலக வங்கி என்பவற்றையும் அணிசேர்த்தவாறு எதிர்கொள்ளத் தயாராயுள்ளது. பறவைக்காய்ச்சல் நோய்க்கான நிவாரணியாக நம்பப்படும் மருந்தை உள்நாட்டிலேயே உற்பத்திசெய்து கொள்வதற்கான உரிமையைக் குறிப்பிட்ட மேலைத்தேய நிறுவனம் இந்தோனேசியாவிற்குத் தானாகவே முன்வந்து இலவசமாக வழங்கியுள்ளது.

இந்த அதீத அன்புக்குக் காரணம் யாதென நினைக்கிறீர்கள் ? மற்றையவற்றைப் போலன்றி இந்தப் பறவைக்காய்ச்சல் பாஸ்போர்ட்,விசா, ஏற்றுமதி-இறக்குமதி ஒப்பந்தம் என எதுவுமேயின்றி வான்வழி வந்து எங்கே தங்கள் நாடுகளையும் நாசம் செய்துவிடுமோ என்ற அச்சமே அவர்களின் இந்த 'மனிதாபிமான' முகத்துக்குக் காரணம். கொபிஅனான் உட்பட முழு சர்வதேசமுமே சுனாமியின் போது காட்டிய அளவு கவனத்தை பாகிஸ்தானில் நடந்த புவிநடுக்கத்தைத் தொடர்ந்து ஏற்பட்டிருக்கும் மனித அவலம் குறித்துக்காட்டவில்லை.

பன்னாட்டு நிறுவனங்களின் பெயர்களில் ஐக்கியமும் சர்வதேசமும் ஒற்றுமையும் வாயளவில் உணர்த்தப்பட்டாலும் அவைசார்ந்த நடைமுறைக் கொள்கை வகுப்பில் அவை ஏனோ இடம்பிடிக்கத் தவறிவிடுகின்றன. அமெரிக்காவின் ஏகவல்லரசு விருப்பின் தன்மைகளின் பிரதிபலிப்புகளையே ஆங்காங்கு அவதானிக்க முடியும் அதேவேளை ஆழவேரோடிய இந்தப் போக்கினை 1933-1945 காலப் பகுதியில் அமெரிக்காவின் சனாதிபதியாகப் பதவிவகித்த ஃபிராங்க்லின் றூஸ்ஃபெல்ற் (Franklin Roosevelt) பற்றி நூலாசிரியர் ஒருவர் குறிப்பிட்டதை வைத்து ஒருபானை சோற்றுக்கு ஒருசோறு பதம்போலப் புரிந்துகொள்ளலாம் : 'எங்கு சென்றாலும் தானே முதன்மை வகிக்கவேண்டும் என்ற போக்கைக் கொண்டவர் அதிபர் றூஸ்ஃபெல்ற். திருமண வீட்டுக்குச் சென்றால் மணமகனாகவும், மரணவீட்டுக்குச் சென்றால் சடலமாகவும் தானே முக்கியத்துவம் பெற்றிருக்கவேண்டும் என்று கடுமையாக விரும்புபவர் அவர்' என்று அங்கதச்சுவையோடு அருமையாக உணர்த்தியிருக்கிறார் அந்த நூலாசிரியர்.

இவ்வாறானதொரு போக்குக் காரணமாக இஸ்லாமிய உலகின் எண்ணெய்யில் தான் தங்கியிருக்கவேண்டிய நிர்ப்பந்தத்தின் அடிப்படையில் அரேபியப்பிரதேசம் எங்கும் மேலாதிக்கம் செலுத்துவதற்காக அப்பிராந்தியத்தை யுத்தமயப்படுத்தி வரும் அமெரிக்காவிற்கு மிக அண்மையிலே தென்னமெரிக்காவில் ஒற்றையாக ஒரு கியூபாவே போதும்போதும் என்றிருந்தவேளையில், வெனிசுவெலாவைத் தொடர்ந்து அடுத்தடுத்து இப்போது கொலம்பியா, பொலிவியா, சிலி என்று பலநாடுகளில் (பெயரளவில் மட்டுமன்றி) இடதுசாரி-அமெரிக்க எதிர்ப்பு அரசுகள் பதவியேற்றுள்ளன.


அமெரிக்காவின் 15 வீத எண்ணெய்யை வழங்கிவந்த வெனிசுவெலா அதை சீனாவுக்கு ஏற்றுமதி செய்வதற்கான உடன்படிக்கைகளில் இறங்கியுள்ளது. சுவாரஸ்யமான உலகின் இன்னுமொரு புதினமாக நம்முடைய அனுசரணையாளர்களின் நாடுபற்றியது. இன்று 'மனித உரிமை' என்பது பன்னாட்டு அரங்கங்களிலே விரும்பிப் பேசப்படும் ஒரு கருப்பொருள்.

அழிந்துபோவதைப் பற்றித்தானே அதிகம் பேசப்படும். இந்தவகையில் 2ஆம் உலகயுத்த காலகட்டத்திலும் அதன் ஆரம்பகட்ட ஆக்கிரமிப்புகளின்போதும் நோர்வேயை ஆக்கிரமிததிருந்த யேர்மனியப்படையினருக்கும் நோர்வேஜியப் பெண்களுக்கும் இடையில் ஏற்பட்ட தொடர்புகளால் பிறந்த பிள்ளைகள் சகலரும் போரில் ஜேர்மனி தோல்வி கண்டதையடுத்து நோர்வேஜிய அரசினால் மனநோய் பாதிக்கப் பட்டவர்களுக்கான இல்லங்களில் கட்டாயமாகச் சேர்க்கப்பட்டிருந்தனர்.

(20 ஆம் பக்கம் பார்க்க)

# பலதும்... பத்தும்

## அகராதியின் வரலாறு




ஒக்ஸ்போர்ட் ஆங்கில அகராதி கி.பி. ஆயிரத்து எண்ணூற்று எண்பத்தி நான்காம் ஆண்டு பிரசுரத்திற்கு வந்து ஆயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்தி நான்காம் ஆண்டு வெளியானது. இதில் நான்கு இலட்சத்து பதின்னாங்காயிரத்து எண்ணூற்று இருபந்தைந்து சொற்களும் மூன்று இலட்சம் சொற்பொருள் இலக்கணங்களும் பதினெட்டு லட்சத்து இருபத்தேழாயிரத்து முந்நூற்று நான்கு சொல் உபயோகங்களும் பன்னிரண்டு நூற்றாண்டுகளாக நிகழ்ந்த சொற்களின் சரித்திரமும் அடங்கியுள்ளன.

## அதிகவிலை பொம்மை



ஜேர்மனிய நாட்டு நிறுவனம் ஒன்று உலகிலேயே மிக அதிகவிலை உள்ள கரடி பொம்மையை தயாரித்துள்ளது. இதன் விலை 60 இலட்சம் ரூபாய் ஆகும். இதன் முடி தங்க நூல்களால் ஆனது. கண்கள் வைரத்தால் ஆனவை. இதன் வாய் தங்கத்தால் உருவாக்கப்பட்டுள்ளது.

கரடி பொம்மைகள் தயாரிக்கப்பட்டதன் நூற்று இருபத்தைந்தாவது ஆண்டு விழாவையொட்டி தங்கத்தால் கரடி பொம்மை தயாரிக்கப்பட்டுள்ளது. மொத்தம் 125 பொம்மைகள் மட்டுமே தயாரிக்கப்பட் டுள்ளன.

## கொள்ளைக்காரர்களை பிடிக்க உதவிய கிளி!



அமெரிக்கா அருகே உள்ள எல்சல்வேடார் நாட்டில் உள்ள ஒரு கிளி கொள்ளைக்காரர்களைப் பிடிக்க உதவியது.

சன்சல்வேடார் என்ற இடத்தில் ஒரு வீட்டில் புகுந்த கொள்ளைக்காரர்கள் வீட்டில் இருந்த பொருட்களைக் கொள்ளையடித்த பிறகு அங்கு இருந்த கிளியையும் கூட்டோடு திருடிக்கொண்டு ஒரு காரில் தப்பித்தனர். அவர்கள் சென்ற வழியில் வழக்கமான சோதனைக்காக பொலிசார் மறித்தனர். அப்போது காரில் இருந்தகிளி கொள்ளை கொள்ளை என்று கீச்சிட்டது. இதனால் சந்தேகம் கொண்ட பொலிசார் காரை முழுவதுமாக சோதனை போட்டனர். அப்போது விலை மதிக்க முடியாத பொருட்கள் காரில் இருந்தன. இதைத்தொடர்ந்து கொள்ளைக்காரர்கள் கைது செய்யப்பட்டனர். கொள்ளைக்காரர்கள் வீட்டுக்குள் புகுந்ததும் கிளியின் எஜமானி கொள்ளை கொள்ளை என்று சொன்னதை கிளி திரும்பக் கூறியது. இந்தச் சம்பவத்திற்குப் பிறகு கிளி ஒரே நாளில் பிரபலமாகிவிட்டது.

## தவறான வானிலை அறிவிப்பு செய்தவர்கள் மீது வழக்கு

ருமேனியாவில் காஸ்டினெஸ்டி சுற்றுலா நகரில் உள்ள கோட்டல் உரிமையாளர்கள் வானிலை அறிக்கைதரும் அதிகாரிகள்மீது வழக்குத்தொடர இருக்கின்றார்கள்.

அவர்கள் மழை வரும் என்று வானிலை அறிவிப்புக் கொடுக்கின்றார்கள். ஆனால் அன்று வெயில் அடிக்கின்றது. இப்படி அடிக்கடி தவறான அறிக்கை கொடுப்பதால் எங்களது தொழில் பாதிக்கப்படுகின்றது. மழை பெய்யும் என்று இவர்கள் வெளியிடும் அறிவிப்பை நம்பி சுற்றுலாப் பயணிகள் வருவது குறைந்து போய் விடுகின்றது என்று கோட்டல் உரிமையாளர்கள் புலம்புகின்றார்கள்.

சரியாக கண்காணிக்காமல் தவறாக அறிக்கை கொடுத்த அதிகாரி அயோன் பொயானா வேலையிலிருந்து விலத்தப்பட்டார்.

## செவ்வாயில் பனிக்கட்டிக் குளம்



செவ்வாய் மீது விண் பொருள் ஒன்று மோதி அமைந்த குழியில் பனிக்கட்டிக் குளம்...!

ஐரோப்பிய விண்வெளி ஆராய்ச்சி நிலையத்துக்குச் சொந்தமானதும், செவ்வாய்க் கிரகத்தை அண்மித்து சுற்றி அதனை ஆய்வு செய்து வரும் விண்கலம் ஒன்று செவ்வாயின் வட அரைக்கோளத்தில் வடமுனைவு நோக்கிய தூரப் பகுதி ஒன்றில் பனிக்கட்டிக் குளம் ஒன்றை படம் பிடித்துள்ளது...!

இந்தப் பனிக்கட்டிக்குளம் விண்பொருள் ஒன்று செவ்வாயின் வட அரைக்கோளத்தில் மோதிய இடத்தில் அமைந்திருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன..!

செவ்வாயில் பனிக்கட்டி நிலையில் நீர் அவதானிக்கப்பட்டிருப்பதானது அங்கு ஏதோ ஒரு வடிவத்தில் உயிரினங்கள் வாழ்ந்திருக்கலாம் அல்லது வாழலாம் என்ற சாத்தியக்கூற்றை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளது..!

அவதானிக்கப்பட்டது பனிக்கட்டி அல்லாத வேறுபடிவாக இருக்கலாம் என்ற சந்தேகத்தை விஞ்ஞானிகள் நிராகரித்துள்ளனர்..!

## குண்டு பொலிசுக்கு வேலையில்லை



உடல் பருமனான பொலிசார் வேலையைத் தக்கவைத்துக் கொள்ளவேண்டும் என்றால் உடல் எடையைக் குறைக்க வேண்டும் என்று ருமேனியா நாட்டில் புசாவ் நகரில் உத்தர விடப்பட்டுள்ளது. பொலிசார் குண்டாக இருப்பதால் உடல் மெலிந்த திருடர்களை ஓடிப்பிடிக்க முடியாமல் தவிக்கின்றார்கள். இதனால் தினமும் உடற்பயிற்சி செய்து உடம்பை கட்டுக் கோப்பாக வைத்துக்கொள்ளவேண்டும் என்று எச்சரிக்கப்பட் டுள்ளனர்.


## பறவைகள் அழியும் ஆபத்து



உலகில் உள்ள மொத்த பறவைகளில் ஐந்தில் ஒரு பகுதி அழியும் அபாயத்தில் இருப்பதாக போர்டு லைப்இன்டர் நஷனல் என்றஅமைப்பு கூறியுள்ளது.

உலகில் மொத்தம் ஒன்பதாயிரத்து எழுநூற்று எழுபந்தைந்து பறவை இனங்கள் உள்ளன. அவற்றில் மூவாயிரத்து இருநூற்று பன்னிரண்டு பறவை இனங்கள் அழியும் ஆபத்தில் இருக்கின்றன. நூற்று எழுபத்தொன்பது பறவை இனங்கள் மிகப்பெரிய ஆபத்தில் இருக்கின்றன. பறவைகள் வசிக்கும் காடுகளை மனிதன் அழித்து வருவதால் பறவை இனங்கள் அழியும் ஆபத்தில் உள்ளன.

## சரியான ஓய்வு



வழக்கமான ஓய்வு எடுப்பது என்றால் வயிறு முட்டச் சாப்பிட்டு தூங்குவது என்றே நினைக்கிறோம்.

அப்படிச் செய்வது தவறுஎன்று பின்னர் உணர்ந்து வருந்துகிறோம்.

ஓய்வு என்றாலே உடல் உறுப்புக்கள், ஜீரண உறுப்புக்கள், மற்றும் மனம் ஆகிய மூன்றும் சேர்ந்து ஓய்வெடுப்பதுதான். நாம் வயிறு நிறைய சாப்பிட்டுவிட்டு ஓய்வெடுப்பது உடலுக்கு மட்டுமே ஓய்வு. ஜீரண உறுப்புக் களுக்கு அல்ல. உண்மையில் ஓய்வு எடுக்கும் போது வயிறு வெறுமையாக இருக்கவேண்டும். சாப்பாடு ஓரளவு செரிந்திருக்கும் நேரம் ஓய்வு எடுத்தால் தூங்குவதற்கு சக்தியும் கிடைக்கும். நோயாளி ஒருவர் இந்தமுறையில் ஓய்வு எடுத்தால் விரைவாக குணமடைவார்.

சாப்பிட்டவுடன் தூங்குவதும், மதுபானம் அருந்திவிட்டு மயங்கிக்கிடப்பதும் ஒன்று என்றுதான் சொல்லவேண்டும்.

# சுற்றிவளைப்பாகும் செயலமர்வுகள்..!

கடந்தவாரம் ஆசிரியர்குழுவொன்றை ஆசிரியர்களுக்கான நிகழ்ச்சியொன்றில் சந்தித்தேன். சொல்வதைவிட அவர்களிடமிருந்து கேட்பது நல்லது என்றெண்ணி அவர்களை சொல்லும்படி கேட்டேன். முதலில் தயங்கினார்கள். ஆனால் சொல்வதற்கு ஏராளம் கதைகளும், பிரச்சினைகளும், விசயங்களும் அவர்களிடமிருந்தன. அப்படியிருந்தும் அவர்கள் தயங்கினார்கள்.

அவர்கள் எப்போதும் எல்லாவற்றையும் கேட்டுப்பழகியவர்கள் போலிருந்தார்கள். அவர்களுடைய செவி மட்டுமே பாவிக்கப்பட்டு வந்தது போலிருந்தது. உதடுகள் எவையெல்லா வற்றையுமோ சொல்லத் துடித்தன. எதைச் சொல்வது? எங்கிருந்து சொல்லத் தொடங்குவது? எப்படிச் சொல்வது? என அவர்கள் தடு மாறுவதை அவர்களுடைய கண்களின் தத்தளிப்பில் கண்டேன். சோகத்தை அந்தக் கண்கள் பிரதிபலித்தன. எனக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது.



நான் தொடர்ந்து அவர்களைத் தூண்டினேன். மூன்று நாட்களாக அவர்கள் பங்கு பற்றிய அந்தப் பகிர்தல் நிகழ்ச்சி தொடர்பான எண்ணங்களை- அனுபவங்களை- அறிதல்களை சொல்லும்படி கேட்டேன். தயவோடு கேட்டேன். மிக நீண்ட நேர முயற்சியின் பிறகு தயங்கித்தயங்கி மெதுவாக அச்சத்தோடு தங்கள் மனதைத் திறந்தார்கள்.

முதலில் அந்தப் பகிர்தல் நிகழ்வுக்கு தாங்கள் வரவிரும்பாததைச் சொன்னார்கள். அவர்களுக்கு அது பகிர்தற்களமாக இருக்கும் என்று முன்பு தெரிந்திருக்கவில்லை. அவர்கள் அதனை ஒரு செயலமர்வு- பயிற்சி வகுப்பு என்றே கருதியிருந்தார்கள். செயலமர்வுகள் அவர்களுக்கு சலிப்பூட்டும் கதைகளைச் சொன்னார்கள். செயலமர்வு என்றால் வெறுப்பூட்டுமளவுக்கு அவர்களுடைய மனதில் பெரும் பாதிப்பை அளித்திருக்கிறது. அதைவிட செயலமர்வுகளில் அவர்களுக்கு துளியும் நம்பிக்கையில்லை. அநேகமான செயலமர்வுகள் பெரும்பாலும் நேரத்தை வீணடிப்பதில்தான் முடிகின்றன என்று கூறினார்கள்.

செயலமர்வுக்கும் அதை நடைமுறைப்படுத்துவதற்கான பாடசாலை வளச்சூழல்- கல்வி முறைமை என்பவற்றிலுள்ள முரண்கள் அதிகம் என்பதையும் குறிப்பிட்டார்கள். இன்றைய கற்பித்தல் ஆசிரியர்களை புதிதாகத் தேடுவதற்கும் சிந்திப்பதற்கும் இடமளியாத அளவுக்கு வேலைச் சுமையை அளித்திருக்கிறதைச் சொன்னார்கள். கற்பித்தலுக்கு வெறுமனே பாடக்குறிப்புகள் மட்டும் போதாது அதற்குமப்பால் பல விசயங்களை கவனிக்கவும், சேர்க்கவும் வேண்டுமென்றும் கூறினார்கள். இதைவிட தங்களுக்குரிய அடிப்படை உரிமையான வார விடுமுறை நாட்களையே இழக்கும் நிலை செயலமர்வுகள் என்ற வகையில் தமக்கு இழைக்கப்படுகின்ற கொடுமை என்று குமுறினார்கள்.

இப்போது உலகவங்கி தொடக்கம் பல்வேறு தொண்டர் அமைப்புகளும் தத்தமது தேவைக்கும் அதன் நோக்குக்குமாக செயலமர்வுகளை தொடர்ந்து நடத்துகின்றன. யதார்த்தத்துக்கு அப்பால்ன விடயங்கள் பல இடங்களிலும் வற்புறுத்தப்படுகின்றன. மாணவர்கள் கற்கக்கூடிய அமைதிச்சூழல்- வாழ்க்கை நிலைமை, குடும்ப அமைப்பு என்பனவற்றின் வளர்ச்சி குறித்துச் சிந்திக்காமல் வெறுமனே ஆசிரியர்களுக்கு மட்டும் மூளைச்சலவை செய்கிறார்கள் என்றவர்கள் பொங்கினார்கள்.

நீண்ட நேரமாக மௌனமாக இருந்த அவர்கள் சொல்லத் தொடங்கியதும் தமது துயரங்களையும் வெறுப்பையும் எண்ணங்களையும் எதிர்பார்ப்புக்களையும் அக்கறையையும் சிந்தனையையுமென எல்லாவற்றையும் கொட்டினார்கள். அவ்களைப் பொறுத்தவரை செயலமர்வுகள் எதிர்விளைவுகளையே தருகின்றன.

அந்தப் பகிர்தற்களம் அவர்கள் எதிர்பார்த்ததற்கு முற்றிலும் மாறானதாக இருந்ததாகச் சொன்னார்கள். தாம் செயலமர்வு ஒன்றுக்கே வருகின்றோம் என்ற உணர்வோடு வந்ததாகவும் ஆனால் அது முற்றிலும் தகர்ந்து வேறுவிதமாக ஒரு பகிர்தற்களம் விரிந்ததையிட்டு மகிழ்ச்சி தமக்குள் எல்லையில்லாமல் விரிந்தது என்றார்கள்.

ஏன் செயலமர்வுகள் ஆசிரியர்களின் மனதில் நம்பிக்கையற்றுப்போய் வெறுப்பூட்டுமளவுக்கு வந்திருக்கின்றன? செயலமர்வுகளைப்பற்றிய இந்தக் கருத்து வெறுமனே அந்த நிகழ்வில் கலந்துகொண்ட ஆசிரியர்களின் அனுபவம் மட்டுமல்ல பெரும்பாலான ஆசிரியர்களிடமும் கல்விசார்ந்த அதிகாரிகளிடமும் உண்டு. தனிப்பட்ட உரையாடல்களின்போது அத்தகைய அனுபவத்தோடு செயலமர்வுகள் பற்றி தமது கருத்துகளை பலர் பல சந்தர்ப்பங்களில் சொல்லியிருக்கிறார்கள்

கடந்த 15 ஆண்டுகளாக நம்பிக்கையற்ற விதத்தில் ஒரு குற்றச்சாட்டாக இந்தச் செயலமர்வு விவகாரம் பேசப்படுகிறது. ஒருபுறத்தில் அதேவேளை அது ஒரு வலுவான சடங்காக பின்பற்றப்பட்டும் வருகின்றது. மறுபுறத்தில் இது வேதனைமிக்க வேடிக்கைக்குரியது.

செயலமர்வுகள் கல்வி பற்றிய அறிதற்பரப்பை விரிப்பவை. கற்பித்தல் முறைசார்ந்த உத்திகள், பாங்குகள், அணுகுமுறைகள், ஊக்குவிப்புகள் போன்றவற்றைத் தெளிவுபடுத்துவன. அத்தோடு மாணவர்களோடு நெருங்கி உறவாடவும் அவர்களுடைய உளவியலை அறியவும் கூடிய வகைகளைத் தெரிவிப்பன. அதேவேளை குறைபாடுகள், பிரச்சினைகள் என்பன பாடசாலை மட்டத்திலோ வகுப்பறைச் சூழலிலோ, மாணவரிடத்திலோ, பெற்றோரிடத்திலோ இருப்பதைக் கண்டறிந்து மாற்றுவழி மூலம் அவற்றைத் தீர்த்து கற்பித்தலை மேம்படுத்த உதவுவன. இவ்வாறான நோக்கங்களோடு தொடங்கப்பட்ட செயலமர்வுகள் கற்பித்தல் உளவியலை புரிந்துகொள்ளாமல் கூடுதலான நேரம் எடுத்து நடத்தப்படுகிறது. ஒரு வழிமூலம் நடத்தப்படுகிறது. இது அங்கே ஆசிரியர்களிடத்திலேயே தோற்றுவிடுகிறது.

பின்னர் எப்படி மாணவர்களை வளப்படுத்தவும் ஆற்றுப்படுத்தவும் உதவும்?

இப்போது செயலமர்வுகள் அவற்றின் சிறப்பியல்புகளையெல்லாம் இழந்து ஆசிரியர்களுக்கு விதிமுறைகளைப் பெருக்கும் விதமாக மாறிவிட்டன. செயலமர்வுகளின் விதிகளால் தாம் தொடர்ந்தும் சுற்றிவளைக் கப்படுவதாக அவர்கள் உணருகின்றார்கள். அப்படி உணரக்கூடியதாகச் செயலமர்வுகள் மாற்றப்பட்டுவிட்டன. அநேகமான செயலமர்வுகள் அதிகாரி- கீழ் நிலையாளர் என்ற தோரணையுடன்தான் நடத்தப்படுகின்றன. இங்கேயே அடிப்படையில் தவறு நிகழ்ந்துவிடுகிறது. உண்மையில் விலகல் இங்கேதான் நிகழ்கிறது.

செயலமர்வில் இரண்டு தரப்புக்கள் சந்திக்கின்றன. ஒன்று, செயலமர்வில் விடயங்களைக் கூறவரும் தரப்பு, மற்றது கேட்கும் தரப்பு. கூறுவோர் மேல்நிலையாளர்களாகவும் கேட்போர் கீழ்த்தரப்பாகவும் உள்ளது. ஒருதரப்பு சொல்ல மற்றத்தரப்பு அவ்வளவையும் கேட்கும் விதியில் இருக்கிறது. விதியை இயற்றும் தரப்பு ஒன்றும் விதிகளால் சுற்றிவளைக்கப்படும் தரப்பாக மற்றதுமாக உணரப்படுகிறது. இது இருதரப்பும் இணைய முடியாத இடைவெளியைப் பெருக்கிக்கொண்டே இருக்கிறது.

உண்மையில் செயலமர்வில் இரண்டுதரப்புக்களும் சந்திக்கும்போது அந்தப் புள்ளியில் மெய்யான பகிர்தல் நிகழவேண்டும்.

பாடசாலை, மாணவர், கற்பித்தல், பெற்றோர் என்ற விடயங்களுடன் நேரடியான அனுபவத்திரட்சி கொண்டிருப்போர் ஆசிரியர்கள். அவர்கள் தங்கள் தரப்பை முன்வைக்க அது தொடர்பான ஆய்வு- கவனம்-பரிசீலனை என்பவற்றுடன் புதிய முறைமைகளை பரிசோதிக்கவும் புகுத்தவும் நடைமுறைப்படுத்தவும் கலந்தாலோசிப்பதாக செயலமர்வுகள் அமையவேண்டும். அப்படி அமையும்போது செயலமர்வுகள் பகிர்தல் உறவில் பொருளுடனும் நம்பிக்கையோடும் புத்துயிர்பெறும். செயலமர்வில் ஆர்வமும் பயனும் கிடைக்கும். அதுவே கல்வியை- கற்றலை- பிள்ளைகளை- சூழலை- எதிர்காலத்தை- எமது தேசத்தை மேம்படுத்த உதவும்.

"செயலமர்வுகளின் விதிகள், நடைமுறைகள் போன்றவற்றை நடத்தச்சொல்லும் நிறுவனங்கள், அமைப்புக்கள், தரப்புக்கள்தான் விதிகளை வரைந்துகொடுக்கின்றன. நாமெப்படி அவற்றையெல்லாம் மீறிச்



செய்யமுடியும்" என்று யாராவது கேட்கலாம்.

யாருக்குக் கல்வி? எதற்கு இந்த முயற்சிகள்? யார் பொறுப்பு நின்று செயலமர்வை நடத்துவது? இது போன்றவற்றுக்கான கேள்விகளை நாம் எமக்குள் எழுப்புவதன் மூலம் செயலமர்வுகளுக்கு புதிய முகத்தையும் புதிய வடிவத்தையும் புதிய உள்ளடக்கத்தையும் தரமுடியும். திறனுள்ளோர் எதனையும் தன் சமூகத்துக்கு வளம் சேர்க்கும் விதமாக மாற்றும் ஆற்றலைப் பெறுவர். ஆளுமை உள்ளவர்கள் எச்சூழலையும் வென்றே நிற்பர்.

ஒரு திறனுள்ள தரப்பு செயலமர்வு குறித்த புதிய அணுகுமுறையை ஆரம்பித்தால் அது நல்ல திசையில் நகரும் முன்மாதிரியாகும்.

பகிர்தல் என்பதே இன்றைய புதிய அறிவியல் முறைமையாகப் பின்பற்றப்பட்டு வருகிறது. பகிர்தலுக்கு முதலில் மற்றவர் பேசச் சந்தர்ப்பம் அளித்தல் முக்கியம். அதேபோல நாம் அதனைப் பொறுமையோடு- தெளிவாகவும் நிதானத்தோடும் அறியும் ஆர்வத்தோடும் மதிப்பளித்துக் கேட்கவேண்டும். அதற்கொரு பண்பாடு வேண்டும். அந்தப் பண்பாட்டின் வழியாக புதிய வாசல்களை சுலபமாகத் திறக்க முடியும். ஆனால் அதற்குத் தேவை அர்ப்பணிப்பு அறிவியலுடன் கூடிய தியாகம்.

நம்மில் பலர் எதையும் சொல்லுவதிலேயே அதிகம் பழக்கப்பட்டவர்கள். சொல்வது என்பது எமது சமூகச் சூழலில் அதிகாரமயப்பட்டதாக இருக்கிறது. இதனால் எல்லோரும் சொல்லவே விரும்புகிறார்கள். தனக்குத் தெரிந்ததையெல்லாம் சொல்லித் தன்னை நிறுவிவிடுவதிலேயே அதிகம் கவனமெடுக்கப்படுகிறது பலராலும்.

கேட்பது என்பது இரண்டாம் நிலைக்குள்ளாகவே பார்க்கப்படுகிறது. கேட்டலில் சுயசிந்தனைக்கு இடமளித்தல் என்பதற்கே இடமில்லை என்பதாக செவிகளை நிரப்பும் ஒரே வேலைதான் இடையறாது நடக்கிறது. இது எரிச்சலூட்டுவது. சொல்லும் குரல் இரைச்சலாகக் கணிக்கப்படுவது இதனால்தான். அது விரைவில் மதிப்பிழந்தும் போகிறது.

சொல்வதைவிடவும் கேட்பதை ஊக்குவித்தால் பல சிந்தனைகளையும் பல அனுபவங்களையும் பலவிதமான எண்ணங்களையும் அறிந்து கொள்ளலாம். நாம்தான் உலகம் என்றிருப்பதைவிட உலகத்தை நாமறிய அது உதவும்.

செயலமர்வுகள் புதிய முறைமைக்குச் செல்லவேண்டும் என்று ஒவ்வொரு ஆசிரியரும் விரும்புகின்றனர். அதற்கு சொல்வதைக் கேட்டறியக்கூடிய காதுகள் வேண்டும். அதற்கு முன் அவர்கள் தயக்கமின்றி தங்களின் அனுபவங்களைப் பேசக் கூடியதொரு சூழல் வேண்டும்.

அன்றைய பகிர்தற் களத்தின் இறுதிக் கணத்தில் அவர்கள் எப்போதுக்குமான நட்போடும் நல்லன செய்யும் ஆர் வத்தோடும் நெருங்கி ஒன்றிணைந்து நின்றது- அவர்களுடைய அந்தக் கண்களில் மிகுந்த, நம்பிக்கையும் மகிழ்ச்சியும் என்றென்றைக்குமான ஒளிபொருந்தியவை.

**வெளிவாசல் பாலன்**

மீண்டும் எப்போது சந்திப்போம் என்றொருவர் அங்கே கேட்டார். நாம் பிரிந்தாலல்லவா மீண்டும் சந்திப்பதற்கு? என்று பதில் சொன்னார்கள். இங்கே அதுவொரு பயனுள்ள புதுவழியேதான்.

# காரசாரம்

# உன்னைக் கொஞ்சம் மாற்று..!



ஒரு நாட்டில் பல தேசிய இனங்கள் வாழலாம். அப்படி வாழும் இனங்களில் தங்களை அதே நாட்டில் வாழும் ஆளும் இனத்துடன் கலந்து மறைந்துபோகும் இனங்களும் உண்டு. ஆளும்இனத்தின் பாண்டித்தியத்தில் தம்மை ஈடுபடுத்தி அதையே உயர்வாக எண்ணி நலிந்து போகும் இனங்களும் உண்டு. இரண்டுமேயில்லாமல் மேற்க்த்தய நாடுகளுடன் தம்மை ஐக்கிய மாக்கி அதில் கரைந்து போகும் இனங்களும் உண்டு. இவர்களின் நடுவே நான் என இனங்காட்டிக்கொண்டு, தனது சொந்த இன அடையாளங்களுடேனேயே வாழ முற்படுவோர் ஆதிவாசிகள் என அழைக்கப்பட்டு தன் இனத்திலிருந்தே ஒதுக்கி வைக்கப்படுவார்கள்.

இப்படிப்பட்ட ஆதிவாசிகள் அமெரிக்காவிலும் உள்ளனர். இந்தியாவிலும் உள்ளனர். சீனாவிலும் உள்ளனர். இவர்களின் உயர்வான இன்றும் தங்கியுள்ள நிலைக்கும் பாரம்பரியத்தைக் காப்பாற்றி வைத்திருக்கும் நிலைக்கும் என்ன காரணம் என்று ஆராய்ந்து பார்த்தால் அது அவர்களுடைய பெயராகும் இயல்பு என்பது விளங்கும். தன்னை அல்லது தம்மினத்தை அழித்து ஆக்கிரமித்த அந்நியனுக்குப் பயந்தோ அல்லது பணிந்தோ போகாமல், தன்னை மாற்றாமல் நானேநான் என நிலைத்துப்போன செவ்விந்திய மக்களை மயோரிகளை வியாட்நாமியரை நாம் மறந்து போகலாகாது.

தேசியத்தின் பண்பாடுகளை இன அடையாளங்களை அழிந்துவிடாமல் காப்பாற்ற பெருமுயற்சி செய்யவேண்டும். ஒரு இனம் மொழியால் மட்டும் இனங்காணபடுவதில்லை. தமக்கெனத் தனிப்பண்புகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

அந்த வகையில் பண்பாடுகளை நூதனசாலைகளிலோ, அல்லது புதினக் காட்சிகளாகவோ காட்டுவதால், கண்டுரசிப்பதால் மட்டும் அவை வளருவதில்லை. அவற்றை நாம் பின்பற்றினால் தான் வளரும். இன்று தமிழர்களின் வாழ்வியலை மூடாகூளையாகப் பற்றிக்கொண்டிருப்பது அந்நியக் கலாச்சார மோகம்.

அவர்களது சடங்குகள், சம்பிரதாயங்கள் அனைத்திலும் இது விரவி நிற்கிறது. இதைப்பற்றி இப்போது பாருங்கள். சிங்கள அரசின் நிகழ்ச்சிகளில் வரவேற்பை நிகழ்த்த அவர்களது கண்டிய நடனக்குழு வருகிறது. தமிழர்களுக்கு?

பாரம்பரிய நிகழ்ச்சிகளில் 'றபான' இடம்பெறுகிறது. எங்களுக்கு? ஒரு வம்சவழியான பழக்கமாக அன்றி கௌரவ அழைப்பாகக் கொள்ளப்படுவது 'வெற்றிலை வைத்தல்' அதாவது வெற்றிலை வைத்தழைத்தல் ஒவ்வொரு வீடுகளாகச் சென்று வெற்றிலை பாக்கு வைத்து வீட்டுக்கு, நடைபெறும் சந்தர்ப்ப நிகழ்வுக்கு வாருங்கள் என அழைத்தல். இந்தச் சடங்கு இன்றும் சிங்களவர்களின் அதியுயர் சடங்குகளிலும் கடைப்பிடிக்கப்படுகிறது. நாம் பத்திரிகை வைக்கத் தொடங்கி வெகுகாலமாகிறது.

எனக்குத் தெரிந்த ஒரு கிராமத்துப் பெரியவர் இருந்தார். எங்களூரில் அவரே அறிஞராயும் விளங்கினார். அவர் கூறுவார், வெற்று இலையானாலும் அது மங்களமானது. அதில் லட்சுமி வாசம் செய்வதாக ஒரு ஐதீகம் உண்டு. உயிரிலை அது. பத்திரிகைத்தாள், ஏற்கெனவே செத்துப்போன நெல்லின் வைக்கோல். இந்த வைக்கோலையும் அடித்துத் துவைத்து அதைக்கொன்று செய்வது கடதாசி ஆக உயிரற்ற அழைப்பு என்பார். நாங்கள் அப்போதெல்லாம் பெரியவர்களுடைய பேச்சுக்கு மறுபேச்சுப் பேசமாட்டோம். எனவே, அவர்களிடம் நிறையவே கற்றுக்கொண்டோம். இப்போதுதான் பெரியவர்கள் வாய்திறக்க முடிவதில்லையே.

நிறைகுடம் வைக்கும்போதும் நெல்லே சிறந்தது. பூரணமானது. அரிசியில் பச்சையரிசி இரண்டாம் பட்சம் - புழுங்கலரிசி இறந்த அரிசி அதில் வைக்கவே கூடாது என்பார்.

பூரண பொற்கும்பம் வைத்து வரவேற்பது மரபு- பொற்கும்பம் இயலாதவர்கள் மட்கும்பமே வைக்கவேண்டும். இப்படி எவ்வளவோ இன்று எமது கலாச்சாரம் 'வெல்கம்' என வாசலில் எழுதி வரவேற்பதாக மாறிவந்துவிட்டது. கலாச்சார ரீதியாக நாம் எவ்வளவை இழந்துவிட்டோம்.

தமிழ், தாலாட்டில் இல்லை. ஏன் தாலாட்டே சினிமாப்பாடலாக மாறிவிட்டது. இதேபோன்றுதிருமண வைபவங்களும் பெருமளவு ஆங்கிலச் சடங்குகள், தென்னிந்தியச் சடங்குகள், ஆங்கிலோ இந்திய உணவுவகைகள் அதேயளவுக்கு முஸ்லிம் சிங்கள பரிமாறல் முறைகள் என பல இனங்களின் கலாச்சாரங்களையும் உள்வாங்கித் தன் இனமானத்தை மறந்து தவிக்கிறது.

பல தேசங்களுக்கும் தமிழர் பறந்து போனது இன்றைய வரலாறு. போன போன இடங்களில் தமது இனஅடையாளங்களைத் தொலைத்தவர்களும் அதை அங்கு மீட்டுப் பார்த்து மகிழ்பவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

இதேயளவினதாக முஸ்லிம் மக்கள் தமிழர்களுக்கு முன்னதாகவே உலகநாடுகளெங்கும் பரந்து செறிந்து வாழ்ந்தனர். இன்றும் வாழ்கின்றனர். அங்கெல்லாம் அவர்கள் தமது இன அடையாளங்களைப் பேணியே வருகின்றனர். நூறுபேர் உள்ள அவையில் இவர் முஸ்லிம் என்று அடையாளம் கொள்ள முடிகிறது. தமிழர்களை அப்படி அடையாளம் காண முடிவதில்லை. தேசியத்தின் அடிநாதம் இனத்துக்கெனத் தனியடையாளம் அது. மொழியை அடுத்து பாரம்பரிய கலைகலாச்சார மரபுகள் இடம்பெறுகின்றன. முஸ்லிம்கள் ஒரு போது இதை இழந்துவிடத் தயாரான போது அல்லது நிர்ப்பந்திக்கப்பட்ட போது முஸ்லிம் சட்டம் மார்க்க ரீதியாக உருவாக்கப்பட்டு அது நடை உடை சடங்குகள் மணவாழ்க்கைத் திருமணம் விவாகரத்து என அனைத்தையும் வரையறைக்குள் கொண்டு வந்தது.

தமிழர்களுக்கும் விசேடமான சட்டம் இருந்தபோதும் அது ஒல்லாந்து அரசின் விசுவாசிகளாக மாறிய டொன் சுவான்களால் உருவாக்கப்பட்டதாலோ என்னவோ, நடை உடை கலாச்சாரம் மரபுகள் என்பனவற்றைக் கருத்திலெடுக்காமல் விட்டுவிட்டது. ஆக தமிழர்களுக்கான ஒரு சட்டத்தையும் கூட தமிழர்களிடமிருந்து அந்நிய அடிவருடிகளாக ஆனவர்களே செய்தனர். நல்ல வேளையாக பிரித்தானியக் கொலனி ஆட்சி மாறியது. அவர்களது 'சட்டத்தின் முன் சகலரும் சமம்'என்ற கோட் பாடு வலிமைபெற்றது. சாதியத்துக்கும் பெண் உரிமைக்கும் மாற்று வழிகள் கிடைத்தன.

எமது கலாச்சார வேர்களை இழந்து போகாமல் அவற்றைக்காப்பாற்ற நாம் ஏதாவது செய்யவேண்டும். சட்டங்கள் திட்டங்கள் பயன்தராது உயரிய தேசப்பற்றே நம்மை விடுவிக்கப்போதுமானது.

நாட்டின் பெயரை கேட்கும்போதும் சிலிர்க்காத உள்ளம் யாருக்காவது உண்டா? தன் ஊரின் பெயரை உயர்த்த விரும்பாத மனிதர்கள் யாருமுண்டா? தனது குடும்பத்தை அடையாளம் சொல்லி மகிழாத குடும்ப அங்கத்தவர்கள் உண்டா?

அப்படியெனில் இது என்தேசத்தின் பாடல், இது என் தேசத்தின் ஆடல், இது எம் ஆன்மா என்றும் இது நம் உணவுப் பழக்கம் இது எம் வாழ்வியல் என்று கூற ஏன் தயங்குகிறோம். நாமும் நமது வாழ்வும் தனிதுவமானது என்பதை ஏன் கூறமறுக்கின்றோம். எதிர்காலத்தில் மலரும் தமிழீழத்தின் தமிழராக நாம் எம்மை இனங்காட்ட நாம் எம்மை மாற்றிக்கொள்வோம் மகிழ்வாக.

**மாயா**

---



# சங்கதி தெரியுமோ..?

**பேரன்:-** என்னணை 'டல்'லடிச்சுப் போய் இருக்கிறாய்...ங... என்ன பிரச்சினை.

**விசாலாட்சி:-**-ச்ச... என்னத்த சொல்லுறதடா இப்ப இந்த எஞ்ஜியோக்கள் செய்யிற வேலை ங.. வந்தமோ... சனத்துக்கு ஏதுங் குடுத்தமோ எண்டு போகாம இப்ப சும்மா வீட்டுக்க கிடக்கிற பெண்டுகளுக்கு சூக்காட்டுற வேலையெல்லோ செய்யினம்.

**பேரன்:-**எட அப்பிடியென்ன செய்யினம்...

**விசாலாட்சி:-** என்னடா தெரியாதமாதிரிக் கேட்கிறாய். உவையோட இஞ்சயிருக்கிற நிறுவனங்களும் சேந்துதானே உரப்பித் திரியினம்.

**பேரன்:-**அப்பிடி என்ன..தான் நடக்குது?

**விசாலாட்சி:-**பொடியா... ஏதோ சமத்துவமாம்.

**பேரன்:-**எட பால்நிலைச் சமத்துவம் அதேணை.

**விசாலாட்சி:-** டேய் என்ன சமாவாக் கதைக்கிறாய் ங... இதென்ன ஆட்டுப்பால், மாட்டுப் பால், புட்டிப்பால் விவகாரமே- எல்லாம் ஆண் பெண் சமத்துவமாமடா.

**பேரன்:-**நல்ல விசயந்தானே. பெண்டுகளெண்டா நெடுக குசினிக்கயே கிடக்கவேணுமே. எப்பன் உலக நடப்புக்களுந்தெரியத்தான் வேணும்.

**விசாலாட்சி:-**அ.. உலக நடப்புத் தெரிஞ்சு என்னசெய்யப்போகின. ஆங்..இன்னுமின்னுஞ் சிலவுதான் கூடினது. இவயள் திருந்தவோ-

**பேரன்:-** சும்மா புலம்பாதயணை. கிழடுகட்டையளுக்கு இப்பத்தயப் பிள்ளையளும் தங்களப் போல அடக்க ஒடுக்கமா இருக்கவேணுமெண்டது தான் நோக்கம்.

**விசாலாட்சி:-**அய்யோ அய்யோ அப்பிடி ஒண்டுமில்ல எங்களுக்கேன்ரா பொல்லாப்ப. நாலுபொண்டுகள் ஒரு பயிற்சிப் பட்டறையில போய் என்ன படிச்சுக்கொண்டு வருகினம். ஏதும் நல்ல விசயம்? பேய்ப் பொடியா எத்தினை விதமாப் பட்டுப்புடவையள் வந்திருக்கு, எத்தினை விதமா நகையள் வந்திருக்கு எண்டத மட்டும் தெளிவாய் அறிஞ்சு வச்சிருக்கினம். வேறயேதும்?

**பேரன்:-**இல்லையெண்டு சொல்லேல்ல, முப்பத்திரண்டுக்கும் ஆம்பிளையளின்ர கையெதிர்பார்த்ததுகள் இண்டைக்குத் தாங்கள் உழைக்குதுகள், தங்கட பணத்தில வாங்கிக் கட்டுதுகள். அது பெருமைதானே.

**விசாலாட்சி:-**என்னத்தச் சொல்லு இரவுபகல் ஏற்றம் தாழ்வு எல்லாம் உள்ளதுதான் வாழ்க்கை -இரவோ பகலோ தொடர்ந்திருந்தாச்சரியோ. ஒருவர் வீட்டைப் பார்த்தா மற்றவர் வெளியால உள்ளதைப் பார்க்கோணும். அப்பதான் குடும்பம் ஒரு சீராப்போகும். இதென்னண்டா.. ரெண்டு பேருஞ் சுத்த வெளிக்கிட்டு-வீடு நாசம்.

**பேரன்:-**என்ன நாசம்? என்னணை நாசம்...ங? ரெண்டு பேரும் உழைச்சா வீட்டுக்கு ஒரு வசதி தேடேலாதே...

**விசாலாட்சி:-**வசதியோ எனக்கு நல்லா வருது வாயில...தூ...கொஞ்சம் பொறடா நீ நரகலோகத்தப் பார்த்திருக்கிறியே?

**பேரன்:-**இல்லையெணை.

**விசாலாட்சி:-** புருசன் பெண்சாதி ரெண்டு பேரும வேலைக்குப்போற, பிள்ளையள் ஒண்டிரண்டு பள்ளிக்கும் போறதா உள்ள ஒரு வீட்டுக்கு காலமையில போயிருந்து பார். நரகலோகமெண்டா என்னண்டு தெரியும்.அதிலயும் பால்குடிப்பாப்பாவும் ஒண்டு இருந்திட்டா..

**பேரன்:-**சும்மா விடணை உதெல்லாம் ஒரு பிரச்சினை. இந்தநாளயில ஒரு ஆயாவப் போட்டுச் சம்பளம் குடுத்தா முடியுது.

**விசாலாட்சி:-**ஆயாவோ பேயா. எங்கயடா இருக்கு ஆயா.. ங் உங்கட பெண் விடுதலைக் கோட்பாடுகளுக்க ஆயாப் பொண்டுகள் அடங்கயில்லயோ.. அவயளுக்கு சுயபொருளாதாரத்திட்டமில்லையோ. நல்லாயிருக்கடா.. அப்ப...

**பேரன்:-**பொறணை பொறு வெளிநாடுகள்ளயெல்லாம் குழந்தைகள் காப்பகம் எண்டு ஒண்டிருக்கு. இஞ்ச உங்களப்போல வயது போன சீவனுகள் வீட்டுக்கு வீடு இருக்கிறியள்தானே. பார்க்கலாந்தானே.

**விசாலாட்சி:-**ஓமடா எங்களுக்கு காசிக்குப் போனாலும் கறுமந்துலையாது. பிள்ளை பாக்கப் பருவமெண்டாத்தானே வச்சிருப்பியள். இல்லாட்டி முதியோரில்லம் கட்டிப் பெருக்கிப் போடுவியள்.

**பேரன்:-**உப்பிடி வீட்டில உள்ளவையோட வாயடிச்சுக்கொண்டிருந்தா வச்சிருக்கேலுமே.

**விசாலாட்சி:-**நாங்களும் உங்களுக்கு மூக்கு வடியுது வீட்டுக்க பேலுறியள் எண்டு தூக்கி வெளியால போட்டிருந்தா இப்ப உதெல்லாஞ் சொல்லுவியளே.

**பேரன்:-** போதுமணை விடு எதெதுக்கெல்லாம் போராடுறதெண்டில்லயிப்ப இனி நீயும் கிளம்பி விட்டா உலகம் உருப்படுமா.

**விசாலாட்சி:-**உருப்படியா ஏதும் நடந்தா உருப்படுந்தானே.



சிறுகதை

# அம்மா ரீச்சர்

அம்மா ரீச்சர் என்று சொன்னாலும் ரீச்சர் அம்மா என்று சொன்னாலும் ஒரே ஆள்தான்.

வீட்டில் அம்மா. பள்ளிக்கூடத்தில அவ எங்கட வகுப்பாசிரியை. மற்றப்பிள்ளையள் அம்மா ரீச்சர் என்று தான் என்னிடம் சொல்லுவார்கள்.

அப்பிடிச் சொல்லுறதும் சரி என்கிறது போல அம்மா பள்ளிக்கூடத்தில் வந்தும் அம்மா வேலை பார்ப்பா.

வீட்டில வந்தும் ரீச்சர் வேலை பார்ப்பா. அம்மா ரீச்சரை பள்ளிக் கூடத்தில சில பிள்ளைகளுக்குப் பிடிக்காது. ஆனால் றோஜாப்பூவுக்கு நல்லாப் பிடிக்கும். ஆனால் றோஜாப்பூவை மற்றப் பிள்ளைகளுக்குப் பிடிக்காது.

றோஜாப்பூ என்னுடைய பெஸ்ட்பிறன்ட் அதனால்தான் அம்மா ரீச்சரை அவளுக்குப் பிடிக்குமோ தெரியவில்லை.



றோஜாப்பூவுக்கு அம்மா இல்லை. ஓர் அண்ணா இருக்கிறார். அவரும் எங்கட பள்ளிக்கூடத்தில் தான் படிக்கிறார்.

றோஜாவின் அப்பா கூலி வேலை செய்யிறவர். பெயர் முத்துராமன். நல்லாப் படம் பார்ப்பார். சினிமாப் படக் கதாநாயகன் மாதிரியே நடை, உடை, பாவனை எல்லாம்.

றோஜா என்கிற நடிகையைப் போல் தன்னுடைய மகளையும் ஆக்கவேண்டுமென்று தான் மகளுக்கு றோஜா என்று பெயர் வைத்தவர்.

நான் ஆறாம் வகுப்புப் படிக்கும் போதுதான் றோஜா எனக்கு அறிமுகமானவள்.

அன்றிலிருந்து றோஜாப்பூ என்று தான் நான் அவளைக் கூப்பிடுவேன். அவள் என்னை மல்லிகைப்பூ என்று கூப்பிடுவாள்.

நாங்கள் இப்பிடி இன்ரிமேற்றாப் பழகிறது சில பேருக்குப் பிடிக்காது.

மற்ற மற்ற ஆசிரியர்மார் றோஜாவையும் அண்ணாவையும் இளக்காரமாகத்தான் பார்ப்பினம்.

எடுபிடி வேலைகள் செய்யிறதென்றால் றோஜாவையும் அண்ணாவையும்தான் கூப்பிடுவினம்.

ஒரு நாள் எங்கட உப அதிபர் றோஜாவின் அண்ணாவைக் கொண்டு கோழி உரித்தவர். பள்ளிக்கூட நேரத்தில பள்ளிக்கூட வளவுக்குள்ளேயே நின்று கோழி உரிக்கிறதைக் கண்ட அம்மா ரீச்சர்,

“நீ படிக்கிறதுக்கு வந்தனியோ? கோழி உரிக்க வந்தனியோ என்று அண்ணாவிடம் கேட்க,

“கலா ரீச்சர்தான் வெட்டி உரிக்கச் சொன்னவ” என்று அழுதழுது அண்ணா சொன்னவர்.

வெட்டிய கோழியின் இரத்தத்திலும் பார்க்க அண்ணாவின் கண்ணீர் அதிகம் சிவப்பாக இருந்தது.

அதைக்கண்ட அம்மா ரீச்சர் கலாவாசன் ரீச்சரிடம் போய் “ஏன் இப்படிப் பிள்ளையைக் கொலைகாரன் ஆக்கிறியள்” என்று கேட்க,

“உமக்கு இதுகளில தலையிட உரிமை இல்லை பேசாமல் போம்” என்று கத்தினா.

ஆராவது ஆசிரியர்மார் இவ செய்யிறதைப் பற்றிக் கேட்டால், இரும் உமக்குச் செய்யிறன் வேலை என்று சொல்லி விட்டு அவையளுக்கு நெருக்கடிகளை ஏற்படுத்திப்போடுவா.

வலயத்தில இருக்கிற ஆக்களும் அவவுக்கு ஏற்ற ஆக்கள்தான். அதால தான் எல்லோரும் அவவுக்குப் பயம்.

கலாவாசன் ரீச்சரின் சப்போட் இருந்தால் பள்ளிக்கூடத்தில என்ன வேண்டுமென்றாலும் செய்யலாம்.

அவரின் ஆதரவு எங்கட றோஜாப்பூவுக்கும் அண்ணாவுக்கும் கிடையாது. ~~அதனாலதான்~~ எல்லோரும் அவவுக்குப் பயந்து றோஜாவையும் ~~அண்ணாவையும் கேவல~~மாகப் பார்க்கினம்.

பெற்றதாய் இல்லாத றோஜாவுக்கு அம்மா ரீச்சர் தான் தாய் மாதிரி. றோஜா அடிக்கடி எங்கட வீட்டிற்கு வருவாள். அவள் வராத நாள்களில் நான் அவர்களின் வீட்டிற்குப் போவேன்.

ஞா. மணிமேகலை

ஒரு நாள் றோஜாப்பூ பள்ளிக்கூடத்திற்கு வரவில்லை. அண்ணா மட்டும் வந்திருந்தவர்.

“றோஜா ஏன் வரவில்லை” என்று அண்ணாவிடம் நான் கேட்டேன்.

“இனிமேல் பள்ளிக்கூடம் வரமாட்டன்” என்று சொல்லிக் கொண்டு வீட்டில நிக்கிறா.

“ஏன்”

“தெரியாது”

சரி பின்னேரம் வீட்டிற்குப் போய்க் கேட்போம் என்று தீர்மானித்துக் கொண்டு பள்ளிக்கூடம் விட்டதும் நான் றோஜாவின் வீட்டிற்குப் போனேன் அங்கே றோஜா இல்லை.

நான் திரும்பி எங்கள் வீட்டிற்கு வந்தபொழுது றோஜாவும் அவருடைய அப்பாவும் அம்மாவுடன் ஏதோ கதைத்துக் கொண்டு இருந்தார்கள். அப்பாவின் முகத்தில் கோபத்தின் சுவடுகள் கொப்பளித்தன.

றோஜாவின் முகத்தில் கண்ணீர் வழிந்திருந்தது. இந்தக் கோலத்தில் றோஜாவை ஒரு நாளும் நான் பார்த்ததில்லை.

அம்மா அவர்களுக்கு ஆறுதல் கூறி றோஜாவை நாளைக்குப் பள்ளிக்கூடம் வரவேண்டுமென்று கூறி அனுப்பி வைத்தா.

அம்மா என்னைப் போலவே றோஜாப்பூவையும் நேசிக்கிறவ. நான் வேறு அவள் வேறு என்று பிரித்துப் பார்ப்பதில்லை.

இது நடந்து ஒரு கிழமைக்குப் பின்னர் தீபாவளி வந்தது. அன்று காலை நான் கிணற்றடியில் நின்றபொழுது.

“என்னடி வேணும்” கர்ச்சனை போன்ற அம்மாவின் குரல் கேட்டு நான் பயந்து விட்டேன். பயந்தபடியே அம்மாவைத் திரும்பிப்பார்த்தேன்.

முற்றம் கூட்டிக்கொண்டு நின்ற அம்மாவின் எதிரே றோஜாப்பூ நின்றாள்.

நாக்குத் தெறிக்கிற மாதிரி அம்மா கேட்டகேள்வியால் நான் மட்டுமன்றி றோஜாப்பூவும் அதிர்ந்து விட்டாள் என்பது அவளைப் பார்த்த போது விளங்கியது.

“நான் சும்மா வந்தனான். ரீச்சர்”

“என்னடி சும்மா என்று சொல்லுறாய் அரைவாசி தெரியிற உடுப்பையும் போட்டுக்கொண்டு வந்து... சொல்லிப் போட்டன் உந்த உடுப்போடை வாறதெண்டால் இந்தப்பக்கம் வராதை உது எனக்கும் பிடிக்காது. என்ர பிள்ளைக்கும் பிடிக்காது. உதுகளைப் பார்த்துத் தானடி ஆம்பிளையள் பழுதாகிறவங்கள்.”

“உதில நிக்காமல் ஓடு, நிண்டியெண்டால், விளக்கு மாத்துத் தடியாலதான் தருவன் மங்களம்”

றோஜா அம்மாவிடம் தீபாவளிப் பரிசு வாங்கிக்கொண்டு அழுதழுது போய் விட்டாள்.

உவா உப்பிடித்தான் கோவம் வந்தால் படபட என்று வெடிச்சுத்தள்ளுவா. அதுவும் இன்று தீபாவளி நாள் பார்த்து கூடுதலாகச் சத்தவெடி போட்டிருக்கிறா.

பாவம் றோஜா அவளுக்கு அம்மா இல்லை. உடுப்பு வாங்க அப்பாதான் போயிருப்பார். அவர் படத்தில பார்க்கிற சினிமா நடிகைகள் உடுக்கிற ஆள் முக்கால் ஆடை கால் மாதிரி உடுப்பை வாங்கி வந்திருக்கிறார்.

இப்ப எல்லாப் பிள்ளையளும் தானே வெட்டுச் சட்டை போடுகினம். பிள்ளையள் மட்டுமே பிள்ளைகள் எட்டு அடி பாய்ந்தால் தாய்மார் பதினாறு அடி பாய்வினம். பிள்ளைகளிலும் பார்க்கப் பெரிய பெரிய இறுக்கமான வெட்டுச் சட்டைகளைப் போட்டுக்கொண்டு திரியினம். எங்கட அம்மாவுக்குத்தான் அது கூடாது.

நான் நேற்றுப் பின்னேரமே கேட்டனான் றோஜாப்பூவுக்கென்று நாங்கள் தைத்த புதுச்சட்டையைக் கொண்டு போய்க் கொடுத்து விட்டு வரவா என்று.

அம்மாதான் சொன்னவ “நாளைக்குக் காலை நானும் வாறன் அவர்களின் வீட்டை கொண்டு போய்க் குடுப்பம்” என்று..

அங்க போகவென்று தான் நான் குளித்துக்கொண்டு நின்ற போது றோஜாப் பூ வந்தவள். இவ பேசிக் கலைத்து விட்டா.

இனி எந்த முகத்தோட றோஜாவிடம் போறது?

ரீச்சர் ரீச்சர் என்ற குரல் கேட்டு நான் எட்டிப் பார்த்தேன். றோஜாவும் அப்பாவும் வந்துகொண்டிருந்தார்கள். றோஜா இப்போது வேறு ஒரு சட்டை அணிந்திருந்தாள்.

றோஜாவின் முகத்தில் மலர்ச்சி தெரிந்தது. அப்பாவின் முகத்தில் குற்ற உணர்ச்சி மேலோங்கியிருந்தது.

அவர்களைக் கண்டதும் “வாங்கோ” என்று அம்மா வீட்டிற்குள் கூப்பிட்டா.

“நான் தெரியாத்தனமாப் பிள்ளைக்கு ஒட்டுச் சட்டை வாங்கிப்போட்டன் ரீச்சர் அதுக்காக என்னை மன்னிச்சுக் கொள்ளுங்கோ ரீச்சர். இனிமேல் ஒரு காலத்திலையும் பிள்ளைக்கு இறுக்கமான ஒட்டுச் சட்டை வாங்கமாட்டன் ரீச்சர்.

என்ர பிள்ளையை உங்கட வீட்ட வரவேண்டாம் என்று மட்டும் சொல்லிப் போடாதையுங்கோ ரீச்சர் என்று சொல்லி றோஜாப்பூவின் அப்பா கண் கலங்கி அழுதார். ●

# அறிவு அமுது நாட்குறிப்பேடு

வன்னியிலே உபயோகம் உள்ள அறிவியல் இலக்கிய, தத்துவ நூல்களைப் பெற்றுக்கொள்ளக் கூடியதான ஒரு அமைப்பினை அறிவு அமுது புத்தக சாலை உருவாக்கி பல்வேறு இடங்களில் தனது கிளை களை வியாபித்து ஆலமரமாக விழுது விட்டுள்ளது.

வாசிப்பு ஆர்வம் உள்ள சகலருக்கும் துணையாகும் அறிவு அமுது காலத்துக்குக் காலம் பல்வேறு புதிய நூல்களையும், பழைய நூல்களையும் மீளவும் வெளியீடு செய்து பயனுள்ள வெளியீட்டு முன் மாதிரியினை நிகழ்த்திக்காட்டி வருகிறது.

எங்கள் தாயகத்தில் பல்வேறு துறை சார்ந்த கட்டுமானங்கள் வளர்ச்சி பெற்று வருவது போலவே கலை இலக்கிய வெளியீட்டு முயற்சிகள் வரவேற்கப்பட வேண்டிய விடயங்களாகும்.

அரசியல் விடுதலை போலவே பெருண்மிய விடுதலையும் அவசியமானது. அதனைவிட முக்கிய மானது எமது சொந்த அடையாளங்களை, கலை பண்பாட்டு விழுமியங்களை பாதுகாத்தலும், மேம்படுத்தலும் எமது பாரம்பரியங்களை பண்பாடுகளை பேணுகின்ற அதேவேளை நாங்கள் புத்தாக்கம் பெறவேண்டியதும் சமகாலத்து அறிவியல் நுட்பங்களுடன் இணைந்து வளர,வாழ வேண்டியதும் முக்கியமாகும்.

எனவே எந்த விடயத்தினையும் நாம் எமக்கேற்றவாறு, எமது வரலாறு, பண்பாடு, அரசியல், சமூக, பொருண்மிய பின்னணிகளோடு இணைந்ததாக வளர்த்தலும் மேம்படுத்தலும் சிறப்பானதாகும்.

ஒருகாலத்தில் எங்கள் புத்தகசாலைகள் வருட முடிவுக்கு முன்னரே நாட்காட்டிகளாலும், நாட்குறிப் பேடுகளாலும் நிறைந்து விடும்.

நாட்காட்டிகளில் எத்தகைய படங்கள் அல்லது காட்சிகள் முதன்மை பெற்று இருக்கும் என்பதை இங்கு விஸ்தாரமாக விளக்கவேண்டிய தேவை இருக்காது.

முற்றிலும் யதார்த்தத்தைக் குழிதோண்டிப் புதைத்து வெறும் கனவுலக ஜிகினாத் தனங்களுக்கு முன்னுரிமை கொடுக்கும் திரைப்படக் காட்சிகள் அல்லது அந்த திரைப்படக் கதாநாயகன் கதாநாயகி களின் படங்கள் கொண்டதாக அவை காணப்படும்.

யார் செய்த அற்புதமோ இப்போது அவை கடைகளில் அவ்வாறான நாட்காட்டிகள் தொங்குவதும் இல்லை. வீடுகளில் அலைவதும் இல்லை. அவ்வாறான ஒரு மாற்றமே நாட்குறிப்பேட்டிலும் இந்த வருடம் ,ஏற்பட்டுள்ளது. நாட்குறிப்பேடுகளில் இந்த மாற்றத்தினை அறிவு அமுது கொண்டுவந்துள்ளது.

பொதுவாக நாட்குறிப்பேடுகள் ஒவ்வொரு மனிதனதும் நாளாந்த வாழ்க்கையோடு தொடர்புபட்டது. பல்வேறு பதவி நிலைகளில் உள்ள மனிதர்களாக இருந்தால் என்ன சாதாரண மனிதர்களாக இருந்தால் எனன குறிப்பேடு பாவிப்பவர்கள் ஏராளம். கடைசி தமது நாளாந்த வரவு செலவு கணக்குகளையாவது குறித்து வைப்பதற்கு நாட்குறிப்பேடுகளை பாவிப்பார்கள்.

இது தவிர திட்டமிட்ட முறையில் செயற்படும் பலருக்கு இதுவே அடிப்படையானது. நிகழ்கால எதிர்காலச் செயற்பாடுகளை வேலைகள் தொடர்பான மேம்பாடுகளை அறிய, கண்காணிக்க இந்தக் குறிப்பேடு அவசியமானது. முக்கியமாக தனது வேலைகளை ஒழுங்காகவும் சிறப்பாகவும் செய்யத்துடிக்கும் ஒருவர் குறிப்பேடுகளை பாவிப்பதில் கண்ணும் கருத்துமாக இருப்பார்.

இதற்கு மேலதிகமாக தமது நாளாந்த வாழ்க்கையில் முக்கியமான சம்பவங்களை நாட்குறிப்பேடுகளில் எழுதுவோரும் உள்ளனர். கலை இலக்கியப் படைப்பாளிகள், அரசியல் தலைவர்கள், விடுதலை இயக்கங்களின் போராளிகளின் நாட்குறிப்பேடுகள் - அதில் வரும் தகவல்களால் முக்கியத்துவம் பெறுவதும் உண்டு.

அவ்வாறு முக்கியத்துவம் பெற்ற நாட்குறிப்பேடுகள் பின்னர் நூல்களாக வெளிவந்து சிறப்புப் பெற்றன.


"நான் தோற்றுப் போகலாம் அதன் பொருள் வெற்றி சாத்தியமற்றது என்பதல்ல. எவரெஸ்ட் சிகரத்தில் தோற்றவர்கள் எத்தனையோ பேருண்டு. ஆனால் இறுதியில் எவரெஸ்ட் சிகரம் வெல்லப்பட்டது." என்று சொன்ன விடுதலைப் போராளி எர்னஸ்டோ சேகுவேரா அமெரிக்க சி.ஐ.ஏ உளவாளிகளினால் கொல்லப்பட்ட போது அவரிடம் இருந்து மீட்கப்பட்ட அவருடைய நாட்குறிப்பேட்டை ஒரு மில்லியன் டொலருக்கு விற்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டதாம்.

1966 நவம்பர் 7 ஆம் திகதி தொடக்கம் 1967 ஒக்டோபர் 8 வரையிலான காலப்பகுதியைக் கொண்ட இந்த நாட்குறிப்பேடு பொலிவியன் நாட்குறிப்பேடு" என்ற தலைப்பில் நூலாக வெளிவந்தது.

இந்த நாட்குறிப்பேடு புத்தகமாக வெளி வந்தபோது அது உலகை அதிர வைத்த ஒரு அற்புதமான நாட்குறிப்பாக போற்ற வைத்தது.

"இன்று புதிய அத்தியாயம் தொடங்குகிறது. பண்ணைக்கு இரவில் வந்து சேர்ந்தோம். பயணம் முழுவதும் தொந்தரவின்றி நன்றாக அமைந்தது.




நாங்களாக புனைந்துகொண்ட மாறுவேடத்தில் நானும் பாஅன்கோவும் தனித்தனியாக இரண்டு ஜீப்புகளில் இரண்டு நாட்கள் பயணம் செய்து இங்கே வந்தோம்."

1966 இல் நவம்பர் 7 ஆம் திகதி சேகுவேரா எழுதிய நாட்குறிப்பில் மேற்கண்டவாறு தொடர்கிறது.

அண்மையில் மறைந்த தமிழகத்து எழுத்தாளர் சுந்தரராமசாமி அவர்களின் இறுதிநேர நாட்குறிப்பேட்டுப் பதிவுகள் அண்மையில் வெளிவந்துள்ளன.

இவ்வாறு நாட்குறிப்பேடு-எத்துணை சிறப்பானது என்பது மாத்திரம் அல்ல நாட்குறிப்பேடு பாவனை கூட எவ்வளவு உபயோகமானது என்பதை புரிந்துகொள்ளலாம்.

**இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன்**

உண்மையில் நாட்குறிப்பேடுகளில் எமது நாளாந்த தேவைகளுக்கான சில அடிப்படைத் தகவல்கள் இருப்பது வழக்கம். ஆனால் அவை எமது வாழ்வியல் எமது அரசியல் பொருளாதார வரலாற்று விடயங்களை உள்ளடக்கியதாக அமைவதில்லை.

ஆனால் அதனை ஈடு செய்யும் வகையில் தேவையான பொதுத் தகவல்களுடன் எமது மண்ணையும், எமது வரலாற்றுத் தகவல்களையும் இணைத்து அறிவு அமுது நாட்குறிப்பேடு வெளிவந்துள்ளது சிறப்பான ஒரு விடயமாகும். பக்கத்துக்கு பக்கம் இவ்வாறான உபயோகமான தகவல்களுடன் கருத்தாழமும், எழுச்சியும் கொண்ட வசனக் கோர்வைகளையும் கொண்டுள்ளது.

அடக்கமறு
அத்து மீறு
திமிறி எழு
திருப்பியடி

என்பது போன்ற வரிகள் எழுச்சியை ஊட்டுவன. இங்கு முக்கியமாக கவனிக்கவேண்டிய விடயங்கள் யாதெனில் எங்கள் தாயகம் தொடர்பான அவசியமான தகவல்களை இந்த நாட்குறிப்பேடு கொண்டுள்ளது.

குறிப்பேட்டின் ஒவ்வொரு பகுதியும் உரிய முறையில் பயன்படுத்தி அவ்வவ் இடங்களில் தேவையான வரலாற்றுத் தரவுகள், முக்கியமானவர்களின் நினைவுதினங்கள் என்பன குறிப்பிடப்பட்டுள்ளன.

மொத்தத்தில் சகலருக்கும் பயன்படுத்தக் கூடிய வகையில் வடிவமைக்கப்பட்ட இந்த நாட்குறிப்பேடு சகலருக்கும் பயன்தரக்கூடியதாகும்.

## மனிதக்குரல்!

தடுத்து வைக்கப்பட்டிருக்கிறேன் நான்
குற்றச்சாட்டுக்கள் ஏதுமின்றி.
விசாரணைகள் இன்றியே
என்மீதான தீர்ப்பு எழுதப்படப்போகின்றது.
வானத்தில் இப்போது
சூரியனா சந்திரனா?
சுற்றுப்புறத்தில்
மழையா? வெயிலா?
ஏதுமறியேன் நான்!
என்னை ஏன்பிடித்து வந்தார்கள்
என்பதும் நானறியேன்.
திரும்ப முடியாத நிமிர முடியாத
சுவர்களின் நடுவே
எனக்கு வாழ்த்துப்பாடுகின்றன கொசுக்கள்.
தலைகவிழ்ந்து என்
தலைவிதி எண்ணி மறுகும்
என்னிடம் கேட்கிறார்கள்,
ஒப்புதல் வாக்குமூலம்.
நானென்ன செய்ய?
அழுக்கான ஆடை
சவரம் செய்யப்படாத முகம்
ஒட்டிய வயிறு என
வறுமைதந்த என் கோலத்தை
தடயமென்கிறார்கள்.
மேலாடைக் கிழிசலைப்
பொத்தவும் வக்கற்ற என் மனைவி
'அப்பா வருவாரென்று'
ஆசையோடிருக்கும் என் செல்வங்கள்
எப்படிச் சொல்வேன்
இங்கிருப்பதாக
காற்றில்லை
ஒளியில்லை
கண்ணீர்த்துளிகளைத் துடைக்க முடியாமல்
கைகளிலும் விலங்கு.
என்னினமே என்சனமே
எவருமறியாமல்
எனக்கு எதுவும் நடக்கலாம்
அவர்களது தேசவழமையில்
இப்போது அவசரகாலமாம்
தமிழர்களே
தெரிந்திருங்கள்.

ஆதிலட்சுமி சிவகுமார்

## உழுது "கொல்லும்" எழுது கோல்!

எழுது கோள்கள் இனி
தொழுது கொள்ளாது.
எல்லாம் துணிந்து
எழுந்துவிட்டன;
பகையை
உழுது 'கொல்ல'
இனி ஒரு நாளும்
அழுது கொள்ளாது
நம் உறவுகள்...
மாணவர்களே
வாருங்கள்!
பழுது கொள்ளட்டும்
பகை.
விழுது கொள்ளட்டும்
விடுதலை...!!!

கு.பா.தீபச்செல்வன்



# வீடு

நாம் ஒருநாளும் அடுத்தவரின் நன்மைகளை எதிர்பார்த்து எமது நல்ல விடயங்களை செயல்படுத்தத் தவறக்கூடாது. கடமையைச்செய் பலனை எதிர்பாராதே என்பதைப்போல் எம் மனநிலை இருக்கவேண்டும்.

எங்களுடைய மனச்சாட்சிக்குச் சரியான முறையில் நாம் நடந்தால் பிறரின் உபகாரங்கள் எமக்கு தேவையில்லை. அட நான் அவனுக்கு இவ்வளவு நன்மைகள் செய்தும் என்னை அவன் மதிக்கவில்லையே என்ற தீராத வேதனை எமக்கு இருக்கத்தான் செய்யும். எனினும் அவன் எம்மை மதிக்கவில்லை என்பதற்காக நாம் அவனுக்குக் கேடு விளைவிக்கலாமா?

**பதவி உயர்வைவிட எமக்கு பண்பான குணங்களின் நிலையே நிலையான உயர்வாகும்.**



## கொடுப்பதில் குறைவில்லை

"தினை விதைத்தவன் தினைஅறுப்பான், வினை விதைத்த வன் வினை அறுப்பான்" என்பதைப் போல் நாம் நன்மை செய்யும் போது அதனுடைய பலாபலன் எப்படியும் எமக்குக்கிடைத்தே தீரும். அதுபோன்றே தீமையின் விளைவுகளும் எமக்குக் கிடைக்கும். அதில் இருந்து நாம் தப்பிக்கொள்ள முடியாது.

நாம் ஒருவருக்கு உதவி செய்கிறோம் ஆனால் எமக்கு அவர் உதவி செய்யாவிட்டாலும் வேறு ஒருவரால் என்றாலும் நாம் இன்னல்பட்டுத் தவிக்கையில் அந்த உதவி கிடைத்தே தீரும்.

கோடி கோடியாய் பணம் இருந்தாலும் அதன் மதிப்பு நாம் கொடுத்து வாழாதபோது கால் தூசிக்குச் சமனாகிறது. நாம் ஒரு கையால் கொடுக்க மறு கையில் இன்னொன்று வரும்.

மனிதன் குறைகளையே சுட்டிக் காட்டும் இயல்புகொண்டவன். அதற்காக நாம் செய்யும் நிறைவான செயல்கள் இல்லாமல் போய்விடுமா? அடுத்த மனிதன் எம்மை வாழ்த்தாத போதிலும் மனச்சாட்சி எம்மை வாழ்த்த வேண்டும். அந்த திருப்தியே பெரிது.

கொடுமைகள் புரிந்து நாம் கோடீஸ்வரராய் வாழ்வதிலும் பார்க்க கொடுத்துக்கெட்டு நாம் ஏழையாய் வாழ்வதே மன நிம்மதி. பணம் பணம் எனப் பஞ்சாய்ப்பறக்கும் மனிதன் மனத்தை மகிமைப்படுத்த வேண்டும். எம்மிடம் அள்ளிக் கொடுக்க ஒண்டும் இல்லாத போதும் இருப்பதில் ஒரு துளியாயினும் கிள்ளிக்கொடுக்க வேண்டும்.

நாம் செய்யும் நன்மைகள் வீண் என ஒருக்காலும் நினைக்கக்கூடாது. நாம் மற்றவர் எம்மை மதிக்க வேண்டும் என எண்ணி மடத்தனமாக செயற்படலாமா?

நல்லதைச் செய்யும்போது ஏன் நாம் வெட்கப்படவேண்டும். இன்றைய ஆண், பெண்கள் தமக்குக் கௌரவக்குறைவென எண்ணி சில நன்மையான வேலைகளைக்கூடச் செய்யமறுக்கின்றனர். நாம் எந்தத் தொழிலைச் செய்தாலும் அதில் மனித நேயம் பேணப்படவேண்டும். பதவி உயர்வைவிட எமக்கு பண்பான குணங்களின் நிலையே நிலையான உயர்வாகும். உண்மையில் சிலர் தாங்கள் எவ்வளவு நன்மை செய்தும் தமக்கு கெட்ட பெயர்தான் எனக் கவலைப்பட்டுக் கதைக்கின்றனர்.இந்த நெஞ்சங்கள் ஒன்றைச் சிந்திக்கவேண்டும். மனிதரால் நன்மை கிடைப்பது பெரிதல்ல. மனச்சாட்சி எம்மை துன்புறுத்தாமல் நாம் நிம்மதியாய் கண்மூடித் தூங்க வழி சமைப்பது எங்கட நன்மைகளே. தீமைகள் செய்து தீயின் மேல்படுத்து வேதனைப்படுவதைக் காட்டிலும் நன்மையின் செயற்பாடுகளைச் செய்வித்திருப்பது எமக்கு ஆத்ம திருப்தியைத் தரும் என்பதில் ஐயமில்லை.

அவர்கள் எமக்கு ஒன்றும் தராயினம் அவர்களுக்கு ஏன் நாம் கொடுக்கவேண்டும் என்ற எண்ணம் எமக்கு இருக்கவே கூடாது. அப்படி நாம் இருந்தால் அவர்களுக்கும் எமக்கும் என்ன வித்தியாசம். நிலையில்லா இவ்வுலகில் அந்தரத்தில் ஊஞ்சலாடும் எம் வாழ்க்கை இறுதியில் எதைக்கொண்டு போகின்றோம். இறந்த பின் அதைஇதைச் சொல்லி ஒப்பாரி வைக்கும் மனிதன் அவன் இருக்கையில், தாகம் தீர்க்க தவறிவிடுகிறான். எமக்கு கை நிறையப் பணம் இருந்தென்ன மனம் (கொடுக்கும்) வேண்டுமே.

சு.சி.தமிழினி



## ஒளிசிந்தும் எதிர்காலம்

உலகில் பிறந்து உயிர்வாழ்கின்ற ஜீவராசிகள் எல்லாம் பல்வேறு தேவைகளிற்காக போட்டியிடுகின்றன. ஒன்றில் உணவுக்காக இருக்கலாம். அல்லது உயிர்வாழ்தலிற்காக இருக்கலாம். இன்றேல் கல்வியைப் பெறுவதற்காக இருக்கலாம். இன்னும் எத்தனை எத்தனையோ இருக்கலாம்.

இப் பூமியில் மானிடராய் பிறந்த எம்முள்ளும் பலவற்றிற்குப் போட்டி உண்டு. எந்த மானிடனாயினும் தான் முன்னேறி உயர்நிலையை அடையவே விரும்புவான். அவ்வாறு விரும்பும் ஒவ்வொரு மானிடனும் ஒவ்வொரு படியும் உயர்வதற்கு அவன் போட்டியிடும் தன்மை, போட்டியிடும் விடயம் என்பனவும் ஆதிக்கம் செலுத்துகின்றன.

அரசியலுக்குள் போட்டி, நிறுவனங்களுக்குள் போட்டி, மாணவருக்குள் போட்டி என நீண்டு செல்கின்றது போட்டியின் பட்டியல். மாணவர்களிற்குள் போட்டி என்பது நிச்சயமாய் இருக்கவேண்டியதொன்று. மாணவர்களிற்குள்

**முன்னேறத் துடிக்கும் ஒவ்வொருவரின் இதயத்துடிப்போடு சேர்த்து போட்டியும் துடித்துக்கொண்டிருக்க வேண்டும். போட்டியின்றி முன்னேற்றமில்லை.**

போட்டி இருப்பதனாலேயே அவர்கள் மென்மேலும் மேலதிக தகவல்களை தேடியறியவும், ஊக்கத்துடன் கல்வி கற்கவும் முடிகிறது. கல்வி கற்கின்ற மாணவரிற்குள் போட்டி இருக்கலாம். ஆனால் பொறாமை இருக்கவே கூடாது.

போட்டி என்பது நண்பர்களிற்குள் கூட ஏற்படலாம். படிக்கும் நேரத்தில் போட்டியாளர்கள். ஏனைய நேரங்களில் நண்பர்கள்.இது அவர்களை ஆக்கப்பாதையில் இட்டுச்செல்லுமே தவிர அழிவுப் பாதையில் இட்டுச் செல்லாது.முன்னேறத் துடிக்கும் ஒவ்வொருவரின் இதயத்துடிப்போடு சேர்த்து போட்டியும் துடித்துக்கொண்டிருக்க வேண்டும். போட்டியின்றி முன்னேற்றமில்லை.

நீங்கள் கல்லூரியிலும் சரி, கல்வி நிலையங்களிலும் சரி உயர்ந்து விளங்குவதற்கு உகந்த வழி போட்டியே. ஒரு இலக்கை தெரிவு செய்யுங்கள். அதை நோக்கி போட்டியிடுங்கள். சிலவேளை அடுத்தவரின் இலக்கும் அதுவாக இருக்கலாம். எனவே இலக்கை அடைவதற்காக கடுமையாக உழையுங்கள்! அவ்வாறு உழைப்பீர்களாயின் ஒளி சிந்தும் அழகிய எதிர்காலம் உங்கள் கைகளில் தவழும் என்பது வெள்ளிடைமலை.

—நிதர்சா விஜயகுமார்.

*வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர்பார்ப்பதோடு, இப்பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள், மற்றும் குமரகுரு பரிசுத்திட்ட கூப்பன் ஆகியவற்றை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.*

வீடு,
வெள்ளிநாதம், ஈழநாதம்,
யாழ்சாலை, கிளிநொச்சி.

## முட்டைக் கட்லட்




தேவையான பொருட்கள்:-

| | |
|---|---|
| உருளைக்கிழங்கு | -250 கிராம் |
| முட்டை | -7 |
| வெங்காயம் | -50 கிராம் |
| பச்சை மிளகாய் | -6 |
| மிளகுதூள் | -அளவாக |
| உப்புத்தூள் | -அளவாக |
| எலுமிச்சம் பழம் | - 1/2 பாதி |
| றஸ்க் தூள் | -தேவையான அளவு |
| தே. எண்ணெய் | - 1/2 போத்தல் |

செய்முறை:-

★ஆறு முட்டைகளை அவித்து சரி பாதியாக வெட்டி மஞ்சள் கருவை நீக்கிக் கொள்க.

★கிழங்கை அவித்து மசித்து மஞ்சள் கருவையும் குறுணலாக வெட்டிய வெங்காயம், மிளகாயுடன் மிளகு, உப்புத்தூள்,எலுமிச்சம் பழச்சாறு என்பவற்றைக் கலந்து குழைக்கவும்.

★ஒவ்வொரு முட்டைப் பாதிகளையும் கிழங்குக் கலவையைச் சேர்த்துப் பூரணமாகிய உருண்டைகளாக்கவும்.

★அடித்த முட்டைக் கலவையுள் தோய்த்த உருண்டைகளை றஸ்க் தூளில் புரட்டிக் கொதித்த எண்ணெயிலிட்டுப் பொன்நிறமாகப் பொரித்தெடுக்கவும்.




குமரகுரு புடைவை, அழகுப்பொருள் வாணிபத்தின் பரிசுத்திட்டம்

வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடைவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.
நீங்கள் செய்யவேண்டியது கீழ்காணும் கூப்பனை வெட்டி நிரப்பி அனுப்ப வேண்டும். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது.

குமரகுரு பரிசுத்திட்டம்– 85

பெயர்:...............................................

முகவரி:...............................................

...............................................

குறிப்பு:
ஈழநாதம் 'நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.

மெல்லுடலிகள் பகுப்பில் ஓரோட்டுடலிகளுக்கு அடுத்தபடியாக பெரிய வகுப்பு இருவோட்டுடலிகள். இந்த வகுப்பில் பத்தாயிரம் இனங்களுக்கு மேல் உள்ளன. மட்டிகள், ஆளிகள், கடற்காய்கள், முத்துச் சிப்பிகள், இரட்டை வரிச் சோழிகள் முதலியன இவற்றுள் குறிப்பிடத்தக்கவை. இவற்றில் முப்பது சதவீதத்திற்கு மேல் நன்னீர் நிலைகளில் வாழ்பவை. மற்றவைகள் கடல்களில் வாழ்பவை.

கடற்காய்கள் இந்த இருவோட்டுடலிகள் பிரிவைச் சேர்ந்தவை. இவற்றின் மென்மையான உடலை இரண்டு சிப்பிகள் மூடியிருக்கும். முட்டை வடிவ இந்த ஓடுகள் மெல்லியதாக ஆனால் வலுவானதாக இருக்கும்.இவற்றின் ஓடுகள் பக்கவாட்டில் இணைந்திருக்கும். கரு நீலமுள்ள இந்தச் சிப்பியின் மேற்பரப்பு மிருதுவாக இருக்கும். இவை 36 செ.மீ நீளம் வரை வளரக்கூடியவை.



# கடற்காய்கள்

இவற்றுள் கடல் வாழ் கடற் காய்கள், நன்னீர் கடற்காய்கள் என்று இரு பிரிவுகள் உள்ளன. கடல் வாழ் கடற்காய்கள், பைசஸ் எனும் ஒரு வகை பட்டு போன்ற மெல்லிழை நார்களினால் பாறைகள், கற்கள் மற்றும் கடினமான பொருட்கள் மீது பற்றிக்கொண்டு கூட்டமாக வாழ்கின்றன. கடற்காயின் முனைப் பகுதி அல்லது பாதப் பகுதியோ இந்த மெல்லிழை நார்களை சுரக்கின்றது. இதற்கு (BYSSUS) என்று பெயர். இவை கூட்டமாக பரவியிருக்கும் இடங்களுக்கு கடற்காய் படுகைகள் என்று பெயர்.

மேற்பகுதி கீழ்ப்பகுதி என்று இரு பிரிவுகள் கொண்ட தூம்புக் குழாய் போன்ற அடைப்பின் மூலம் சுவாசிக்கின்றன, உண்ணுகின்றன. இதன் வழியாகச் செல்லும் நீரிலிருந்து ஒட்சிசனை உறிஞ்சிக்கொள்கின்றன. நுண்ணுயிர் தாவர மிதவைகளை வடித்தெடுத்துக்கொள்கின்றன.

கடற்காயில் ஆண், பெண் என்று தனித்தனி இனங்கள் உள்ளன. பெண் இனம் ஒரு தடவையில் ஒரு சோடிக்கும் மேற்பட்ட முட்டைகளை தண்ணீரில் வெளியிடும். முட்டையிலிருந்து வெளிவரும் கடற்காய்கள் சில நாட்கள் நீரில் நீந்தித் திரிகின்றன. பிறகு ஓடுகள் வளர ஆரம்பித்ததும் அதன் கனம் தாங்காமல் நீருக்கடியில் சென்று கடினமான பரப்பில் மெல்லிழை நாரின் மூலம் பற்றிக்கொண்டு நிலை வாழ்க்கையை ஆரம்பிக்கின்றன. இவை பெரும்பான்மையோர் விரும்பி உண்ணும் உணவுப் பொருளாகும்.

## அறியவேண்டிய சில தகவல்

### உலகின் முக்கிய தீவுகள்சில

| பெயர் | அமைவிடம் |
|---|---|
| அவுஸ்திரேலியா | இந்துசமுத்திரம் |
| கிறீன்லாந் | ஆட்டிக் சமுத்திரம் |
| நியூகினி | மேற்கு பசுபிக் |
| போர்னியோ | இந்துசமுத்திரம் |
| மலகாசி | இந்துசமுத்திரம் |
| சுமாத்ரா | இந்துசமுத்திரம் |
| வன்கூவர் | ஆட்டிக் சமுத்திரம் |
| செலிபஸ்தீவு | ஆட்டிக் சமுத்திரம் |
| டியாரோ | அத்திலாந்திக் |
| டெல்பியூகோ | சமுத்திரம் |
| சிறிலங்கா | இந்து சமுத்திரம் |


ச. நளினி,
மு. புதுக்குடியிருப்பு ம. க.



# இளைய நாதம்

# கல்வியே செல்வம்

குட்டிக்கதை



திலீபன் ஒரு ஏழை வீட்டுக்கார பையன். ஆனால் படிப்பில் படு சுட்டியும் கூட. இவனின் இயல்புகள் இலகுவில் எல்லோரையும் கவர்ந்துவிடும். அன்பு காட்டவும் உதவி செய்யவும் அவனை விட சிறந்தவன் என்று கூற அவனது வகுப்பில் யாருமில்லை. அதே போல் அரவிந்தன் என்ற இவனது நண்பனும் ஒரு ஏழை. அவனும் படிப்பிலும் கெட்டிக்காரன் தான். ஆனால் இவன் தனது சிறுவயதிலே தந்தையை இழந்து விட்டான். இதனால் இவனது தாய் தனது முயற்சியால் இவனையும் தஙகையையும வளர்த்து வந்தாள். அரவிந்தனின் தங்கையோ குடும்ப நிலையை உணராத விளங்கிக்கொள்ள முடியாத சிறு பிள்ளை. எதைக் கண்டாலும் ஆசைப்பட்டு அண்ணனிடம் அடம்பிடிப்பவள். இதனை தாயும் சில சந்தர்ப்பங்களில் கண்டித்ததுமுண்டு. இவற்றையெல்லாம் பார்த்து அரவிந்தனுக்கோ என்ன செய்வதென்று தெரியவில்லை. நண்பனான திலீபனிடம் சென்றான். தனது பிரச்சினைகளை எடுத்துக் கூறினான்.


தான் கல்வியை நிறுத்திவிட்டு கூலி வேலைக்குச் செல்லப்போவதாக ஆலோசனை கேட்டான். திலீபனோ மறுத்தே விட்டான். எவ்வளவோ சொல்லியும் அவன் கேற்கவில்லை. திலீபன் எப்படியாவது அரவிந்தனை படிப்பை நிறுத்த விடக்கூடாது என்றே முடிவெடுத்தான். ஒரு நாள் அரவிந்தனின் தங்கை தனக்கு அழகான முத்துமாலை வேண்டித் தரும்படி தாயிடம் அடம்பிடித்து அழுதுகொண்டிருந்தாள் அதே நேரம் திலீபன் அங்கே வந்து அவள் அடம்பிடிப்பதை கண்டு விட்டு அவளை அணைத்து சீ...இதென்ன இந்த சின்ன வயசில இதுக்கெல்லாம் ஆசைப்படுறதா?... பிள்ளை வளர்ந்து பெரியாளா வந்து நல்ல கெட்டிக்காரியா வந்தா அண்ணா வேண்டித்தருவான் என்ன என்று தேற்றினான் அவளும் ஓம் என்று ஒத்துக்கொண்டாள். அவனும் அரவிந்தனையும் அழைத்துக் கொண்டு கடற்கரைக்குச் சென்றான்.

அப்போது அரவிந்தனின் கவலையை புரிந்து கொண்ட திலீபன் ஏன்ரா கவலைப்படுகிறாய் இப்ப நீ படிப்பை நிறுத்தி உழைக்கிற பணத்தை நீ நல்லாப் படிச்சு பின்பு உழைப்பாய் தானே. இப்ப இந்தப் படிப்பை குழப்பாதே அரவிந் தயவு செய்து இதை மட்டும் மறுக் காதே. சரி என்று இவனும் தொடர்ந்து படித்து வந்தான்.

அரவிந்தன் வளர்ந்து படிப்பை முடித்து கிடைத்த பெறுபேற்றால் தனது தங்கையையும் தாயையும் உழைத்துப் பார்க்க முடிந்தது. இந்நேரம் திலீபனை சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அப்போது திலீபன் ஒரு வைத்தியர் நிலையை அடைந்திருந்தான். அரவிந்தனும் ஒரு பொறியியலாளராக இருந்தான். அப்போது அரவிந்தன் திலீபனிடம் சொன்னான் திலீபன் அன்று நான் படிப்பைக் குழப்பியிருந்தால் இன்றைக்கு எனக்கு இந்த நிலை எட்டியிருக்காது. இப்ப நான் சிந்திக்கிறேன் "கல்வியே செல்வத்தை தேடித்தரும்" என்று அவனிடம் பெருமையுடன் சொன்னான்.

—ஈழவிழி

# கை வண்ணம்



ஜெ.பிரபுதேவா,
தரம் -05.

## சொற்சிலம்பு-124

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ண | அ | பூ | சீ | அ | ஆ | ப |
| பி | கு | லி | பா | ந் | மி | ம் |
| கா | கி | தி | நோ | ங் | ன் | க |
| எ | னா | ம | லி | ளை | கீ | இ |
| ல | டா | தா | ல் | ர் | யா | சா |
| ரோ | ர் | ய | க் | ஸ் | கி | ர |
| வ | ட் | க | ல | ரீ | த் | து |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பிவையுங்கள்.

### சொற்சிலம்பம் -122 இன் விடைகள்

01. அல்பிரட் நோபல்
02. அல்அகமத் அல் சபா.

### சொற்சிலம்பம் - 122 இன் பரிசுக்குரியவர்

செ.நிஷாந்,
தரம் -05B,
மு/பாண்டியன் குளம் மகாவித்தியாலயம்,
பாண்டியன் குளம்.

### சொற்சிலம்பம் - 122 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. கு.செந்தமிழ், 01 ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.
02. த.லக்ஷிகன், செந்தில் களஞ்சியம், முள்ளியவளை.
03. V.கலாதர்சினி, தரணிக்குளம், வவுனியா.
04. வே.கலைவாணி, சிவிச்சென்ரர், வட்டக்கச்சி.
05. வே.அகமொழி, இல.921, சிவிச்சென்ரர்.
06. கு.அமுதரசி, வட்டக்கச்சி, கிளிநொச்சி.

01. தமிழில் உள்ள இலக்கண வகைகளில் ஒன்று?

01) ..................................

02. சூரியனின் மறு பெயர்களில் ஒன்று?

01) ..............................

பெயர் :- ..........................

முகவரி :-.............................................................

.............................................................

.............................................................

சொற்சிலம்பம்-124
ஈழநாதம்,
யாழ்சாலை,
கிளிநொச்சி.

வணக்கம் பிள்ளையள் எல்லாருக்கும் ! இல்லை, நான் உங்களுக்கு சொல்லக்கூடா தெண்டு இருந்தனான். இருந்தும் இவ்வளவு காலமாய் இப்பிடிப் பழகீட்டு சொல்லாமல் மறைக்கிறது அழகில்லையெண்டு மனசுக்குப் பட்டிது. அது மட்டுமில்லாமல் நான் விட்ட பிழையை அறிஞ்சு கொள்ளிறதால நீங்களும் அப்பிடியான பிழையளை விடாமல் இருக்கி றதுக்கு உதவியாய் இருக்கும் எண்டதால, கட்டாயம் அதைப்பற்றி சொல்லித்தான் ஆகோணும்.

என்னெண்டால் அண்டைக்கு கூடப்படிச்ச ஒரு கிழவன் கிளிநொச்சிப்பக்கம் கனகாலத் துக்குப் பிறகு வந்ததை அறிஞ்சு ஆளைச் சந்திக்கப் போனனான். கன காலத்துக்குப் பிறகு பத்தையும் பலதையும் கதைச்சுக் கொண்டிருந்த நேரத்தில அந்தாள் இருந்தாப் போல போத்தில் ஒண்டை எடுத்து உடைச்சிட்டு "நீரும் சாடையாய் பாவியும் !" எண் டிச்சிது. உதெல்லாம் எனக்குப் பழக்கம் இல்லை, விருப்பமும் இல்லை எண்டு நான் மறுத்திட்டன்.

ஆனால், அந்தாள் விட்ட மாதிரித் தெரியேல்லை "ஏரம்பர் ! கன நாளைக்குப் பிறகு சந்திச்சிருக் கிறோம். எனக்கு கிட்னியில கான்சர் எண்டு வேற டொக்ரர் சொல்லியிருக்கிறார். இன்னுமொருமுறை உம்மைச் சந்திக்க இருப்பேனோ தெரியாது. எங்கட 70 வருச நட்புமேல சத்தியமாய் கேட்கிறன், ஒரு அரை கிளாஸ் எண்டாலும் எனக்காகக் குடிக்கிறீரோ இல்லையோ ? இல்லையெண்டால் அதுக்கு மேல எங்களுக் குள்ள கதை, கிதை வேண்டாம்". எனக்கெண்டால் ஒருமாதிரியாய் போயிட்டிது. எட மனுசன் கான்சர் வேற இருக்கிதெண்டு சொல்லிது. இப்ப என்னண்டு ஆளின்ர விருப்பத்தை முறிக்கிறது எண்டிட்டு, 'சரி சரி எனக்கு என்ர நிதானத்தில நம்பிக்கை இருக்கேக்கிளை போத்தில் என்ன பெரிய போத்தில் ! கான்சர்கார மனுசன்ர ஆசைக்காக குடிக்கிறது பாவம் இல்லை' எண்டிட்டு கொஞ்சமாய் பாவிச்சன். "ஏரம்பர் ! உண் மையா. . .ய் சொல்லிறன். ஆயிரம் பேர் வந்தாலும் உம்மைப்போல ஒருத்தனை நண்ப னாய் பெறுகிறதுக்கு நான் . . .', சொல் லிக்கொண்டே அந்தாள் அழத் தொடங்கீட்டிது.

அழுதுகொண்டே நான் குடிச்சு முடிச்ச கிளாசுக்கிள்ளை திரும்பவும் நிரப்பிச்சிது. ருசி எண்டு இல்லையெண்டாலும் கிடந்ததைக் குடிச்சு முடிச்சிட்டு வீட்டை போவோம் எண்டு கிளாசைக் காலி பண்ணிட்டு அந்தாளின்ரை கண்ணீரும் கம்பலையுமான விடைபெறுதலோட சைக்கிளை எடுத்துக்கொண்டு வீட்டை திரும்பினன். உப்பும் lysozyme உம் கலந்து தான் கண்மணியைக் காப்பாற்றிறதுக்காக கண்ணீர் உருவாகுதெண்டு அறிஞ்சனான். ஆனால், இந்த மனுசன் மேலதிகமாக அடிக்கிற ஒவ்வொரு கிளாசுக்கும் மேலால காரண மில்லாமல் கண்ணீர் வழிஞ்சோடிக்கொண்டி ருந்திது.

வீதியில இறங்கிக் கொஞ்சநேரத்தில தான் விசயம் பிழைக்கத் தொடங்கீட்டிது. வாய்க்குள்ளை விட்ட விசயம் உள்ளுக்குபோய் அலுவல் கொடுக்க வெளிக்கிட்டிட்டிது. கண்ணும் மின்ன மின்ன முன்னால எல்லாம் 3, 4 ஆகத் தெரிஞ்சிது. பள்ளத்துக்கும் திட்டிக்கும் வித்தியாசம் தெரியாமல் பாதையெல்லாம் ஒருமாதிரியாய் தோற்றமளிச்ச வேளையிலதான் பாருங்கோ அந்தச் சோகம் நடந்தேறியது.

என்னண்டு நடந்ததெண்டு அறிய முடியாமலிருந்தாலும் விழுந்த விழுகையில அது எவ்வளவு பெரிய கல்லுத்திட்டி எண்டு உடம்பெல்லாம் உணர முடிஞ்சிது. சொல்லிவேலையில்லாத அளவுக்கு அடி ! அப்பிடியே நான் கவிண்டு கிடந்தநேரத்தில தெரிஞ்ச ஒரு தம்பியொராள் விசிலடிச்சவடி அதால வந்தார். வந்தவர் என்னைக் கண்டிட்டு "என்னப்பு ! மண்வளத்தைப் பற்றி ஏதாவது ஆராய்ச்சி செய்யிறீங்களோ ? நடுவீதியில உப்பிடி குப்புற படுத்துக்கிடக்கிறீங்கள் !" எண்டு கேட்டார். எனக்கு வந்த கோவத்துக்கு அந்த நில மையில என் னத்தைச் செய்ய எண்ட வேதனையில "ஐயோடாப்பா விழுந்துபோனனடா ! உடம்பில இருக்கிற இருநூற்றுக்கும் அதிகமான எலும்புகளும் சரி போல கிடக்கிது. கெதியாய் அம்புலன்சைக் கூட்டிக்கொண்டு வா" எண்டு கத்தினன்.

அம்புலன்ஸ் மிச்சம் அவசரமான கேஸ்களுக்கே கிடைக்கிறது கஷ்ரமாய் இருக்கிறதால, கொஞ்சநேரத்தில வான் ஒண்டைப் பிடிச்சு ஒருமாதிரி ஆஸ்பத்திரிக்குப் போயிட்டன். அங்கை டொக்ரர்மார், உதவியாளர்கள் எல்லாரும் கடவுள்போல வடிவாய் கவனிச்சு பத்துப்போட்டு மருந்தும் தந்து படுக்க விட்டினம். எனக்கு சரியான தலைக்குனிவாகப் போயிட்டிது. ஏனெண்டால் 4,5 கட்டில் தள்ளி போனவருசம் மட் டக்களப்பில காயப்பட்ட போராளித்தம்பி யவையளும் விழுப்புண்களோட இருந்தவை. அப்பிடி அவையள் சின்னவயசில நாட்டுக்காக குண்டுபட்டு படுத்திருக்க, நான் ஆரோ ஒரு விசரன் கிட்னியில கான்சர் எண்டு சொன்ன தைக் கேட்டு நட்பை நிரூபிக்கிறதுக்காக சேர்ந்து குடிச்சிட்டு இப்பிடி படுத்திருக்க வேண்டி வந்திட்டிது.

சே ! வெட்கம் கெட்ட நிலைமை. இந்த விசயத்தில வெள்ளைக்காரங்களின்ர போக்கு எவ்வளவு திறம் : குடிக்காத ஒருத்தனை ஒருகாலமும் அவங்கள் நிர்ப்பந்திக்க மாட்டாங்கள். உங்களுக்கும் எல்லாருக்கும் சொல்லிறன், சும்மா அடுத்தவன் சொல்லுறான் எண்டிறதுக்காக ஒருகாலமும் பிழையான நிர்ப்பந்தங்களுக்கு ஆட்படாங்கோ ! என்ன நடந்ததெண்டு விசாரிக்கிற ஆக்களுக்கு வேட்டி தடக்குப்பட்டு விழுந்துபோனன் எண்டு ஒரு மாதிரி சரிக்கட்டிக்கொண்டு வாறன்.

அப்பிடி என்ர நிலைமை ஒருபக்கம் இருக்க நாட்டு நிலைமையளும் சூடாய் போய்க்கொண்டிருக்கு. அதில்லை இஞ்சை எத்தினை சனங்கள் அநியாயமாய் ராணுவத்தால பகிரங்கமாய் கொல்லப் படேக்கிளையெல்லாம் வாயை மூடிக்கொண்டு கிடந்திட்டு, இப்ப ஒரு தூதுவர் கையா மொய்யா எண்டு வலுவாய் துள்ளிறார். முழுச்சனத்துக்கும் முன்னால ஆமிக்காரர் செய்யிறதைக் கண்டிக்க மனமில்லாத உப்பிடிப்பட்டவையள் ஆமிக்கோ நேவிக்கோ அடிபட்டால் துடியாய் துடிச்சிடுவினம்.

எட ரணிலுக்குத்தான் ஆதரவு தெரி விச்சுக்கொண்டு மகிந்த பதவிக்கு வாறதுக்கு தமிழ்மக்களோட தேர்தல் பகிஸ்கரிப்பு காரணமாயிட்டிதெண்டு கண்டிச்சவை, இப்ப Hard-liner எண்டு தாங்கள் சொன்ன பேரினவாதத்தலைமைக்கும் ஆதரவாயெல்லே கதைக்கினம் ! போக்குகளைப் பார்க்க சிங்களப் பேரினவாதம் உட்பட சர்வதேச தரப்புகள் பலதுக்கும் இப்ப பேர் தொடங்கப் போகுது எண்டிறதுதான் தலையாய பிரச்சி னையாய் இருக்கிதே தவிர, தமிழ்மக்களுக்கு உரிமைப்பிரச்சினை ஒண்டு இருந்ததை, இருக்கிறதை மறந்திட்டினம்போல ! சும்மா மைக் அகப்படிற நேரம் எல்லாம் மகிந்தர் புலியளைப் பேச்சுவார்த்தைக்கு அழைச்சுப் போடுவார்.

எனக்கென்ன சந்தேகம் எண்டால் பாருங்கோ, சிறிலங்கா அரசாங்கம் நெடுகலும் அந்தப்பயிற்சி இந்தப்பயிற்சி எண்டு கனக்க எடுக்கிறதாய் பத்திரிகையளில செய்தி வாறது. அப்பிடியிருக்க ராணுவம் தங்கள் மேல அடையாளம் தெரியாத நபர்கள் தாக்குதல் நடத்த, மேற்கொள்ளிற பதில்தாக்குதலில தாக்குதலாளியளை விட்டிட்டு அப்பாவிப்பொது சனங்கள் என்னண்டு சாகிதுகள் ! உதுதான் உவையின்ர சூட்டு-லட்சணமோ ? பத்தாக்குறைக்கு மக்களை வேணுமெண்டே பழிவாங்கிற ராணுவ மேலாதிக்கப்போக்கை நியாயப்படுத்திற வகையில பிபிசி-தமிழோசை உட்பட சில சர்வதேச ஊடகங்கள் தங்கட செய்தியளை அமைச்சுக்கொள்ளிறதும் வேதனைக்குரிய போக்குப் பாருங்கோ ! 'ராணுவத்தினர் வானைநோக்கிச் சுட்டதில் பொதுமகன் ஒருவர் மட்டுமே கொல்லப்பட்டார்' எண்டு நாக்குக்கூசாமல் ஒரு உயிரை மலினப்படுத்திற அதே தமிழோசை 'இனந்தெரியாத நபர்களினால் ராணுவம் மீது மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டு வீச்சைத் தொடர்ந்து ஏற்பட்ட விளைவிலே பொதுமக்கள் கொல்லப்பட்டதாக் கூறப்படுகிறது' எண்டமாதி ரியான வார்த்தைப்பிரயோகங்கள் மூலம் கைகொடுக்கவேண்டிய தமிழ்மக்களிட்டை இருந்து தன்னை அந்நியப்படுத்திக் கொண்டு வாறதை அதுக்கான உள்ளூர் நிருபர்கள் கவனத்தில கொள்ளவேணும். எங்கேயோ காட்டுவழியில நடக்கிறதை புலியள் செய்ததாக உறுதியாய் சொல்லிற இப்பிடியான ஊடகங்கள், மக்கள் முன்னால பகிரங்கமாய் ராணுவத்தால சுடப்படிற பொதுமக்கள் குறிச்ச செய்தியை பூசி மெழுகிறது ஊடகத்துறைக்கே கேவலம் பாருங்கோ !

மற்றது பிள்ளையள், நாங்கள் சம்பந் தப்பட்ட பேச்சுவார்த்தை எண்டிறது 2 தரப்பும் விட்டுக்குடுத்து அனுசரிச்சுப்போற விசயமில்லை. தமிழினத்துக்கு அநியாயம் இழைக்கப்பட்டிருக்கிது. எங்கட உரிமைகள் பறிக்கப்பட்டு வன்முறையால நாங்கள் அச்சுறுத் தப்பட்டு வாறோம். இதுக்கெல்லாத்துக்கும் காரணமான சிங்களத்தரப்புகள் தான் தாங்கள் விட்ட பிழையளை உணர்ந்து சீர்செய்யோணும். அதைவிட்டிட்டு இயக்கம் குறிப்பிடிற நாட்டில நாங்கள் ஏன் பேச்சுவாரத்தை நடத்திறதுக்குச் சம்மதிக்கோணும் எண்டு முரண்டுபிடிக்கிறதே, இந்த நாட்டில நிலவிற பிரச்சினையைத் தீர்க்கிறதுக்கான அவையின்ர தயார்நிலையை (?) வெளிப்படுத்திது.

அப்பிடி நிலைமையள் இருக்க சிறிலங் காவுக்கான அமெரிக்கத்தூதுவர் கவலையில கிடக்கிற மகிந்தவுக்கு சிரிப்பு மூட்டிறதுக்காக பகிடி விட்டிருக்கிறார். 'புலியள் தங்கட நோக்கத்தை நிறைவேற்றிறதுக்கு வன்முறை யைப் பிரயோகிக்கிறது படுபிழையான போக்கு' எண்டு சிரிப்புக் காட்டியிருக்கிறார். இதை அவர் சொல்லிக்கொண்டிருக்கிற கிழமையிலையே ஆப்கானிஸ்தான் எல்லையில இருக்கிற பாகிஸ்தான் கிராமம் ஒண்டில அல்கெய்தா ஆக்கள் இருக்கிறதாய் நம்பி அமெரிக்கா ஏவுகணைத்தாக்குதலை மேற்கொண்டது அறிஞ்சிருப்பியள்.

இந்தளவுக்கும் இதைச் செய்து 5 நாள் வரைக்கும் தாங்கள்தான் செய்தது எண்டதைப் பற்றி மூச்சும் விடேல்லை. ஏனெண்டால் கொல் லப்பட்ட 14 பேருக்குள்ளை சின்னப்பிள்ளைய ளும் இருந்திருக்கினம். மற்றது தங்களுடைய அனுமதி இல்லாமல் அத்துமீறி இப்பிடிச் செய்ததுக்கு பாகிஸ்தான் அரசும் கண்டிச்சி ருக்கிது. பேந்துதான் அல்கெய்தா அமைப்பு முக்கியஸ்தர்களின்ர குடும்ப உறுப்பினர்களும் பலியானவர்களில அடங்கியிருந்தவை எண்ட தகவல் வெளியால வந்தாப்பிறகுதான் தங்கட கெட்டிக்காரத்தனத்தை (?) சூடுதணிய பறைசாற்றியிருக்கினம்.

எங்கையெண்டாலும் பேச்சுவார்த்தைய ளைப் புறந்தள்ளி அடியடா, பிடியடா எண்டு சண்டியன் பிளானில இறங்கிற ஆக்கள் சாத் வீகத்தைப் பற்றி எங்களுக்குப் போதிக்கப் பார்க்கினம். இல்லாத பாரிய அழிவாயுதங்க ளையே இருக்கிறதாய் நம்பி சண்டையில இறங்கினவை, இருக்கிற பிரச்சினைக்கு வேறவழியில்லாமல் ஆயுதவழியில தீர்வுகாணத் தலைப்படிற எங்களை விமர்சிக்கத் தலைப் படுகினம் ! ஆனால், இதைப் பற்றி ஒருத்தரும் யோசிக்சுக் கவலைப் படத் தேவையில்லை.

அந்த ஒற்றைக் கோடாரிக்கொம்பு-விவகாரத்துக்குப் பிறகு அமெரிக்காவின்ர கணக்குப்படி சிங்களத்தரப்பின்ர பலம் எங்கடயவிட உசத்தியாய் இருக்கெண்டதொரு நம்பிக்கைதான் இதுக்கெல்லாம் காரணம். ஆனால், உண்மையை நாங்கள் நிரூபிக்கிற நேரம் நிலைமை தலைகீழாய் மாறும். 'பலம் தான் வாழ்க்கை' எண்டு தலைவர் சொல்லிற உண்மைதான் இண்டைக்கு உலகத்தை ஆளுது. இந்தியா-சீனா-அமெரிக்கா எண்டு மூண்டு தரப்புகள் இருக்கிறதால நேரடியாக பெரிய வல்லரசுகளை எதிர்கொள்ளவேண்டிய நிலைமை ஒருக்காலும் வராது. எங்கட இனம் தலைவருடைய வழிநடத்தலில முழுப்பலத் தோட தன்ர சக்தியை வெளிப்படுத்திற, திலீபன் தம்பி சொன்ன மக்கள் யுத்தம் கூர்ப்புப் பெறேக்கிளை 108 ஆகச் சிதறிக்கிடக்கிற புத்தப பேரினவாத சிறிலங்காவை விட மதச்சார்பற்ற தெளிவான தமிழீழத்தோட நட்பை வளர்க் கிறதுக்கு பெரிய நாடுகளெல்லாம் ஆலாய்ப் பறக்கும் பாருங்கோ ! அதாலதான் எங்கட தாயக மண்ணின்ர குறுகிய நிலப்பரப்புக் கொண்ட குடாநாட்டுக்குள்ளை சனத்தொகை யின்ர மூண்டிலொரு பங்கு மக்கள் செறிஞ்சு வாழிறதால தான் தமிழினத்தை சிங்களவன் இலகுவாய் ஒடுக்கமுடியுது.


காலாகாலமாய் கட்டவிழ்த்துவிடப்பட்ட கலவரங்களால இப்பிடி எங்கட சனங்கள் பாதுகாப்புத்தேடி குடாநாட்டின்ர குறுகிய பரப்பில ஒதுங்கவேண்டி வந்திட்டிது. இப்ப அந்த நெருக்கு வாரம் இல்லை. அனைவரையும் வாவென்று அழைக்கும் வன்னியின் விரிந்த நிலப்பரப்பு ஒவ்வொரு தன்னுடைய பசுமையினால் வாழ வைப்பதற்காக அனைவரையும் அழைத்து நிற்கிறது. விசாரிக்கிற ஆக்களுக்கு சொல்ல மறந்திடாங்கோ ! அடுத்த கிழமை சந்திப்போம்.



# ஏ9-ஏரம்பு

# வன்னியின் விரிந்த நிலப்பரப்பு எல்லோரையும் வாவென்று அழைக்கிறது..!

# தமிழீழத்தில் வெற்றிலையின் முக்கியத்துவமும் உற்பத்தியும்



**வெற்றிலையின் முக்கியத்துவம்:-** வந்தோரை வரவேற்கும் பண்பாடு தமிழனின் பண்பாடு ஆகும். இதற்கு அமைவாக திருமண வைபவம், பூப்புனித நீராட்டுவிழா, பிறந்தநாள் கொண்டாட்டம் போன்ற நன்மையான காரியங்களின்போதும் மரணச்சடங்கு போன்ற தீமையான காரியங்களிலும் சரி தாம்பூலம் வைத்து வரவேற்றல் பண்டைய கலாச்சாரமாக விளங்கி வருகின்றது. இதன்போது வெற்றிலை முதன்மைப்படுத்தப்படுகின்றது. ஆலய வழிபாட்டிலும் வெற்றிலை முதன்மைப்படுத்தப்படுகின்றது. இவற்றிற்கும் மேலாக மருத்துவ குணாம்சம் கொண்டுள்ளமையால் ஆயுர்வேத முறையில் வெற்றிலைச் சாற்றுடன் மருந்துகள் வழங்கப்படுகின்றன. விளைவு கற்பூரத்தை தேங்காய் எண்ணெயிலிட்டு காய்ச்சி வெற்றிலையை சிறிது வாட்டிப்போட்டால் நெஞ்சுத்தடிமன் அற்றுப்போய்விடும். உணவு ஜீரணமாகாதபோது வெற்றிலையுடன் இரண்டு மிளகு வைத்து மென்று விழுங்கினால் உணவு ஜீரணமாகும். இதனை விடவும் கடின உழைப்பின் போது தாகத்தை தீர்ப்பதற்கும், நித்திரை விழிப்பதற்கும், வாய்த்துர்நாற்றத்தைப் போக்குவதற்கும் பயன்படுத்தப்படுவதனால் தமிழீழத்தில் வெற்றிலை முக்கியத்துவம் அடைகின்றது.

**உற்பத்திப்பரம்பல்:-**
தமிழீழத்தில் வெற்றிலைச் செய்கையானது குடாநாட்டின் வலிவடக்கு, வலி மேற்குப் பிரதேசங்களான மாவிட்டபுரம், கொல்லங்கலட்டி, பன்னாலை, சிறுவிளான், இளவாளை, சில்லாலை, மாதகல், கருகம்பளை போன்ற இடங்களில் செய்கை பண்ணப்பட்டு வந்தது. வேறு எந்தத் தொழிலைச் செய்பவர்களாக இருந்தாலும் வெற்றிலையை குடும்பத்தொழிலாகச் செய்து வந்தார்கள். இதன்காரணமாக இது அவர்களது பரம்பரைத் தொழி லாகக் கருதப்பட்டது. இங்கு ஆண், பெண், சிறுவர்கள் என எல்லோரும் தேர்ச்சி பெற்ற வர்களாக விளங்கினர்.

இப்பிரதேசங்களில் 1987ஆம் ஆண்டு சிறிலங்கா இராணுவத்தின் ஒபரேசன் லிபரேசன் நடவடிக்கை தொடர்ந்தும் 1990ஆம் ஆண்டுக்குப் பின்னான இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இப்பிரதேச மக்கள் முற்றுமுழுதான இடப்பெயர்விற்கு ஆளாக்கப்பட்டனர்.

வெற்றிலை நீண்ட ஆயுட்காலப் பயிர் என்பதால் சொந்த இடங்கள் இல்லாமையால் வெற்றிலைச் செய்கையில் ஈடுபட்ட மக்கள் சிதறுண்டு தமக்கேற்ற வேறு வேலைகளில் ஈடுபட்டனர். இருந்தும் ஏழாலை, மல்லாகம், சுன்னாகம், தாவடி, கோண்டாவில், நல்லூர் போன்ற இடங்களில் சிறு அளவில் செய்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வன்னிப் பெருநிலப்பரப்பில் றெட்பானா, விசுவமடு, குஞ்சுக்குளம் நவ்வி, முள்ளிவாய்க்கால் போன்ற இடங்களில் ஆங்காங்கே வீட்டுத்தேவைகளிற்கு எனக் கமுகு, மா போன்ற மரங்களில் ஓரிரு கொடிகள் விடப்பட்டு வெற்றிலைகள் பறிக்கப்பட்டு வந்தன. இவர்களிற்கு வெற்றிலைச் செய்கை தெரியாத காரணத்தால் இதன் செய்கையை அதிகரிக்க முடியவில்லை. யாழ்ப்பாணத்தில் சூரியக்கதிர் 1,2 நடவடிக்கை மூலம் வன்னிக்கு இடம் பெயர்ந்து வந்த வெற்றிலைச் செய்கையாளர்கள் வெற்றிலைக்கொடி வைத்திருப்பவர்களுடன் அணுகி அதனை கத்தரித்து பராமரித்து புதிய பதியங்களை பெற்றுச் செய்கையை அதிகரித்தனர். இதன் விளைவாக முழங்காவில், விசுவமடு போன்ற இடங்களில் அதிகளவு செய்கை பண்ணப்பட்டு வந்தாலும் வன்னியில் பரவலாக சிறு சிறு அளவுகளில் செய்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாணத்திலிருந்து வந்த வெற்றிலைச் செய்கை யாளர்கள் மீண்டும் யாழ்ப்பாணம் சென்றதனாலும் இங்குள்ள வெற்றிலைச்செய்கையாளர்கள் இதுதொடர்பான முழுமையான அனுபவத்தைக் கொண்டாடிராமையாலும் அதிகளவான செய்கைகள் கைவிடப்பட்டுள்ளன.

இதன் காரணமாக 1992இல் இருந்து சிங்களப் பிரதேசத்திலிருந்து வெற்றிலைகள் இறக்குமதி செய்யப்படுகின்றன.

இதுமட்டுமல்லாது, இன்று நாளாந்தம் அதிகரித்து வரும் கூலி அதிகரிப்புக்களால் இதன் பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கின்றன. இதன் காரணமாகவும் இறக்குமதி செய்யப்படும் வெற்றிலைகளின் விலையுடன் போட்டிபோட முடியாத நிலை ஏற்பட்டு செய்கை கைவிடும் நிலை ஏற்படுகின்றது.

**வெற்றிலைக் கொடியின் இனங்களும் அதன்தன்மையும்:-**
தமிழீழத்தில் யாழ்ப்பாணத்து இனம், கொழும்பு இனம் என இரண்டு வகையான கொடிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. யாழ்ப்பாணத்து இனம் கொழுந்து நாட்டப்பட்டு ஒரு வருடத்தின் பின்பே மாற்று வெற்றிலை பெற முடிகின்றது. அத்துடன் குறைந்தளவு கிளைகளையே பரப்புகின்றது. ஆனால் கொழும்பு இனம் ஆறு மாதங்களிலேயே மாற்று வெற்றிலை வருவதனால் விரைவிலேயே அதன் வருமானத்தைப் பெறமுடிகின்றது என்பதுடன் வளர்ச்சி வேகமும் கூடியது. இதனால் அதிகளவு வருமானம் பெறப்படுவதனால் கொழும்பு இனமே அதிகளவு விரும்பப்படுகின்றது.

இரண்டு இனங்களும் ஒரே மாதிரியான தோற்ற அமைப்புக்களையே கொண்டு உள்ளன. இவை மரங்களில் பற்றி வளரக் கூடியவை. மென்மையான இழையங்களையும் மென்மையான பக்க அல்லி சேர் தொகுதிகளையும் கொண்டன. இதன் காரணமாக அதிக வெப்பத்தைத் தாங்கும் சக்தி அற்றிருப்பதுடன் இதன் வளர்ச்சிக்கு தொடர்ந்தும் ஈரப்பதனும் தேவைப்படுகின்றது. இதன் ஆயுட்காலம் இரண்டு சந்ததிக்கும் மேலானதாகும்.

**மண்ணின் தன்மையும் நீரின் அவசியமும்:-**

இதற்கு ஈரப்பதன் தொடர்ந்தும் பேணப்பட வேண்டுமே தவிர நீர் தேங்கி நிற்றல் ஆகாது. நீர் தேங்கி நிற்குமானால் பங்கசின் தாக்கம் ஏற்பட்டுக் கொடிகள் இறந்துவிடும். களிமண் நீரைத்தேக்கிவைக்கும் என்பதால் களிமண் நிலம் உகந்தது அல்ல என்பதுடன் மெல்லிய வேர்த்தொகுதி களிமண்ணில் வேர்விடுவது கடினமாகும். இதேபோன்று மணல்மண் இலகுவில் நீரை வடியவிடுவதால் ஈரப்பதனை தொடர்ந்தும் பேணமுடியாது போய்விடும். இதன் காரணமாக மணல் மண்ணும் உகந்தது அல்ல. இவ்விரண்டு பிரச்சினை களையும் தீர்க்கும் பொருட்டு இருவாட்டி மண் தேர்ந்து எடுக்கப்படுகின்றது. இதன் வேர்த்தொகுதி அரை அடி ஆழத்திற்குச் கீழ் செல்லாது என்பதால் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு ஒரு தடவை நீர்ப்பாசனம் செய்தல் அவசியமாகும். அத்துடன் மாரிகாலங்களில் நிலநீர்மட்டம் நிலத்திலிருந்து இரண்டு அடிக் குக்கீழ் எழும்பாத இடங்களாக இருத்தல் வேண்டும். வெளிநீர் மேலதிகமாக வந்தால் உடன் வடிந்து ஓடக்கூடியவாறு கால்வாய்கள் அமைத்துவிடுதல் வேண்டும். உலரவிட்டு உலரவிட்டு நீர்ப்பாசனம் செய்தால் நிலத்தில் ஏற்படுகின்ற வெடிப்புக்கள் காரணமாக வேர்த் தொகுதியில் காயங்கள் ஏற்பட்டு வைரஸ் கிருமிகளின் தாக்கத்திற்கு உட்பட்டு நாளடைவில் கொடிகள் இறந்துவிடும்.

**சு. சிவலிங்கம்**

**மண்ணைப்பண்படுத்தி பதியங்கள் நாட்டும் முறை:-**

தேர்ந்தெடுக்கப்பட்ட நிலத்தை சூடு அடங்கும்வரை நன்கு நீரினால் நனைத்தல் வேண்டும். அவ்வாறு நனைத்த இடத்தில் வெற்றிலையை மண்ணில் வைத்து மூடி மறுநாள் எடுத்துப்பார்க்கும்போது அதில் தொப்பளங்களோ அல்லது வாட்டமோ ஏற்படக்கூடாது. நிலச்சூடு இருக்குமானால் இழையங்கள் இறந்து முளைக்கும் வீதம் குறைந்துவிடும். இவ்வாறு நனைந்து நன்கு பண்படுத்திய நிலத்தில் நிரலில் மூன்றடி ஒரு மரமும் நிரையில் ஒரு அடிக்கு ஒரு மரமும் என்ற அடிப்படையில் ஒரு பாத்தியில் எட்டு மரங்கள் நாட்டப்படல் வேண்டும். நாட்டிய மரங்களிற்கு யாழ்ப்பாணத்து இனமாயின் மரத்தின் இருபக்கத்திலும் இரண்டு கொழுந்துகள் என்ற அடிப்படையில் ஒரு பாத்திக்கு 16 கொழுந்துகளும் கொழும்பு இனமாயின் ஒரு மரத்திற்கு ஒன்று என்ற அடிப்படையில் ஒரு பாத்திக்கு எட்டுக் கொழுந்துகளும் நாட்டப்படுகின்றன. இதனை பதிவைத்தோ அல்லது நேரடியாகவோ நாட்ட முடியும். கோடை காலங்களில் நாட்டப்படும் பதியங்களிற்கு நிழல் போடுதல் அவசியமாகும். 1/4 ஏக்கர் நிலப்பரப்பில் 1000-1500 கொடிகள் வரை நாட்டமுடியும்.

**பராமரிப்பும் கொழுந்து எடுக்கும் முறையும்:-**

ஒரு கொழுந்து நிலத்தில் நாட்டப்பட்ட நாளில் இருந்து 9-13 நாட்களிற்கு முளைக்கும் வரை ஒன்றுவிட்ட ஒரு நாளிற்கு முறைத் தண்ணீர் பாய்ச்சவேண்டும்.

பின்னர் ஈரப்பதனுக்கு ஏற்ப நீர்ப்பாசனம் செய்ய முடியும். நாட்டப்பட்ட கொழுந்து முளைத்து ஐந்து, ஆறு இலைகள் வந்தபின் அதன் வளர்ச்சிப் போக்குக்கு ஏற்ப இரண்டு அல்லது மூன்று இலைகள் மட்டம் பார்த்து கத்தரித்தல் வேண்டும். இதனை பூ அரிவு என்பர். இதிலிருந்து மேல் இலையின் இடையில் இருந்து வரும் முளையை மட்டும் 5,6 இலைகள் வரவிட்டு முளையை நுனியில் கிள்ளி விடுதல் வேண்டும். இவ்வாறு கிள்ளிவிடப்பட்ட இலையும் தண்டுகளும் முற்றி 15-18 நாட்களிற்குள் முளை திறனைக் கொண்டுவிடும். இதுவும் முதல் வெட்டிய வெட்டில் இருந்து இரண்டு இலைகள் விட்டு மிகுதியைக் கத்தரித்தல் வேண்டும். இதனை வைர வெட்டு என்பர். இவ்வாறு இரண்டு அல்லது மூன்று முறை கொடிவீரியம் பெறும்வரை வெட்டவேண்டும். இவ்வாறு வீரியம் பெற்ற கட்டிஏற்றிய கொடியில் வழமைபோல இரண்டு இலை விட்டு கத்தரிக்க வேண்டும். இவ்வாறு கத்தரித்து எடுத்த கொடியில் முளைதிறன் கொண்ட மூன்று இலைகள் கொண்ட துண்டங்களாக எடுக்க வேண்டும். இவ்வாறு எடுக்கப்பட்ட துண்டத்தில் அடி இலையை அகற்றிவிட்டு மேல் இலைகள் இரண்டினாலும் முளையத்தை வெப்பம் தாக்காத வாறு சுற்றிக் கட்டுதல் வேண்டும். இவ்வாறு சுற்றிக்கட்டிய கொழுந்து அடி இரண்டு வேர்த்தொகுதியும் நிலத்திற்குள் மறைந்து நாட்டப்படுதல் வேண்டும்.

(20 ஆம் பக்கம் பார்க்க)




யாழ்.குடா நாட்டைப் பொறுத்தவரை நமது முன்னோர்களால் உருவாக்கப்பட்ட கேணிகளும் குளங்களும் சிறப்பான ஒரு இடத்தினை வகித்து வருகின்றன. இந்தச் சிறப்பானது யாழ்.குடா நாட்டின் நீர்வளத்தோடு தொடர்புபட்டது. காரணம் யாழ்.குடாநாட்டின் நீர்வளத்தை பாதுகாத்துக்கொள்வதில் இவற்றுக்கு முக்கியமான பங்கு இருப்பதனால்தான் யாழ். குடாநாட்டின் தரைகீழ் அமைப்பானது சுண்ணாம்புப் படிவங்களைக்கொண்டு அமைந்ததே இங்கு நன்னீர் கிடைப்பதற்கான பிரதானமான காரணமாகச் சொல்லப்படுகின்றது.

மேலும் யாழ்ப்பாணம் வானம் பார்த்த பூமியாகி இருந்தாலும் மிகக் குறுகிய காலத்துக்கு அதாவது வருடத்தில் மூன்று மாதங்கள் மாத்திரமே மழை பெறக்கூடியதாகவும் உள்ளது.

மழையை உருவாக்கக்கூடிய பிறகாரணிகளான மலைகளோ, பெருங்காடுகளோ ஏனைய புறக் காரணிகளோ இல்லாத காரணத்தால் வானத்து மழையை மட்டும் நம்பி அதனை சேமித்து பயன்படுத்தும் செயற்பாட்டில்தான் யாழ். குடாநாட்டின் பிரதான நீர்வளம் தங்கியுள்ளது.

எனவேதான் மழை காலத்து நீரை யாழ்.குடா நாட்டில் சேமிப்பதிலும் சிக்கனமாக பயன்படுத்துவதிலும் அப்பகுதி மக்கள் அக்கறை காட்டவேண்டும். மழை நீரை வீணாக்காது குறிப்பாக கடலில் கலக்காது தடுக்க வேண்டும்

எனினும் யாழ்.குடாநாட்டின் தொடர்ச்சியாக சமூகப் பொருண்மிய மாற்றங்களால் தோட்ட நிலங்கள் குடியிருப்புக்களாக மாற்றப்பட்டு வந்தன. கேணிகள், துரவுகள், சிறுகுளங்கள் போன்றன மூடப்பட்டு வந்தன. அல்லது கவனிக்கப்படாது அழிந்து மறைந்தன.

இதன்காரணமாக நீர்வளம் பற்றாக்குறையாக மாறும் ஆபத்து ஏற்படும் அதேவேளை நீரின் தேவையும் பன்மடங்காக அதிகரித்தும் வந்தது.

யாழ். குடாநாட்டில் நீர்வளத்தை பாதுகாத்தல் தொடர்பாக அக்கறை உள்ள பலரும் அடிக்கடி விவாதித்து வருகின்றார்கள்.

எமது பழைய தலை முறையினர் அமைத்து பாதுகாத்த குளங்கள், துரவுகள், கேணிகள் அழியவிடாது அல்லது குப்பை கூளங்களைப்போட்டு மூடி குப்பைக்கிடங்குகளாக மாற்றாது பாதுகாத்தல் வேண்டும்.

மழைநீர் வீணாக கடலில் கலந்து போகாமல் தடுக்கும் முறைகளும் தொடர்ச்சியான திட்ட மிடல்மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இதற்கு துறைசார்ந்த நிலையங்களின் கருத்துக்களுக்கு அமைவாக எமது மக்கள் செயற்படல் அவசியமானதாகும்.

# கலை வெளிப்பாட்டில் அரங்கேற்றம் என்பது...

கலை வெளிப்பாட்டில் அரங்கேற்றம் என்பது முக்கியமானதொரு விடயமாக அதாவது வெளிப்படுத்தலின் சிறப்பம்சங்களில் ஒன்றாகக் கருதப்படுவதால் இவ்விடயத்தைப்பற்றி ஆராய்தல் மிக அவசியமாகிறது. இருப்பினும் அரங்கேற்றத்தைப்பற்றிப் பார்க்குமுன் கலைபற்றியதொரு தெளிவை நாம் பெற்றுக்கொள்ளுதல் நன்று.

ஏனெனில் கலை என்று சொன்னால் மக்களில்பலர் அதைப் புறம்பான அல்லது ஒரு புதினமான விடயமாகப் பார்க்கும் நடைமுறை இன்றும் காணப்படுகிறது. கலை என்பது ஒவ்வொரு மனிதனுடனும் கூடப்பிறந்தது என்பது நம்மில் பலருக்குத் தெரிவதில்லை. எல்லோருக்கும் ஒரே மாதிரியான கலையம்சம் இருப்பதில்லை. ஆனால் வெவ்வேறு வகையான கலையாற்றல் எல்லோரிடமும் உண்டு. இது ஓர் வியப்பான உண்மை? சரி இப்போது கலை என்றால் என்ன? அதை முதலில் சொல்லாமல்.... நீங்கள் சிரிப்பது என்பேனாவழியே எனக்குப் புரிகிறது.



கலை என்பதை நேரடியாகச் சொல்லின் "ஆற்றல்கள்" எனலாம். மனிதனின் நல்வாழ்வுக்குத் துணைசெய்யும் பல்வகையான ஆற்றல் சார் செயற்பாடுகளே கலை எனப்படுகிறது. அல்லது ஆற்றல் சார் தொழில்கள் என்றும் விளக்கம் கொள்ளலாம். கலைகள் ஒவ்வொன்றும் வெவ்வேறு தன்மையுடையவை. ஒன்றுக்கொன்று வேறுபட்டவை. ஆயினும் ஒன்றோடொன்று தொடர்புபட்டவை.

இக்கலைகள் அவற்றின் தன்மைக்கேற்ப பிரிக்கப்படுகின்றன. பொதுவாகவே மனிதனின் உள்ளத்தில் உணர்ச்சியை எழுப்பி இன்பத்தையும் மனநிறைவையும், கற்பனை வளத்தையும் கொடுக்கும் தன்மை கலைகளுக்கு இருந்தாலும் அதன் வீதத்தில் மாறுபாடு காணப்படுகிறது. ஆயகலைகள் 64 என்பர். இவற்றை வாத்சாயனர் எனும் விற்பன்னர் கூறும்போது, "மனிதனை மயக்கும் இன்பக்கலைகள்" என்று அவரது நூலொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

இவற்றின் தன்மைக்கும் வகைக்கும் ஏற்பவே இரண்டு வகையாகக் கலைகள் பிரிக்கப்படுகின்றன. ஒன்று "லலிதகலைகள்" மற்றது "சாமான்யகலைகள்" அல்லது "சாதாரணகலைகள்" இதிலே லலிதகலைகள் நேரடியாக உடனேயே மனங்களை மகிழச் செய்யக்கூடியன.

லலிதகலைகளிலும் இன்றியமையாத சில கலைகள் உள்ளன. அவை "கவின் கலைகள்", "நுண்கலைகள்", "இன் கலைகள்", "நன்கலைகள்" எனப் படுகின்றன. (இந்தக் கலைகளில் இத்தனையா?......) கவின்கலைகள் என்றால் கண்ணின் வழியாக மனதினுட்புகுந்து மனதை நிறைவிக்கும் கலைகள். இதனை ஆங்கிலத்தில் (NISUALART) என்பார்கள். ஓவியம், சித்திரம், சிற்பம், கட்டடக்கலை என்பன இதனுள் அடங்கும்.

"நுண்கலை" என்பது உணர்ச்சி வழியாகச் செவியினுட்புகுந்து உயிரை நிறைவிப்பன. அதாவது கேட்டல் வழியே பெறப்படும் இன்பம் இதயத்தை இலகுவாகத் தொட்டுவிடுகிறது. இதனையே FINE ART என்று ஆங்கிலத்தில் அழைப்பார்கள். சிரவணகலைகள் என்ற இன்னொரு செல்லப்பெயரும் இதற்குண்டு. இசை (பாட்டு) கருவியிசை, நாடகம், நாட்டியம் (ஆடல்) போன்றவை நுண் கலைகளே.

இவ்வாறே இக் கலைகளின் விளக்கங்கள் விரிந்து பரந்தவை.

இவற்றில் இசைக்கலைக்கும் நடனக்கலைக்கும் மாத்திரம் சிறப்பான அம்சம் ஒன்று உண்டு. அது என்னவெனில் கலைப்படைப்பு நிகழும்போதே நிகழ்த்து வோருக்கும், இரசிப்போருக்கும் இன்ப மூட்டும் எழிலைக் கொண்டுள்ளமையாகும். ஏனைய கலைகள் கலைஞர்களால் ஆக்கப்பட்ட பின்னரே கண்டும் கேட்டும் மகிழக்கூடியவை. இப்படி ஒவ்வொரு கலைகளுக்கும் தனித்தனிச் சிறப்புக்கள் உள்ளன அவை வியப்பானவை.

இப்போது நாம் ஆரம்பத்தில் பார்த்த "அரங்கேற்றம்" எனும் பதத்திற்கு வருவோம். அரங்கேற்றம் என்பது ஒரு மாணவனோ மாணவியோ நுண்கலையினை முறைப்படி ஒரு குருவிடம் கற்றுக்கொண்டு தேர்ச்சி நிலையை எட்டும் பட்சத்தில் அவர்களது குருவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அரங்கிலே அவனது திறமையை வெளிக்கொணருதல் ஆகும். அதாவது வருடக் கணக்காகப் பொறுமையுடனும் நிறைந்த கலையுணர்வுடனும் தான் கற்ற நுண்கலையினை முறைநெறி பிறழாது அரங்கில் ஆற்றுகைப்படுத்தல். இது கலைஞனாக வளர்ந்து வருபவர்களின் முதற்படி அத்திவாரம்.

தேடலின் மூலம் தன்னைத்தானே மென்மேலும் வளர்த்துக்கொண்டு பயிற்சி, முயற்சி இரண்டும் சேர்த்து இந்த அத்திவாரத்தில் ஒரு கலை வீட்டை அவர்கள் எழுப்பும் போது அங்கே ஓர் முதிர்ந்த கலைஞன் தோற்றம் கொள்கிறான் (கலையில் முதிர்ந்தவன்) ஆக அரங்கேற்றத்திற்கான தகுதிநிலை இங்கே முக்கியத்துவம் பெறுகிறது. இந்த இடத்தில் நினைவிற்கொள்ளவேண்டியது தன்னையும் பிறரையும் முழுமைப்படுத்த முயற்சிப்பதே ஒரு கலைப்படைப்பின் நோக்கமாகும். ஓர் கலைஞன் சமுதாயத்தை மாற்றியமைத்து நேர்வழிப்படுத்துவதற்காகவும், செழுமைப்படுத்துவதற்காகவும் கலைப்படைப்பை உருவாக்க முனையவேண்டும். அதில் கலையின் ஆழமும் தெரிய வேண்டும். அதேநேரம் மக்களையும் இலகுவில் சென்றடையக் கூடியதாகவும் இருக்கவேண்டும்.

"கலை கலைக்காக மட்டுமல்ல மக்களுக்காக" இது தமிழீழத் தேசியத்தலைவரின் ஆய்ந்தறிந்து கூறப்பட்ட பொன் வரிகள். எனவே ஒரு அரங்கேற்றமானது கலைஞனின் தொடக்க விழாவாகக் கருதப்பெற்று மேற்கொண்டு வளர்ந்து நல்ல கலைஞனாவதை நோக்கமாகக் கொண்டு அமைதலே நன்று.

இந்த அரங்கேற்றங்கள் எப்படி அமைய வேண்டும் என்பதில் கூட எங்களுக்கு குழப்பங்கள் தோன்றலாம்.

நுண்கலைகளிலேயே அரங்கேற்றங்கள் நடைபெறுவது வழமை. அவற்றிலும் அதிகமாக வாய்ப்பாட்டு இசைக்கருவிகள், ஆடல் அரங்கேற்றங்களே பெரும்பாலும் நடைபெறுகின்றன.



முதலில் வாய்ப்பாட்டு அல்லது இசைக்கருவிகள் (வாத்தியம்) அரங்கேற்றத்தை எடுத்துக்கொண்டால் அரங்கேறப் போகும் கலைஞர் சில முக்கியமான இசை உருப்படிகளில் நல்ல தேர்ச்சியுடையவராகவும் அதனை தாராளமாகப் பாடக்கூடியவராகவோ அல்லது வாசிக்கக்கூடியவராகவோ காணப்படுவது அவசியம். வர்ணம், கீர்த்தனைகள், இராகம், தாளம், பல்லவி, தில்லானா, திருப்புகழ் போன்ற உருப்படிகள் நிச்சயமாக ஓர் அரங்கேற்றத்தில் பாடப்படும். இன்னும் கீர்த்தனைகளுக்கு இராகம் பாடி கற்பனாசுரம்பாடி நிரவல் செய்வார்கள்.

முக்கியமாக இராகம், தாளம், பல்லவி அழகாக தாளக்கட்டுடன் பாடுதல் இன்றியமையாதது. இவைதவிர சுவைக்காக (ரசனைக்காக) மெல்லிசைகளும் சில சேர்த்துக்கொள்ளப்படுவதுண்டு. இவ்வழமை வாய்ப்பாட்டு வாத்தியங்களுக்குப் பொருந்தினாலும் தாளவாத்திய அரங்கேற்றங்களில் சில வித்தியாசமான அம்சங்கள் சேர்க்கப்படுகின்றன.

அதிலும் குறிப்பாக மிருதங்க அரங்கேற்றங்கள் முக்கியமானவை. ஒரு இசைக் கச்சேரி நடைபெறும்போல் அரங்கேற்றம் நடைபெறுவது அங்கே மிருதங்கம் இசைப்பவர் அரங்கேற்றம் காணுபவராக இருப்பார். (அவரின் குருவும் அருகிருப்பார்) அத்துடன் பல்லவி பாடும்போது வாசிக் கப்படும் வாசிப்பும் தனியாவர்த்தன வாசிப்புமே அந்தக் கலைஞரின் தேர்ச்சியை அளவிடும் கோல்களாக அமைகின்றன.

தேர்ச்சி அரங்கேறப் போகும் கலைஞருக்கு குருவின் கையினால் தம்பூராவோ, இசைக்கருவிகளோ எடுத்துக் கொடுக்கப்படும் போது அக் கலைஞன் குருவைப்பணிந்தெழும் காட்சி உணர்வு பூர்வமாக உருக்கமாக இருக்கும். குருவின் வாழ்த்து எப்பொழுதும் ஒரு கலைஞனை வாழவைக்கும் என மூத்த கலைஞர்கள் சொல்வார்கள். அரங்கேற்றங்களின் தொடக்கமே நுண்கலையின் இன்றியமையாத் தன்மையை எமக்கு உணர்த்தி விடுகிறது.

இவ்வாறே ஓர் ஆடல் அரங்கேற்றத்தை எடுத்து நோக்குவோமாயின் ராக தாள, பாவத்தினை சரியாகப்புரிந்து வெளிப்படுத்தும் வரை ஒரு ஆடல்கலை பயில்பவர்கள் தனது பயிற்சியை ஒழுங்காக மேற்கொண்டு குருவின் அனுமதி கிடைத்தபின் அரங்கேற விளைகிறார்கள். அநேகமாக பலவருடங்கள் இந்தத் தேர்ச்சி நிலைக்கான கற்ற காலமாக அமையலாம். சிலர் பரம்பரை பரம்பரையாக கற்றுவருவதால் சிறுவயதிலேயே அரங்கேறக் கூடிய தேர்ச்சியை அடைந்து விடுகிறார்கள். ஏனைய சிலர் முறைப்படி கற்றுக்கொண்டு பெரியவர்களானதன் பின் அரங்கம் காணுகிறார்கள்.

இந்த ஆடல் அரங்கேற்றங்களில் முக்கியமாக ஏழு ஆடல் உருப்படிகள் ஆடப்படுதல் வேண்டும். அவை மலர்வணக்கம், ஜதீஸ்வரம், சப்தம் அல்லது கௌத்துவம், வர்ணம், கீர்த்தனை, பதம், தில்லானா என்பனவாகும். இவை அடிப்படையானவையாயினும் இன்னும் சில உருப்படிகள் அழகூட்டுவதற்காகச் சேர்க்கப் படுவதுண்டு.

அதாவது வர்ணம் எப்படி ஆடப்படுகிறதோ அதில்தான் அந்த நாட்டியகர்த்தாவின் திறன் ஆய்வு செய்யப்படுகிறது. பதவர்ணம் என்னும் உருப்படியே மிகக்காத்திரமானதாக அமையும். ஆடல் அரங்கேற்றங்களில் நட்டுவாங்கம், பாடல், மிருதங்கம், வயலின், புல்லாங்குழல், வீணை, ஹார்மோனியம் போன்ற அணிசெய் கலைஞர்களின் பங்கும் மிகமிக வேண்டிய ஒன்று.

அதாவது அணிசெய் இசைக்கேற்ப நாட்டிய மங்கையோ, மகனோ ஆடுவார்கள். இங்கு குரு நட்டுவாங்கம் இசைப்பார். இந்த அணிசெய் கலைஞர்கள் தேர்ச்சியுடையவர்களாகவும் காணப் படுவார்கள். தரமான அரங்கேற்றங்களுக்கு உதாரணமாக அண்மையில் தமிழீழ நுண்கலைப் பிரிவினால் நடாத்தப்பட்ட மிருதங்க வாய்ப்பாட்டு ஆடல் அரங்கேற்றங்களை இங்கே குறிப்பிடலாம்.

அண்மைக்காலங்களில் பெரும்பாலும் ஆடல் அரங்கேற்றங்களில் காணப்படும் ஒரு கவலைக்குரிய விடயம் என்னவெனில் பெற்றோர்களின் அறியாமைத் தன்மையால் சரியான தேர்ச்சியை எட்டமுன்னர் அல்லது ஓரளவேனும் இல்லாது பிள்ளைகளை அரங்கேற்ற முனைவது வெறுமனே புகழுக்காகவும் சமுதாயத்தில் பெயரெடுப்பதற்

கலைமகள்

காகவும், போட்டி மனப்பான்மை புடனும் ஆற்றப்படும் இந்தச் செயல் பிள்ளைகளைப் பாதிக்கும் என்பதை இவர்கள் எண்ணுவதாகத் தெரியவில்லை.

பெரும்பாலும் வெளிநாடுகளில் வசிக்கும் நம்மவரிடையே இப்பழக்கம் ஒரு நாகரிகமாய்ப் போய்விட்டது. பிள்ளைகள் இதனால் தேர்ச்சியடைய முன்னரே முதிர்ந்து தங்களைப் பெரிய கலைஞர்களாக எண்ணிக்கொண்டு விடுகிறார்கள். கலையின் ஆழத்தை, தத்துவத்தை அறியாமலேயே தெளிவில்லாதவர்களாகமாற முனைகிறார்கள். இந்தப் பிழையான வழிநடத்தலை மாற்றி நல்ல பண்புகளை வளர்தெடுக்கவும் முறைப்படி கற்றல் அவசியமாகிறது.


குருவை மதித்து பெரியோரைக் கனம் பண்ணி வளர்தலை முறையான கலைக் கல்வியினூடே நாம் வளர்த்தெடுக்க முடியும்.

(22 ஆம் பக்கம் பார்க்க)

# “வேதனையில் முடிந்த சாதனை”

இந்திய-பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான டெஸ்ட் கிரிக்கெட் தொடர் நேற்று முன்தினம் முடிவுக்கு வந்ததுடன் இந்திய ரசிகர்களுக்கு ஏமாற்றத்தையும் பொதுவாக கிரிக்கெட்டை விரும்பும் ரசிகர்களுக்கு ஆச்சரியத்தையும் ஏற்படுத்தி விட்டது.

இந்தத்தொடர் ஆரம்பித்தவுடனேயே அனைவராலும் ஆசியாவில் கிரிக்கெட் யுத்தம் ஆரம்பிக்கப் பட்டுவிட்டதாகக் கருதப் பட்டது. அது போன்றே இரு நாடுகளுக்கிடையில் நடைபெறும் கிரிக்கெட போட்டிகள் மிகவும் உன்னிப்பாக கவனிக்கப்பட்டு வந்தமை வரலாற்றுச் சான்றுகள் தெரிவிக்கின்றன.



இத்தொடரின் முதலாவது போட்டியில் இரு அணிகளும் பந்து வீச்சாளர் களை துவம்சம் செய்து ஓட்டங்களைக் குவித்து சாதனை படைத் தன. இந்த சாதனை அதாவது இதே பைசலாபாத் மைதானத்தில் பல இரட்டையர்கள் 200இற்கு மேற்பட்ட இணைப்பாட்டத்தை ஏற்படுத்தியுள்ளனர். 1984ஆம் ஆண்டு நடைபெற்ற அதே அணியுடனான போட்டியில் பாகிஸ்தானின் முதாசர் நசார்-ஒமார் இணை 250 ஓட்டங்களைக் குவித்ததுடன் ஆறு விக்கெட்டுக்களை மட்டுமிழந்து 674 ஓட்டங்களைக் குவித்தது. 1982 ஆம் ஆண்டு மியன்டாட்டும் அப்பாஸ"ம் இணைந்து நான்காவது விக்கெட் இணைப்பாட்டமாக 287 ஓட்டங்களைப் பெற்றனர்.

அதேபோன்றே இந்தப் போட்டித் தொடரிலும் இந்திய-பாகிஸ்தான் வீரர்கள் சிறந்த இணைப்பாட்டத்தை ஏற்படுத்தினர். எவ்வாறேனும் போட்டி சமநிலையில் முடிந்தது.

அடுத்ததாக லாகூரில் நடந்த இரண்டாவது டெஸ்ட் போட்டியிலும் துடுப்பாட்ட வீரர்களின் கரமே ஓங்கிய நிலையில் இந்தப் போட்டியும் சமநிலையில் முடிவுற நேர்ந்தது.

இதனால் மூன்றாவதும் இறுதியுமான கராச்சி டெஸ்ட் போட்டியும் பந்துவீச்சாளர்களின் சாதனைக்களமாகிவிட்டது. இப் போட்டியில் முதலாவது இனிங்சில் முதலாவது ஓவரில் இந்திய வீரர் ஹட்ரிக் சாதனை நிகழ்த்தினார். அத்துடன் பாகிஸ்தானின் துடுப்பாட்டம் 245 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

எனினும் நாங்களும் சளைத்தவர்களல்ல என்பதை அடித்துக்கூறும் வகையில் பாகிஸ்தான் பந்துவீச்சாளர்கள் இந்திய அணியை 238 ஓட்டங்களுக்குள் சுருட்டி சாதனை படைத்தனர். முன்னைய போட்டிகளில் சாதனை படைத்த இந்திய துடுப்பாட்ட வீரர்கள் இதில் மண்கவ்வினர்.

எனினும இரண்டாவது இனிங்சில் பாகிஸ்தான் அணி துடுப்பாட்ட வீரர்களிடம் இந்திய பந்துவீச்சு வரிசை மண்டியிட்டது. சிறந்த அனுபவ பந்துவீச்சாளரான அணில் கும்பிளேயினால் தேவையான போது விக்கெட்டுக்களை வீழ்த்தமுடியாது விட்டது. குறிப்பாக பைசல் இக்பால் என்ற இளம் துடுப்பாட்ட வீரரை அவரால் விழுத்தமுடியாமல் போனமை துரதிர்ஷ்டமாகும்.

அதுமட்டுமன்றி பனையால் விழுந்தவனை மாடு மிதித்தது போன்று பாகிஸ்தானிய பந்துவீச்சாளர்கள் இந்திய




துடுப்பாட்ட வரிசையை அதன் இரண்டாவது இனிங்சில் நன்றாகவே பதம் பார்த்துவிட்டனர். பைசலாபாத்தில் 254 ஓட்டங்களைக் குவித்த சேவாக் 606 என்ற பாரிய இலக்கு நோக்கி பயணம் ஆரம்பித்தவேளை தனது நிதானத்தை இழந்தமையும் பொறுப்பு வாய்ந்த அணித் தலைவர் ராவிட் வெறும் இரண்டு ஓட்டங்களில் பார்வையாளர் அரங்குக்கு வெளியேறியதும் ஏனென்று தெரியவில்லை. அடுத்ததாக லக்ஷ்மன், சச்சின் போன்றோரும் தமது பொறுப்பை அறியாமல் செயற்பட்டு ஆட்டமிழந்தனர்.

அநேகமாக இந்திய அணி பாகிஸ்தான் அணியுடனான டெஸ்ட் தொடர்களில் தோல்வியைச் சந்தித்திருப்பினும் போட்டி முடிவுற ஒருநாள் மீதமிருக்கையில் இவ்வாறானதொரு (341) கூடிய ஓட்டங்களால் தோல்வியை சந்தித்திருப்பது இதுவே முதல் முறையாக இருக்கலாம். இந்தியஅணி முதல போட்டிகளில் சாதனை படைத்தபோதும் இறுதியில் வேதனைக்குள்ளாகிய நிலையில் வரும் திங்களன்று ஆரம்பமாகும் ஒருநாள் தொடரையாவது கைப்பற்றி நாடு திரும்புமா என்ற எதிர்பார்ப்பு இந்திய பாகிஸ்தான் ரசிகர்களிடம் மட்டுமன்றி உலகக் கிரிக்கெட் ரசிகர்களிடமும் காணப்படும் என்பதே உண்மையாகும்.

**வடிவேல்**

## பயந்தது நடந்துவிட்டது

**கவாஸ்கர்**



கராச்சி டெஸ்டைப் பார்க்கும்போது, 1998/99இல் கொல்கத்தாவில் நடந்த ஆசியக் கோப்பை டெஸ்ட் ஞாபகத்திற்கு வருகிறது. அப்போட்டியிலும், இந்திய அணிமுதல் இனிங்சில் அருமையாக பந்துவீசி 26ஓட்டங்களில் பாகிஸ்தானின் ஆறு விக்கெட்டை வீழ்த்திவிடும். பின்னர் மொயின்கான், வசிம் அக்ரம் இணைந்து பொறுப்புடன் ஆடி முதல் இனிங்சில் 185 என்ற கௌரவமான ஓட்ட எண்ணிக்கையை பாகிஸ்தான் அணிக்குப் பெற்றுக் கொடுப்பார்கள்.

முதல் இனிங்சில் இந்திய அணி 223 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. பின்னர் இரண்டாவது இனிங்சில் அபாரமாக ஆடிய பாகிஸ்தான் 316 ஓட்டங்கள் குவித்து இந்திய அணிக்கு வெற்றி இலக்காக 279 ஓட்டங்களை நிர்ணயித்தது. இது எளிதாக எட்டக்கூடிய இலக்கு என்றாலும், பாகிஸ்தானின் அனல் பறக்கும் பந்துவீச்சில் இந்தியா 232 ஓட்டங்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து தோல்வியை எட்டியது. இம்முறையும் கராச்சிப் போட்டியிலும் இதே கதைதான் நடந்துள்ளது. இதற்கு ஒருநாள் தொடரிலாவது நமது வீரர்கள் பதிலடி தரவேண்டியது அவசியம் என இந்திய அணியின் முன்னாள் அணித்தலைவர் கவாஸ்கர் தெரிவித்துள்ளார்.




## ஒட்டுமொத்த அணியும், தோல்விக்குக் காரணம்!

**ராவிட்**



ஒட்டுமொத்த அணியினரின் ஆட்டமே தோல்விக்குக் காரணம் என இந்திய அணியின் அணித்தலைவர் ராகுல் ராவிட் தெரிவித்துள்ளார். கராச்சியில் புதன்கிழமை முடிவுற்ற மூன்றாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் 341 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்தியாவை வென்றது பாகிஸ்தான்.

முக்கியத்துவம் வாய்ந்த போட்டிக்கு சிறந்த 11வீரர்களே தேர்வு செய்யப்பட்டு களமிறங்கினோம். ஆனால் தோல்வி வித்தியாசத்தைப் பார்த்தால் துடுப்பாட்டவரிசை குறித்து சிந்திக்கத் தோன்றுகின்றது.

மூன்று வேகப்பந்துவீச்சாளர்களைக் கொண்ட பாகிஸ்தான் அணியை எதிர்கொண்டோம். அவர்கள் மேலும் சிறப்பாகப் பந்து வீசியிருக்கவேண்டும். அதேபோல் முதல் இனிங்சில் பாகிஸ்தானை 245 ஓட்டங்களில் ஆட்டமிழக்கச் செய்தபோது துடுப்பாட்ட... சிறப்பாக ஆடி அணிக்கு வலிமை சேர்த்திருக்க வேண்டும்.

பாகிஸ்தான் அணியில் முகமது ஆசிப் இரண்டு இனிங்சிலும் சிறப்பாக ஆடினார். இந்தியத் தரப்பில் யுவராஜ்சிங் ஆட்டம் மட்டுமே இரண்டாவது இனிங்சில் அணிக்கு சிறப்புச் சேர்த்திருந்தது என்றார் ராவிட்.இரண்டாவது இனிங்சிலும் சொற்ப ஓட்டங்களில் ராவிட் ஆட்டமிழந்தது குறிப்பிடத்தக்கது.

## வெள்ளிவிழா கொண்டாடிய ‘அன்டர் ஆர்ம்’ பந்துவீச்சு

கிரிக்கெட்டில் சுவாரஷ்யங்களுக்கு எப்போதும் பஞ்சமில்லை. ஒரு சுவாரஷ்யமான நிகழ்வு ஒக்லாந்தில் கடந்த புதன்கிழமை விழாவாகக் கொண்டாடப்பட்டுள்ளது.

அதுதான் ‘அன்டர் ஆர்ம்’ எனப்படும் பந்தை உருட்டிவிடுதல்.

1981ஆம் ஆண்டு பெப்ரவரி முதலாம் திகதி அவுஸ்திரேலியாவுக்கும் நியூசிலாந்துக்கும் இடையே மெல்பேர்ன் மைதானத்தில் நடைபெற்ற சர்வதேச ஒரு நாள் போட்டி அந்த ஆட்டத்தின் கடைசி ஓவர் கிரிக்கெட் வரலாற்றில் பெரும்பரபரப்பை ஏற்படுத்தியது.

முன்னாள் வீரரும் இந்திய அணியின் தற்போதைய பயிற்சியாளருமான கிரேக் செப்பலின் சகோதரர் டிரவேர் செப்பல் ஓவரின் கடைசிப் பந்தை வீசினார். நியூசிலாந்து வீரர் பிரைன் மெக்கன்ஸி அப்பந்தை எதிர்கொண்டார். ஆறு ஓட்டங்களை எடுத்தால் ஆட்டம் இடையில் முடியும் என்ற பரபரப்பான நிலையைப் பெற்றிருந்தது.

பந்தை எப்படிப் போட்டாலும் மெக்கன்ஸி சிக்ஸர் அடித்தே தீரவேண்டும் என்ற வைராக்கியத்தில் இருந்தார். ஆனால் டிரவோர் அந்த பந்தை புத்திசாலித்தனமாக ‘அன்டர் ஆர்ம்’ முறையில் உருட்டிவிட்டார். இதனால் எதிர்பார்த்த பலனை மெக்கன்ஸி பெறவில்லை. டிரவோரின் இச்செயல் கிரிக்கெட் வரலாற்றில் மறக்கமுடியாததாக அமைந்துவிட்டது.

அது முதல் ‘அன்டர் ஆர்ம்’ பந்துக்கு தடையும் விதிக்கப்பட்டது.அந்தவீச்சுக்கு தடை விதிக்கப்பட்டாலும்,அந்த நிகழ்வை ரசிகர்கள் மறக்கவில்லை. மேலாக, ஒவ்வொரு ஆண்டும் ஏதாவது நிகழ்ச்சியின் போது பிரபலங்கள் அந்த நிகழ்வை குறிப்பிட்டு வருகின்றனர்.

இந்தச்சம்பவம் நடந்து 25 ஆண்டுகள் ஆனதையொட்டி,அதை நினைவு கூரும் வகையில்



ஒக்லாந்தில் (நியூசிலாந்து) புதன்கிழமை நிகழ்ச்சி ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பந்து வீசிய டிரவோர் செப்பலும், பந்தை எதிர்கொண்ட மெக்கன்ஸியும் கலந்து கொண்டது நிகழ்ச்சிக்கு கூடுதல் சுவராஷ்யத்தை அளித்திருந்தது.

எனது சகோதரரும் அந்த அணியின் தலைவருமான கிரேக் செப்பலின் ஆலோசனைப்படிதான் அந்த பந்தை அவ் வாறு வீசினேன். இதுவரை சர்வதேச போட்டிகளில் 736 பந்துகள் வீசியுள்ளேன்.ஆனால்அது மட்டுமே ஒரே ‘அன்டர் ஆர்ம்’ பந்து. குழந்தைகள் என்னைப் பார்த்து நீங்கள்தான் ‘அன்டர் ஆர்ம்’ பந்து வீசியவரா எனக் கேட பார்கள். நான்தான் என்று தெரிவிப்பேன் என புன்னகைத்தவாறு கூறினார் டிரவோர் செப்பல்

மெக்கன்ஸி பேசும்போது அச்சம்பவத்தால் தாம் பெரிதும் ஏமாற்றம் அடைந்தோம். அது போன்ற விஷயங்கள் பல கிரிக்கெட்டில் நிகழ்ந்தாலும், அன்டர் ஆர்ம் மாதிரியான நிகழ்வுகள் நடக்கக்கூடாது என்பதே எனது விருப்பம் என்றார்.

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உளரீதியான பாதிப்புகள் எதுவும் இல்லாதிருந்தபோதிலும் வெறுமனே காழ்ப்புணர்ச்சி காரணமாக இவ்வாறு நிர்ப்பந்திக்கப்பட்டவர்கள் வள்ர்ந்து பெரியவர்களான பின்னரும் சகமனிதர்களாக மதிக்கப்படுவதில்லை என அண்மைக்கால மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. இவ்வாறாகப் பாதிக்கப்பட்டவர்கள் 40 ஆயிரத்திற்கும் குறையாத தொகையினர் நோர்வேயில் உள்ளனராம் (ஆதாரம் : DW-Radio).

இந்தளவும் ஏன் ! 1956 இல் புத்த ஜெயந்தியை முன்னிட்டு சிங்களப்பேரினவாதம் முனைப்புப்பெற்றதுடன் அநாகரிக தர்மபால எழுதிய 'விகாரையில் புரட்சி' என்ற (ஹிட்லரின் Mein Kampf இற்கிணையானது) துவேசத்தொகுப்புடன் S.W.R.D. பண்டாரநாயக்கா கொண்டுவந்த 'சிங்கள மட்டும்' சட்டமூலமும் சேர்ந்து இலங்கைத்தீவைப் புத்தமயப்படுத்தப் போவதாக ஏதேதோ எல்லாம் செய்தன சிங்களத்தரப்புகள்.

ஆனால், இன்று புத்தபெருமானின் 14ஆவது அவதாரமாக பௌத்தர்களால் நம்பப்படும் தலாய் லாமா 2006-புத்தஜெயந்தி தினத்தையொட்டி சிறிலங்காவிற்கு வருவதை சிஹல உறுமய உட்பட சகல சிங்கள ஆட்சிபீடமுமே எதிர்க்கின்றது. தலாய் லாமாவை மேற்கத்தையத்தின் கையாள் எனக்கூட பேரினவாதம் சாடுகின்றது. சீனாவுக்கு எதிராக தீபெத் நாட்டிலே சறுக்கிப்போனதொரு புரட்சிக்குத் தலைமை தாங்கியதைத் தொடர்ந்து இந்தியாவில் தஞ்சம்கோரி வாழ்ந்துவரும் தலாய்லாமாவுக்கு, வன்முறைகளற்ற போராட்டத்தைச் சீனாவுக்கு எதிராக முன்னெடுத்ததாக 1989இல் நோபல் பரிசுவேறு வழங்கப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஆக சர்வதேச நீதி, நியாயம், நியதி என்று எதுவுமே வழக்கில் இல்லை. ஒவ்வொரு நாடும் தனது தனிப்பட்ட நலன்களுக்காக எந்த மனித விழுமியங்களையும் எப்படியும் புரட்டிப்போடத் தயாராகவே செயற்பட்டு வருகின்றது. இத்தகைய உலகில் மற்றவர்களின் பரிதாபப்பார்வையினால் எதனையும் சலுகையாகப் பெற்றுவிடலாமென அங்கலாய்ப்பது வீணானது. கானா நாட்டுக்கனவான் உட்பட எந்தப் பெரிய நாட்டினது கண்ணீரும் கைங்கரியமான காரணத்துக்காக மட்டுமே சிந்தப்படும் என்பதை மனதில் கொண்டு எங்களுடைய விதியை நாமே நிர்ணயிப்போம் ! 'பலமே வாழ்வு' என்று சொன்ன தேசியத்தலைவரின் அர்த்தப்பொதிவே இந்த உலகை ஆளுகின்றது. ஆகவேதான் எங்கள் பலத்தால் எழுவோம் நாங்கள் !

(17 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு வைர வெட்டு வெட்டி வரும்போது சாப்பு கொடியிலிருந்து மாற்றுக் கொடி வெளிவரும். (இதன் தண்டுப்பகுதியில் வேர்கள் காணப்படாது. இதனை வெட்டி நாட்டவும் முடியாது) இவ்வாறு கொழுந்து நாட்டி ஒருவருடத்தின்பின் மாற்று வெற்றிலை வந்து கொடிகளை வேர்த்தொகுதி கொண்ட சாப்புக் கொடிகளை முழுமையாக மண்ணில் வளையமாகச் சுற்றி பதித்தல் வேண்டும். மேலே இருக்கும் மாற்று வெற்றிலைக் கொடியை மரத்துடன் பிடிதத்துக் கட்டி விடவேண்டும்.

அதன் ஒவ்வொரு மொழியிலும் பல கிளைகள் உருவாகும். இவ்வாறு உருவாகும் கிளைகளில் ஒரு குருத்தும் ஒரு இலையும் விட்டு ஏனைய இலைகளைப் பறித்துக் கொள்ள முடியும். இவற்றில் நல்ல வீரியமான இளம்தண்டுகளை விட்டுவிட்டு ஏனைய வைகளை ஆறு மாதத்திற்கு ஒரு தடவை கத்தரித்துக் கொள்ளுதல் வேண்டும். இவ்வாறு கத்தரித்த கொழுந்துகளுக்கு பாத்திகளை செப்பனிட்ட நல்ல இறந்த ஆட்டெரு, மாட்டெரு, கோழியெரு என்பன இடப்படல் வேண்டும். இவ்வாறு இயற்கைப் பசளைகளை இடுவதால் மண்புழு, உழுவான்பூச்சி என்பவற்றினால் மண் இலகுபடுத்தப்படுகின்றது. இதன் காரணமாக புதிய வேர்கள் தோன்றி கொடியின் வளர்ச்சியை அதிகரிக்கின்றது. இவ்வாறு பராமரிக்கப்படும் கொடிகள் இரண்டு தசாப்தங்களிற்கு நிலைத்து நின்று பயன்தரக்கூடியதாக உள்ளது. இவ்வாறு உள்ள கொடிகளின் வேர்த் தொகுதிகள் கிழங்கு போன்ற அமைப்பில் வந்துவிடும். இரசாயன உரங்கள் பாவிப்பதனால் கொடியின் வீரியம் குறைவடைவதுடன் மண்ணும் இறுக்கம் ஏற்பட்டு வேர்கள் பரவ முடியாத நிலையில் அகத்துறிஞ்சல் குறைவடைந்து இதன் ஆயுட்காலம் குறை வடைகின்றது.

**முள்முருக்கு நாட்டுதல்:-**

வெற்றிலைக்கொடி பற்றிவளரும் தாவரம் என்பதாலும் அதிக வெயிலைத் தாங்கிப்பிடிக்கமாட்டாது என்பதால் அதற்கு நிழல் வழங்கக்கூடியதாக முள்முருக்கு நாட்டப்படுகின்றது. இது இலகுவில் துளிர்விடக் கூடியது. இதன் காரணமாக எந்த நேரமும் நிழலைப் பெறமுடியும்.

மற்றும் முருங்கை அவரை இனம் என்பதால் மண்ணில் வளத்தைப் பேணக்கூடியது மட்டுமல்லாது இலகுவில் அழித்துவிடக்கூடியதும் ஆகும். இதனால் முள்முருக்கு நாட்டப்படுகின்றது.

**ஊடுபயிர் நாட்டுதல்:-**

வெற்றிலைப்பயிரின் இடைகளில் சிறு கிழங்கு, கத்தரி, மிளகாய், வெண்டி போன்ற பயிர்கள் பயிரிட முடியும். இதற்கு நோய்த்தாக்கம் ஏற்படுவதுகுறைவு. இதன் அறுவடைகள் ஒரு குடும்பப் பாவனையைப் பூர்த்தி செய்யக்கூடியதாகும். இதுமட்டுமல்லாது இதன் கரைப் பிரதேசங்களில் வாழை, கமுகு என்பனவும் பயிரிடமுடியும்.


# ஆசிரியப் பணிக்கான வேண்டுகை

பின்வரும் பாடங்களில் க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கு சனி, ஞாயிறு நாட்களில் கற்பிக்கக்கூடிய ஆசிரியர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப் படுகின்றன.

☆ **கற்பிக்க வேண்டிய பாடங்கள்:**

01) தமிழ்
02) புவியியல்
03) வரலாறு
04) கணிதம்
05) உயிரியல்
06) வேதியியல் (இரசாயனவியல்)
07) பூதியல் (பௌதீகவியல்)
08) கணக்கியல்
09) வணிகவியல்
10) பொருளியல்

☆ **கற்பிக்க வேண்டிய இடங்கள்:**

01) கிளிநொச்சி
02) புதுக்குடியிருப்பு
03) மல்லாவி
04) பூநகரி

☆ **வேண்டுகை முடிவு நாள்: 10.02.2006**

☆ **வேண்டுகை அனுப்ப வேண்டிய முகவரி:-** பொறுப்பாளர்,
மனிதவள மேம்பாட்டுப பகுதி,
நிதித்துறை,
நாகதம்பிரான் வீதி,
ஆனந்தபுரம்,
கிளிநொச்சி.

☆ **நேர்காணல் நடைபெறும் நாள்:** 18.02.2006 காலை 9.00 மணி.

☆ **நேர்காணல் நடைபெறும் இடம்:** மனிதவள மேம்பாட்டுப் பகுதி,
நிதித்துறை,
நாகதம்பிரான் வீதி,
ஆனந்தபுரம்,
கிளிநொச்சி.

☆ நேர்காணலுக்கு வருகை தருவோர் தங்கள் கல்வித் தகைமைச் சான்றிதழ்கள், பிறப்புச் சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ், அடையாள அட்டை ஆகியவற்றையும் வேறு தகைமைச் சான்றிதழ்கள் இருப்பின் அவற்றையும் எல்லாவற்றினதும் நிழற்படிகளையும் கொண்டுவருக.


☆ சம்பளம்: நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

ஆளுகை,
மனிதவள மேம்பாட்டுப் பகுதி,
நிதித்துறை.

(சி.13828)



# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 03 | 14 |
| 10 | 01 |
| 1977 | 2005 |

அமரர்
**பெருமாள் கிருஸ்ணமூர்த்தி**
(பழைய மாணவன், கிளி/ தருமபுரம் மகா வித்தியாலயம்)

திதி: 03. 02. 2006

ஆண்டு ஒன்று நகர்ந்தாலும்
ஆறாத துயர நினைவுகளுடன்
கண்ணீர்ப் பூக்களை சமர்ப்பித்து
ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

3/3, உழவன் ஊர்,
தருமபுரம்.

குடும்பத்தினர்.

(7392)

## அத்தியாயம்- 23

### பகுதி -84

நாங்கள் கோயிலிலிருந்து வெளியேறி, மீண்டும் விளையாட்டறைக்கு வந்தோம். நாங்கள் திரும்பி வரும் வழியில் டிப்ஸ் ஒரு வார்த்தை தானும் கதைக்கவில்லை. விளையாட்டறைக்குள் சென்றதும் மேசைக்கருகில் இருந்த கதிரையில் அவன் அமர்ந்துகொண்டான். என்னைப் பார்த்துப் புன்னகை செய்தான். "அது உண்மையாகவே அருமையாக இருந்தது" என்றான். " நான் இண்டைக்குக் கடவுளின்ர வீட்டுக்குப் போனேன். முதல் தடவையாகப் போயிருந்தேன். நான் கடவுளின்ர வீட்டில இருந்தனான்."

மடித்து மடியில் வைத்துக்கொண்டிருந்த கைகளைப் பார்த்தபடி உணருறபடியா அது எனக்குத் தெரியுது" இறுகப்பிடித்த கைகளை மார்பின் மீது வைத்துக்கொண்டு எனது கண்களுக்குள் உற்றுப் பார்த்தான். மனக்கலக்கம் தருகின்ற சுருக்கமொன்று அவன் நெற்றியில் விழுந்திருந்தது. நீண்ட நேர மௌனத்துக்குப்பிறகு "இந்த மாதிரியான விசயங்கள புரிஞ்சு கொள்ளுறது சரியான கஷ்டமாயிருக்கு" என்று முடித்தான். யன்னலுக்கருகில் நடந்து சென்ற அவன் அதற்கூடாக அந்தக் கோவிலைப் பார்த்தான்.

"அது கடவுளின்ர வீடு" அமைதியாகச் சொன்னான் டிப்ஸ். "அன்புதான் கடவுள் எண்டு அம்மம்மா சொன்னவ. தான் கடவுள நம்புறதா ஜேக் சொன்னவர். தான் பிரார்த்தனை செய்யிறவர் எண்டும் அப்பிடியெண்டாதான் கடவுளோட கதைக்கிற




நீண்ட நேரம் மௌனமாகவே அமர்ந்திருந்தான். திடீரென்று, "எனக்குச் சொல்லுங்கோ...." என்று தொடங்கியவன் "ஏன் சில பேர் கடவுள நம்புறவர்கள்... ஏன் சிலபேர் நம்புறயில்ல.?" என்று கேட்டான்.

"இந்தக் கேள்விக்கு எப்பிடி மறு மொழி சொல்லுறதெண்டு எனக்குத் தெரியேல்ல எண்டுதான் நான் நினைக்கிறன் டிப்ஸ்." என்றேன்.

"ஆனா சிலபேர் கடவுள நம்புறதும் சில பேர் கடவுள நம்பிறயில்ல என்பதும் உண்மை தானே?"

"ஓம் அப்பிடித்தான் நான் நினைக்கிறன்"

"அம்மம்மா நம்புறவ. அம்மாவும் அப்பாவும் கோயில்ல நம்பிக்கை இல்லாதவை. ஜேக் நம்பினவர். அவர் எனக்கு அதப்பற்றிச் சொன்னவர்."

"ஒவ்வொருவரும் அதைத் தாங்கள் தாங்களேதான் முடிவுசெய்து கொள்ளுறவை எண்டுதான் நான் நினைக்கிறன். ஒவ்வொரு ஆளும் தன்ர தன்ர முடிவுகள எடுக்கிறவை" என்று சொன்னேன்.

"கடவுள் எப்பிடியானவரா இருப்பார் எண்டு யோசிக்கிறன்" என்று தொடங்கினான் டிப்ஸ்.

"கடவுள் என்கிறவர் பரலோகத்தில இருக்கிற எங்கள் பிதா எண்டு அம்மம்மா ஒருக்காச் சொன்னவ. பிதா எண்டுறது அப்பா எண்டுறத வேற விதமாச் சொல்லுறதுதான். ஆனா அப்பா மாதிரி கடவுள் இருக்கிறத நான் விரும்பயில்ல. ஏனெண்டா சில நேரங்களில, அப்பா என்னில நேசம் இல்லையெண்டு நினைக்கிறனான். அம்மம்மாவப் போல நானும் கடவுள நம்புறதெண்டா கடவுள் என்னில நேசமா இருக்க வேணும் எண்டு நான் நினைக்கிறன். ஆனா அப்பா என்னில நேசந்தான் எண்டு அம்மம்மா சொல்லுறவ. அவர் என்னில நேசந்தானெண்டா எனக்கு அது ஏன் தெரியாமப் போயிற்றுது? அம்மம்மா என்னில நேசம். நானும் அவவில நேசம். அத என்னட மனதின்ர ஆழத்தில வர் எண்டுதான் சொல்லவேணும் எண்டும் சொன்னவர். நான் ஒருபோதும் பிரார்த்தனை செய்ததில்ல. ஆனா கடவுளோட கதைக்க எனக்கு நல்ல விருப்பம். அவர் என்ன சொல்வார் என்கிறதக் கேட்க எனக்கு விருப்பம். பள்ளிக்கூடத்தில என்னட அறையில இருக்கிற ஒரு பையனும் கடவுள நம்புறவன். அவன் ஒரு கத்தோலிக்கன். அவன் கடவுள நம்புறவன். இன்னொரு பையன் இருக்கிறான். அவன் யூதன். அவன் சின்ன கோக்குக்குப் போறவன். சின்ன கோக் எண்டுறது யூதர் கடவுளுக்காக கட்டுற வீடு" சொல்லிவிட்டு என்னைத் திரும்பிப் பார்த்தான். கைகளை என்னை நோக்கி நீட்டிப் பிடித்தான். ".... ஆனா, அப்பாவும் அம்மாவும் கடவுள நம்புற ஆக்களில்ல. அதால நானும் கடவுள நம்புற ஆளா இல்ல. கடவுள அறியாதது எனக்குத் தனிமை உணர்வொண்டத் தருகுது."

விளையாட்டறையில் குறுக்கும் நெடுக்குமாக நடைபோட்டான்.

"அம்மம்மா ஒரு நல்ல பெண்மணி" என்று மீண்டும் தொடங்கினான்."அவ கோயிலுக்குப் போறவ. கடவுளப் பற்றி பாட்டுகள் பாடுறவ. அவநம்பிக்கை உள்ளவ." என்று சொல்லிக் கொண்டே என்னருகில் வந்து என் கைகளைத் தன் கையில் எடுத்துக் கொண்டு எதையோ தேடுவது போல் என் முகத்தை ஆவலுடன் உற்று நோக்கினான். ஏன் சில பேர் கடவுள நம்புறவை? ஏன் சிலபேர் கடவுள நம்புறதில்ல எண்டத எனக்குச் சொல்லுங்கோ?" என்றான்.

இது பதில் சொல்வதற்குக் கடினமான ஒரு கேள்வியாக இருந்தது.

"ஒவ்வொருவரும் வளர்ந்த உடன இந்த முடிவ எடுப்பினம். தான் எதை நம்புறதெண்டத அவரவர்தான் முடிவு செய்யவேணும். ஆனா இந்தக் கணத்தில இது உங்களுக்குக் குழப்பத்த தருகுது அல்லவா?" என்றேன்.

"ஓம்" என்றவன், "சரியான குழப்பமா இருக்குது என்றான். எங்களுக்கிடையே நீண்ட நேரம் மௌனம் நிலவியது. அமைதியை உடைத்துக்கொண்டு அவன் கேட்டான்.

"நான் இப்ப என்ன செய்ய முயற்சிக்கிறன் எண்டு உங்களுக்குத் தெரியுமா?"

"இல்லை. என்னது?"

"பேஸ்போள் எப்பிடி விளையாடுறதெண்டு தெரிஞ்சுகொள்ள முயற்சிக்கிறன். அப்பாதான் எனக்குச் சொல்லித்தாறார். நாங்கள் பூங்காவுக்கு போறனாங்கள். ஆனா அப்பாவுக்கும் பெரிசா பேஸ்போள் விளையாடத் தெரியாது. பந்துகள அந்தத் துடுப்பால அடிக்கிறது பெரிய கஷ்டம். பந்த வீச்சா எறியவேணும் எண்டு நீங்கள் நினைக்கயுக்க அதுகள் வீச்சாப் போகாது. ஆனா நான் அதுப் பழகத்தான் வேணும். பள்ளிக்கூடத்தில எல்லாப் பெடியளும் பேஸ்போள் விளையாடுறவங்கள். அவங்களோட சேர்ந்து விளையாட வேணும். அதால நான் கெதியா அதுப் பழகிக் கொள்ள வேணும் அதால நான் கடுமையா முயற்சி செய்கிறன். நான் எப்பிடியும் பழகுவன். பெரிசா விருப்பமில்ல. ஆனாஅந்த விளையாட்டில எனக்கு கள்ளனும் பொலிசும் விளையாட்டெண்டா நல்லா விளையாடுவன். திருமதி. ஹென்றி கிழவியட பின்வளவுக்குள்ளால ஓடுறது எனக்கு நல்ல விருப்பம். இப்பவும் நான் ஓடினா அவ கத்துறவ."

அழைப்பு மணி ஒலித்தது. அவனைக் கூட்டிக் கொண்டு போக அவனுடைய தாய் வந்திருந்தாள்.

"போயிற்று வாங்கோ டிப்ஸ். உங்கள அறியக் கிடைச்சது மனதுக்கு நல்ல மகிழ்ச்சியாயிருக்குது." என்றான்.

"ஓம் எனக்கும் அப்பிடித்தான் என்ற டிப்ஸ் போயிற்று வாறன்" என்றான்.

நாங்கள் வரவேற்பறைக்குள் சென்றோம். கெந்திக்கொண்டே போய் தாயாரின் கையைப் பற்றிக்கொண்டான்.

"ஹெலோ அம்மா! இஞ்ச எனித் திரும்பி வரமாட்டன். இது பிரியாவிடை சொல்லுற நாள்."

அவர்கள் இருவரும் அதாவது தன்னுடைய விளையாட்டுகளின் ஊடாகத் தன்னை வெளிப்படுத்தும் வாய்ப்பை பெற்று அதனூடாக மகிழ்ச்சியானவனும் இயலுமை மிக்கவனுமாக வெளிப்பட்டிருந்த ஒரு சிறிய பையனும் பெரும் பேறுபெற்ற தன்னுடைய பிள்ளையைப் புரிந்துகொள்வதிலும்விதந்து பாராட்டுவதிலும் வளர்ந்துவிட்டிருந்த ஒரு தாயும் ஒன்றாக அங்கிருந்து கிளம்பிச் சென்றார்கள்.

## அத்தியாயம்- 24

இரண்டரை வருடங்களுக்குப் பிறகு, ஒருநாள் நான் எனது வீட்டின் வரவேற்பறையில் அமர்ந்து நூலொன்றை வாசித்துக் கொண்டிருந்தேன். வீதி மூலையிலே, தரை மட்டத்தில் அமைந்த மாடியாக எனது வீடு இருந்தது. திறந்திருந்த யன்னல்களினூடாக ஒருகுரல் கேட்டது. மிக வலுவான அந்தக் குரல் ஒருவித சந்தத்துடனும் ஒலித்தது. மிகவும் பரிச்சயமான ஒரு குழந்தையினுடைய குரல் அந்த யன்னல்களூடாக வந்துகொண்டிருந்தது.

"ஏய்! பீற்றர் மே! இஞ்சவா. வந்து எங்கட முத்தத்தில என்ன இருக்கெண்டு பார். எங்கட முத்தத்தில வேறவேற பற்றைச்




செடிகளும் மரங்களுமா இருபத்தேழு இருக்குது. வா வந்து பார்"

"இருபத்தேழு... என்ன இருக்குது?"

"வேறவேற பற்றைச் செடிகளும் மரங்களும் எங்கட முத்தத்தில இருக்குது"

"என்னட்ட என்ன இருக்கெண்டு நீ வந்து பாரன்"

"என்ன அது? ஓ.......மாபிள்கள்!"

"ஓம். மாத்துவோமா?"


"ஓம். என்னத்த மாத்த விரும்புறாய்?"

" நீ என்ன வச்சிருக்கிறாய்? நீ என்ன வச்சிருக்கிறாய் டிப்ஸ்?"

ஆம் அது டிப்ஸும் அவனது நண்பனும் தான்.

"நான்சொல்லுறன் பொறு....... நான் சொல்லுறன்" கிளர்ச்சியோடு ஒலித்தது டிப்ஸின் குரல்.

"அந்தா அந்தப் பாம்புக் கண்ணோட இருக்கிற நீல மாபிளத் தா. இந்த வசந்த



காலத்தில முதன் முதலா வந்த மண்புழுவ உனக்குத் தாறன்."

"உண்மையாத் தருவியா. எங்க இருக்குது அது?"

"இஞ்ச வச்சிருக்கிறன்" என்ற டிப்ஸ் தனது காற்சட்டைப் பையினுள் கையை ஓட்டி ஒரு கண்ணாடிப் போத்தலை அவதானமாக வெளியே எடுத்தான். அதனுடைய மூடியின் மீது ஓட்டைகள் போடப்பட்டிருந்தன. அந்த மூடியைத் திருகித் திறந்த டிப்ஸ், ஒரு மண் புழுவை மிக அவதானமாக வெளியே எடுத்தான். அதை பீற்றர் நீட்டிய கையில் வைத்தான். அவனுடைய முகத்தில் புன்னகை விரிந்திருந்தது. பீற்றருக்கும் அந்தப் பரிமாற்றம் பிடித்திருந்தது.

(தொடரும்)

## உலகை ஆட்டிப் படைக்கும் புதிர் விளையாட்டு

புதிர்-18 இற்கான விடையினை சரிபார்த்துக் கொள்ளுங்கள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 8 | 9 | 7 | 1 | 3 | 4 | 6 | 5 |
| 5 | 1 | 6 | 2 | 4 | 9 | 3 | 7 | 8 |
| 4 | 7 | 3 | 5 | 6 | 8 | 2 | 1 | 9 |
| 1 | 3 | 5 | 6 | 8 | 2 | 7 | 9 | 4 |
| 8 | 6 | 7 | 4 | 9 | 5 | 1 | 3 | 2 |
| 9 | 4 | 2 | 3 | 7 | 1 | 8 | 5 | 6 |
| 3 | 2 | 1 | 8 | 5 | 6 | 9 | 4 | 7 |
| 6 | 9 | 4 | 1 | 2 | 7 | 5 | 8 | 3 |
| 7 | 5 | 8 | 9 | 3 | 4 | 6 | 2 | 1 |

ஒற்றை இலக்கம் என்று அதற்கு பொருள். றூபிக்சதுர முகிக்குப் பின் (Rubik Cube) உலகிலேயே ஆகப் பிரபலமான எண்- விளையாட்டாக உருவாகியிருப்பது சுடோக்கு ஆகும்.

### சுடோக்கு (SUDOKU)

இப்புதிரை தீர்க்கத்தொடங்கினால் அதைக் கீழே வைக்கவே மாட்டீர்கள்.

எண்கணித அறிவு எதுவும் இதற்குத் தேவையில்லை. உங்களுக்குத் தேவையானதெல்லாம் தர்க்கபூர்வமான மனமும் ஒரு பென்சிலும் ஒரு அழிறப்பரும் மட்டும்தான். முயற்சியைத் தொடங்குங்கள்.

புதிர் -19

அதனுடைய சித்திரவதையை அனுபவியுங்கள். அதுதரும் பேரின்பத்தை உணருங்கள்.

இந்தப் புதிரில் ஒருபெரிய சதுரத்துள் 3X3 அளவிலான 9 சிறிய சதுரங்கள் உள்ளன. இந்த ஒவ்வொரு சதுரங்களுக்குள்ளும் 1-9 வரையான எண்களை நிரப்ப வேண்டும். ஒருமுறை பயன்படுத்திய எண்ணை இந்தச் சதுரங்களில் மீண்டும் பயன் படுத்தக் கூடாது.

அதேபோலவே பெரிய சதுரத்து நிரைகளிலும் நிரல்களிலும் ஒரு முறை பயன்படுத்திய எண்ணை மீண்டும் பயன்படுத்தக்கூடாது.

ஒருகுறிப்பிட்ட புதிருக்கு ஒரு சரியான தீர்வு மட்டும் உள்ளது.

*(இதற்கான விடை அடுத்தவாரம்)*

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 1 | 6 | | 5 | 2 | | 8 | 3 |
| 8 | 2 | 5 | 3 | | | | | |
| | | | 8 | | 4 | 2 | 5 | 1 |
| 9 | | 8 | | 4 | 5 | | | 7 |
| | 4 | | 7 | | 8 | | 6 | |
| 5 | | | 1 | 9 | | 4 | | 8 |
| 6 | 3 | 4 | 5 | | 7 | | | |
| | | | | | 9 | 3 | 1 | 4 |
| 1 | 8 | | 4 | 2 | | 6 | 7 | 5 |

# வாழ்க்கையை வளமாக வாழுங்கள்

பே.சோபா

மனிதகுல வளர்ச்சி வரலாற்றிலே கால நீரோட்டத்தின் சுழற்சியிலே வாழ்வியலின் பல சவால்களை எதிர்நோக்குகின்றோம். மனித படைப்பில் எத்தனையோ இன்பங்கள் காணக்கிடைக்கின்றன. இந்த நிலையைக் கண்டுதான் பாரதியார் "எத்தனை கோடி இன்பம் வைத்தாய் இறைவா" என்று பாடுகிறார்.

ஆனால் நம்முடைய வாழ்க்கையில் இன்பத்தைக் காணுகின்றோமா? அல்லது துன்பம் என்ற கடலில் அலைமோதிக்கொண்டிருக்கிறோமா? ஒரு தேசத்தில் ஆடிப்பாடிக் கூடிவாழ்ந்த வாழ்க்கை முறைபோய் சுயநலமும் பொறாமையும், சூதுவாதும் இயந்திர வாழ்வுமாய் எம் வாழ்க்கை முறை மாறிவிட்டதால் இயற்கை வாழ்வியலை எடுத்தெறிந்து செயற்கை வாழ்வுக்குள் சுகம்காண முற்பட்டு இன்றைய வாழ்வியலில் முகவரி இழந்த மனிதர்களாக மட்டுமல்ல முகமிழந்த மனிதர்களாகவும் மாறி நிற்கின்றமை வேதனைக்குரியதே.

இன்று நவநாகரிக யுகத்தின் எல்லையைத் தொட மனிதன் போட்டி போட்டுக்கொண்டு விரைகின்றான். இதனால் அறிவியல், கலை,கலாச்சாரம், பண்பாடு என பலவற்றில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. இவை வரவேற்கக்கூடிய ஒன்றுதான் எனினும் முன்னேற்றப் படிகளை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் மனிதன் அதே போர்வையில் அருவருக்கத்தக்கவற்றையும் அருங்கலமெனப் போற்றுகின்ற நிலையே பெருகி வருகின்றது. வந்ததை வரவேற்பது நலந்தானெனிலும் வந்ததே வாழ்வென்று இருந்துவிடக்கூடாதல்லவா?காலம் மாறிவிட்டது. வாழ்க்கையும் மாறிவிட்டது. மனமும் மாறிவிட்டது. தெரிவுகளும் மாறிவிட்டன.

ஆனால் இம்மாற்றங்கள் இயல்பான மாற்றமாக வளர்ச்சிக்குரிய மாற்றமென்றால் பரவாயில்லை. அது வரவேற்கக்கூடியதும் கூட. ஆனால் இவை நிர்ப்பந்தங்களால்,வலிந்த காரணங்களால் நிகழும் போக்காகவும்,போட்டி உலகம் பொறிக்குள் விழுந்துவிட்ட மனச்சிதைவாகவும் காணப்படுகின்றமை வேதனைக்குரியதே!

நம்முடைய வாழ்வு பிறருக்கு எடுத்துக்காட்டாக இருக்க வேண்டுமே தவிர நம்மை நாமே அழித்துக்கொள்ளக்கூடிய வாழ்வாக அமைந்துவிடக்கூடாது. நம்மைநாமே அழித்துக் கொள்ளவா? உலகில் பிறந்தோம்? வாழ்க்கை என்பது அபாயகரமான கடல்யாத்திரை போன்றது. அக்கடல் யாத்திரையில் சில சமயம் புயல் வீசத்தான் செய்யும். அப்படி வீசும் புயலைக்கண்டு கடல் யாத்திரை செய்வதே கடினம் என்று கூறிச் செயலைச் செய்யாமல் இருப்பது மடமையல்லவா?

வாழ்க்கை வாழ்வதற்காகவே, வாழ்வதற்காகத்தான் மனிதன் பிறந்திருக்கின்றானே ஒழிய, துன்பம் வருமென்று அஞ்சி செத்துவிடுவதற்காக அல்ல! பிறக்கும் பொழுது அழுது கொண்டு வந்தோம் போகும் போதாவது சிரித்துக்கொண்டு செல்லும்படி வாழவேண்டாமா? வாழ்வில் இன்பம் தருவது முயற்சி. முயற்சியில் உறுதியுள்ளவனிற்கு வெற்றி நிச்சயம் என்பதை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும்.

ஓடி அலையும் மனதை ஒருமுகப்படுத்தி செயற்படும் பொழுது வெற்றி என்னும் தேவதை நம்மைத்தேடி வருவாள்!"வெற்றி பெறுவோம்" என்ற உறுதி நம்மிடம் இருந்துவிட்டால் நிச்சயம் வெற்றி பெற்றே தீருவோம். மனதில் உறுதியான முடிவுடன் இருப்பவன் தனக்கேற்ற முறையில் உலகையே அமைத்துக்கொள்கின்றான். இதுவே உண்மை.

ஏனெனில் "பல ஆண்டுகளைவிட சில நிமிடங்கள்தான் மிக முக்கியமானவை" நாம் அலட்சியமாக நினைக்கும் சில நிமிடங்கள் எம் வாழ்க்கையையே நிலைமாற்றி விடக்கூடியவை என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. "உனக்கு வாழ ஆசையா?அப்படியானால் காலத்தை வீணாக்காதே! ஏனெனில் வாழ்வென்பதே காலத்தால் ஆனது தான்" என்று ஓர் அறிஞர் குறிப்பிடுகிறார். இதிலிருந்து விளங்கிக்கொள்ள முடிகின்றதல்லவா?

"மது இல்லாமலே வெறி கொள்வது வாலிபம்" என்கிறார்கள். எண்ணங்கள் பசுமையாக இருக்கும் இளமையிலே புயலிலே சிக்கிய தோனியைப் போல் இல்லாமல் கற்பாறை போன்ற உறுதியுடன் இருக்கவேண்டும். "குளத்தைத் தேடி தவளைகளும் தடாகத்தைத் தேடி அன்னப் பட்சிகளும் எப்படித் தாமாக வருகின்றனவோ! அது போல் நற்செயல்கள் தாமாகவே மலர வேண்டும். "உலகில் மாளிகையில் வாழ்ந்தவர்கள் சாதித்ததைவிட மண்குடிசையில் வாழ்ந்தவர்கள் சாதித்தவை தான் அதிகம்" என்பது நாம் அறிந்திருக்கவேண்டிய ஒன்று! நெருஞ்சி முள்ளை லேசாகத் தொட்டால் கையில் குத்திவிடும். அழுத்திப்பிடித்தால் நொருங்கிப்போகும். எதையும் எதிர்த்துப்போராடப் போராடத்தான் வலிமை பிறக்கும். நாம் நல்லவர்களாக, முயற்சியில் உறுதியுள்ளவர்களாக இருந்தால் நிச்சயம் வாழ்க்கையில் உயரலாம்.

எனவே பரந்து கிடக்கும் உலகில் நம்முடைய ஆற்றலைப் பயன்படுத்தி உழைத்து வாழ்க்கையில் வெற்றிமாலை சூட வேண்டும். நாம் செய்பவை எல்லாம் நல்லவையாக இருப்பின் எல்லோருமே நமக்கு ஒத்துழைப்பர். எனவே இவ்வாறான நற்செயல்களினூடாக அழிந்து கொண்டிருக்கும் எமது அடையாளங்களை பாதுகாத்து, அழுத்திப் பொறித்து வாழ்க்கையை வளமாக வாழ்வோம்.

(18 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குழந்தைகள் விடயத்தில் மிகமிக அவதானத்துடனும் செயற்படவேண்டியவர்களாகவுள்ளோம்.

தமிழீழத்தில் மேற்குறிப்பிட்ட தவறுகள் நடந்துவிடாது பாதுகாத்தலும் கலையைப் பேணுதலும் நமது எல்லோரினதும் கடப்பாடாகும். ஆக அரங்கேற்றம் என்பதைக் சரியாகப் புரிந்துகொண்டு கலையையும் கலைஞரையும் வளர்த்தெடுப்பது மிக மிக வேண்டியதொன்றாகும். அற்புதக் கலைஞனாய் ஆழ்ந்த இரசிகனாய் எமக்கெல்லாம் வழிகாட்டியாய் திகழ்கின்ற எமது தலைவரை நாம் பெற்றுள்ளோம். எமது தமிழீழத்தில் கலைஞர்களை நல்ல முறையில் வளர்த்தெடுப்பதற்கும் பேணிப் பாதுகாத்து வளர்ப்பதற்காகவுமே கலைபண்பாட்டுக் கழகத்தையும் தமிழீழ நுண்கலைப் பிரிவையும் உருவாக்கி நெறிப்படுத்தி வருகிறார். எமது தேசியத்தலைவர் அவர்கள். அவரின் எண்ணங்களிற்கேற்ப கலைஞர்களை வளர்த்தெடுத்து தேர்ச்சியுடையவர்களாக்கி அரங்கேற்றம் எனும் சொல்லின் ஆழத்தைப் புரிந்துகொண்டு அரங்கேற்றி கலைகளை மேன்மையுடைவையாக்க அனைவரும் முன்வரவேண்டும்.கலை தமிழீழத்தை மலரச்செய்ய வேண்டும். கரங்களை இணைப்போம் கலைகளை வளர்ப்போம்.


## சமூக அரங்க கற்கை நெறிகளுக்கான நிறுவனம் நடாத்தும் சமூக அரங்க கற்கை நெறி

* ஒருவருட கால தராதரப் பத்திரக் கற்கை நெறிக்காக 18 வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் இரு பாலாரிடம் இருந்தும் விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.
* இதில் ஈடுபடும் மாணவர்கள் சமூக மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய பக்குவம், திறன் உள்ளோர்களாக வளர்த்தெடுக்கப்படுவர்.


**கற்கை முறை:-**
* விரிவுரைகள், குழுக்கலந்துரையாடல்கள், வெளிக்களநிலை, அரங்கச் செயல்திட்டங்கள்

**உள்ளகக்கற்கை நெறி:-**
* வாரந்தோறும் சனி மாலை தொடக்கம் ஞாயிறு மாலை வரை. (தேவை ஏற்படின் தங்குமிட வசதி ஏற்பாடு செய்து தரப்படும்)

**வெளிக்கள அரங்கச் செயல்திட்டம்.**
* வாரத்தில் மூன்று நாட்கள் மாலை நேரத்தில் (சொந்த ஊருக்கு அண்மையில்)
* பல்கலைக்கழக வளவாளர்கள், மற்றும் துறைசார் நிபுணர்கள் தொடர்புடன் இக்கற்கை நெறி வழிப்படுத்தப்படும்.
* யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சையில் நாடகமும், அரங்கியலும் பாடத்தில் தோற்றுவதற்கான தயார்ப் படுத்தலாகவும் இது அமையும்.
* கற்கைக் காலங்களில் கள நிலை அரங்கச் செயல்திட்டத்தை பூர்த்தி செய்யும் பொருட்டு அதற்கான வசதிகளும் கணிசமான கொடுப்பனவும் வழங்கப்படும்.
* கற்கை நெறியை நிறைவு செய்யும்போது பெறுமதி மிக்க சான்றிதழ் வழங்கப்படுவதுடன், வேலை வாய்ப்பும் வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவுத்திகதி :- 15.02.2006.
விண்ணப்பப் படிவம் கிடைக்கும் இடம் :- அறிவமுது பொத்தகசாலைகள்.
விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி :- சமூக அரங்க கற்கை நெறிக்கான நிறுவனம், யாழ்.சாலை, கிளிநொச்சி.

(சி.13862)


எம் அன்பிற்கினிய வாசக நெஞ்சங்களுக்கு....

## மூடுபனிக்குள் ஒரு தேடல்

உங்கள் மனதுக்கினிய வெள்ளிநாதம் இதழில் கடந்த 83 வாரங்களுக்கு மேலாக தொடராக வெளிவந்த உளவியல் தொடரான

## மூடுபனிக்குள் ஒரு தேடல்


மிக அண்மையில் நூலுருவில் வெளிவரவிருக்கிறது. சிறுவர் உளவியல் தொடர்பாக மிகப் பயனுள்ள நூலாக போற்றப்படும் இந்நூல் அனைத்து வீடுகளிலும் இருக்கவேண்டிய ஒரு நூலாகும்.

மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பிரதிகள் வெளியிடப்படவிருப்பதால் உங்கள் பிரதிகளுக்கு முந்திக்கொள்ளுங்கள்.

பதிவுகளுக்கு: அன்னை இல்லம், 87, கனகாம்பிகைக்குளம், கிளிநொச்சி.

உத்தேசவிலை:300/=

# பாவலன் பதில்கள்



**பாவலன் பதில்கள்** என்ற வாசகர்களின் கேள்விகளுக்கான எங்களின் பதில்களை உங்களுக்குத்தரும் நோக்குடன் இந்தப்பகுதிஆரம்பிக்கப்பட்டுள்ளது. இத்தற்கான கேள்விகளை கீழ் காணும் முகவரிக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

*பாவலன் பதில்கள்,*
*வெள்ளிநாதம்,*
*யாழ்சாலை,கிளிநொச்சி.*

*பாவலா!*

*சிங்களக் கூலிப் படையும் அந்நிய ஆக்கிரமிப்புப் படையும் ஒட்டுப்படையும் தமிழ் மக்களை அழிப்பதைப் பற்றி நீர் என்ன நினைக்கின்றீர்?*

*இரா.யோகேஸ்,*
*புளியங்குளம்.*

தங்களின் முழுமையான அழிவுக்கு வழி சமைக்கின்றார்கள் என்று நினைக்கின்றேன்.

*பாவலா!*

*தற்போது இராணுவம் பொதுமக்கள், இளைஞர், யுவதிகள், பல்கலைக்கழக மாணவர்கள் மீது அடிதடித் தாக்குதல் கைது என்பனவற்றைத் தடுக்க என்ன செய்வது?*

*மு.கடலவன்,*
*வருவாய்ப்பகுதி.*

வன்முறைக்கு வன்முறைதான் பதிலல்ல, ஆனால் அரச பயங்கரவாத ஒடுக்குமுறைகளுக்கும் அதே வழியில் பதில் சொல்வதைத் தவிர வேறு வழியுமில்லை.

*பாவலா!*

*தற்போது தெற்குப் பகுதியில் கைது நடவடிக்கை பற்றிய உமது கருத்து என்ன?*

*கடலவன்,*
*பளை.*

தமிழர்களை கைது செய்யலாம், ஆனால் தமிழ் உணர்வையும், தமிழ்த் தேசிய உணர்வையும் எவரும் கைது செய்து சிறையில் அடைத்து விடமுடியாது.

*பாவலா!*

*முன்னைய இராணுவத் தளபதியான ரத்வத்தை அவர்கள் புலிகள் நரிகள் என்றும் அவர்களை நாம் நேரடியான தாக்குதலில் வெல்ல முடியாது என பத்திரிகைக்குக் கூறினார். ஆனால் தற்போதைய தளபதி புலிகளை இலகுவில் வெல்வோம் எனச்சொல்கிறார் இதுபற்றி நீர் என்ன நினைக்கிறீர்?*

*கடலவன்,*
*வருவாய்ப்பகுதி,*
*பளை.*

தற்போதைய தளபதிகள் ரத்வத்தையை முட்டாள் என்று நினைக்கிறார்கள்.

*பாவலா!*

*தற்போது இளைஞர்கள் சீனிமாத் திரைப்படத்தைப் பார்த்து விட்டுத் தமது செயற்பாட்டை அதே பாணியில் செய்கிறார் கள் இது பற்றி உமது கருத்து யாது?*

*மு.றஜீற்,*
*பளை.*

சினிமா கலாச்சாரத்தால் தமிழ் கலாச்சாரத்தை சீரழிக்கின்றார்கள் என்று நினைக்கின்றேன்.

*பாவலா!*

*வாழ்க்கை திருமணத்திற்கு முன்பா அல்ல பின்பா சந்தோசமாக இருக்கும்?*

*றஜீற்,*
*பளை.*

திருமணத்திற்கு முன் கட்டுப்பாடற்ற சுதந்திரம் திருமணத்திற்கு பின் வரையறுக்கப்பட்ட சுதந்திரம் அவ்வளவுதான்.

*பாவலா!*

*பொய்யையும், பொறாமையையும், வஞ்சனையையும், சூதையும், ஆணவத்தையும், அதிகாரத்தையும், ஊழலின் வேசத்தையும் மேன்மையாகக் கருதுபவர்களைப் பற்றி!*

*க.நாகேந்திரன்,*
*ஆயப்பகுதி,மடு.*

அவர்கள் சகுனி வம்சத்தவர்கள்...

*பாவலா!*

*தற்போது பனிக்காலம் நீர் எப்படி பணிக்குச் செல்கிறீர்?*

*மு.றஜீம்,*
*பளை*

பனி என்றால் என்ன பணிக்குப் பணிந்து போகத்தானே வேண்டும்.

*பாவலா!*

*சிறிலங்காவின் அரசியல் சின்னாபின்னமாகுமா? சிறந்த ஒரு முடிவு வருமா?*

*எஸ்.ஜெயா,*
*கிளிநொச்சி.*

சிறிலங்காவின் பேரினவாதம் சிறிலங்காவின் அரசியல் வாதிகளை பாரிசவாதத்திற்குள்ளாக்கியுள்ளது எனவே அது ஆரோக்கியமானதாகச் செயற்படாது.

*பாவலா!*

*தற்போ்து நடைபெற்று வரும் கிரிக்கெட் போட்டியில் தென்னாபிரிக்கா அவுஸ்திரேலிய அணிகள் இலங்கை அணியிடம் மண் கௌவியது இதனைப் பற்றிய உமது கருத்து யாது?*

*மு.றஜீற்,*
*பளை.*

மிளகுமட்டுமல்ல, மிளகாயும் காரம் என்பதை காட்டுகிறது.

*பாவலா!*

*மகிந்தவின் மழுப் பலுக்குக் காரணம்?*

*செ.ரூபி,*
*கனகபுரம்.*

*பேரினவாத சாக் கடையில் ஊறிய புத்திதான் காரணம்.*

*பாவலா!*

*காதலுக்காக நட்பைக் கசக்கும் நண்பர்கள் பற்றி?*

*சர்மிளா,*
*கிளிநொச்சி.*

காதலுக்கு முடியை துறந்த எட்டாம் எட்வேட் மன்னர் பரம்பரையைச் சேர்ந்தவர்கள்

*பாவலா!*

*பேச்சுவார்த்தை வெற்றியாக முடிந்தால் யாழ்ப்பாணத்தில் உள்ள தேசத்துரோகிகள் ஈ.பி.டி.பியின் நிலை என்னவாகும்?*

*செ.மாலினி,*
*ஆயப்பகுதி,*
*புளியங்குளம்.*

தற்காலிகமாக ஒட்டுப்படைகளாக இருப்பவர்கள் நிரந்தரமாகவே ஒட்டுப்பட்ட படைகளாக மாறுவதைத்தவிர வேறுவழியில்லை.

*பாவலா!*

*யாழ்ப்பாணத்தில் புதிதாக முளைத்த முகமூடி அணிந்த இராணுவம் பற்றி உமது அபிப்பிராயம் என்ன?*

*க.ஜெயரூபி,*
*ஆயப்பகுதி,*
*புளியங்குளம்.*

அவர்களில் பெரும்பாலானோர் முன்னைய முகமூடி அணிந்த தலையாட்டிகள் தான்.

*பாவலா!*

*மற்றவர்களின் மனதை புண்படுத்துபவர்கள் பற்றி தங்களின் கருத்து என்ன?*

*மு.அனோஜா,*
*புளியங்குளம்.*

மற்றவர்களின் மனதை புண்படுத்துபவர்கள் தங்களின் மனதை பண்படுத்தாதவர்கள் மட்டுமே...

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –157



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப் பரிசு வழங்கப்படும்.

## படத்திற்கு மெருகூட்டுங்கள்–157

.................................................................
.................................................................
.................................................................
.................................................................

பெயர் : ..............................................
முகவரி : ..............................................
..............................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –156



ம.அருள்யோண்சன்,
நடுவப்பணியகம்,
தமிழீழப்போக்குவரவுக்கழகம்.

### பரிசுக்குரிய வரிகள்

பாசக்கரம் கொண்ட பிஞ்சு "செயல்" வெல்லும்–நாளை
குஞ்சு இந்த குருத்து வளர்ந்து எமை வளர்க்கும்–அஞ்சிடா
பிஞ்சு இவன் துள்ளியே எதையும் செய்வான் எமக்காய்–காலம்
தனக்காய் மிளிர உயர்ந்து நடப்பான் நேரான பாதையில்...

### பாராட்டுக்குரிய வரிகள்

*சாரதிகளே வாகனங்களை ஓட்டி*
*விபத்துக்குள்ளாக்கி விடும் போது*
*பச்சிளம் குழந்தை அவர்களுக்கு வாகனம்*
*ஓட்டக் கற்றுக்கொடுக்கப் போகிறதா?*

க.நாகேந்திரன்,
மன்னார்,

*தம்பியே உருவெடுக்க முன்னே*
*உழைக்க நினைக்கிறாயே கொஞ்சம்*
*பொறடா எம் தலைவன் வழியில்*
*தமிழீழம் கனியும் காலம் வருமடா கொஞ்சம் பொறடா.*

ப.எழில்சுடர்,

*சின்னவன் நான் என்று எண்ணிவிடாதீர்கள்*
*என்னுள்ளும் இலட்சியம் இருக்கிறது*
*அப்பா ஓட்டும் உழவு இயந்திரத்தை நானும் ஓட்டி*
*இடம் பெயர்ந்த மக்களை நானும் ஏற்றிவருவேனே?*

வே.அகமொழி,
வட்டக்கச்சி.

*வீரத்தின் விளைநிலம் மீதினில்*
*சக்கை வண்டி ஓடும் கரும்புலி மாமாக்கள் போல்*
*ஓர்மமாய் ஒத்திகை செய்யும் குழந்தாய்!*
*இலக்கு மாறாத பயணம் உன்னது.*

திருமதி.ரா.சுஜந்தன்,
பரவிப்பாஞ்சான்.


இப்போட்டிக்கான பரிசினை வழங்குவோர்




அருச்சுனா
புகைப்படக்கலையகம்
கிளிநொச்சி புதுக்குடியிருப்பு






வெலிக்கந்தையில் கடந்த திங்களன்று இராணுவமும் அதனோடு இயங்கும் ஒட்டுக்குழுவினரால் கடத்தப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக பணியாளர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென கிளிநொச்சியில் வைத்து போர்நிறுத்த கண்காணிப்புக்குழு அதிகாரியிடம் மகஜர் கையளிப்பதையும் கலந்து கொண்டோரையும் படங்களில் காணலாம்.





விசுவமடு மயில்வாகனபுரத்தில் வசிக்கும் மா.ராசேஸ்வரி என்பவரை பெற்றோர் காலத்தின் தேவை கருதி விடுதலைப் போராட்டத்தில் இணைத்துள்ளார்கள். தமது மகளை ஒப்படைக்கும் போதும் ராசேஸ்வரி சகோதரியுடனும் படங்களில்..





மாலதி படையணி பங்கு பற்றிய பல்வேறு தாக்குதலில் தைமாதம் வீரச்சாவைத் தழுவிய 84 மாவீரர்களின் நினைவு நிகழ்வு நடைபெற்றுள்ளது. 2 ஆம் லெப் மாலதி படையணியின் போர்ப் பயிற்சிக்கல்லூரியின் லெப்.கேணல் மதி மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில்

தேசியக்கொடியினை போர்ப்பயிற்சி ஆசிரியர் தமிழ்புயல் ஏற்றுவதையும் மாலதி படையணி மாவீரர் மண்டப பொறுப்பாளர் நாமகள் சுடர் ஏற்றுவதையும் காணலாம்.







இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2006ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 03 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.